சந்தனம் மணக்கும் செந்தமிழ்த்தேனை
சந்தத்துடன்...
சமர்ப்பிக்கும்...




# ஷத்ரூபி சங்கநாதம்

## 2011

தமிழ் இலக்கிய மன்றம்
கண்டி - பெண்கள் உயர்தர பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் இனத்திற்கு பெருமை...



இனியது கேட்கின் தனி நெடுவேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது...
அதனினும் இனிது ஆதியைத்தொழுதல்
அதினினும் இனிது அறிவினர்ச்சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலும்
காண்பது தானே...



ஔவைப் பிராட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை

## தமிழ் இலக்கிய மன்றம்

## இனிதே சமர்ப்பிக்கும்

# 'ஷத்ருபி சங்கநாதம்'

பிரதம அதிதி

**கலாநிதி அருளம்பலம் அற்புதராஜா**

(தலைவர் - இலத்திரனியல் மற்றும் மின்னியல் பொறியியற் துறை)
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**வைத்திய கலாநிதி ரேவதி அற்புதராஜா**

(போதனா வைத்தியசாலை - கண்டி)

திகதி : 03.07.2011

நேரம் : மாலை 3 மணி

இடம் : கொன்ஸ்டன்ஸ் மெலட் மண்டபம்
(பிரதான மண்டபம்)

தேன் தமிழ் மாந்தி
இங்கு தேவர் தம் மகிழ்வு உற்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ்த் தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வராரும் வதனமெனத் தகழ் பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலகவாசனை போல அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளந்துளுவும்
உன்னுதிரத்துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம்வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழமொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அளந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

மகாகவி
சுப்ரமணிய பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

நாற்பதாண்டு கழிய எமது
இளமையின் எழிலுருத்தோன்றிடுமே
சோகம் மறைந்து சிரிப்பொலி எங்கும்
எதிரொலிப்பதைக்கேட்டு மகிழ்ந்திடுவோம்
பள்ளிவாழ்க்கைக் கூடாகச் சென்று
திரும்பவும் இளமையில் வாழ்ந்திடுவோம்
முதுமையிலும் எமதிளமையின் காட்சி
வித்யா பேரிகை கொட்டிடுமே

ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம்
கையில் நூலும் கோலும் எடுப்போம்
நல்முயற்சிக்குப் பின் ஓய்ந்திருப்போம்
ஏகுவோம்.....ம், ஏகுவோம்.....ம்,

நாற்பதாண்டு குழுமிய நாமும்
நால்வேறு திக்கில் சென்றிடுவோம்
மறந்தும் மனதில் நினைத்திடும் போது
இளமையின் பல்வேறு காட்சிகளாம்
மனக்கண் முன் சிலவேளை காட்டி மறைப்பதும்
காற்றில் மிதந்த கீதமன்றோ
கன்னிப் பருவத்தின் தோற்றம் எம்முன்
கனவாய் என்றும் நிலைத்திடுமே

ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம், ஏகுவோம்
கையில் நூலும் கோலும் எடுப்போம்
நல்முயற்சிக்குப் பின் ஓய்ந்திருப்போம்
ஏகுவோம்.....ம், ஏகுவோம்.....ம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் வாழ்த்துச்செய்தி



எழில்மிகு கண்டி மாநகரில் முதல்நிலைப் பாடசாலையில் நடைபெறும் இவ்வினிய கலைவிழாவில், தமிழ் மலர்ந்து நெடிதுயர நிற்க நாம் உழைப்போம் எனத் துடித்தெழும் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளின் ஆர்வத்திற்குத் தலை வணங்கி வாழ்த்துரைப்பதில் நான் மட்டற்ற மகிழ்வுறுகிறேன்.

சிங்களத்தின் ஓசையும் செந்தமிழின் ஓசையும் மங்களத்தின் ஓசையாய் மலருகின்ற இப்பாடசாலையின் 132 வருட பெருமை நாடறிந்தது... நானும் அறிவேன். பேராதனைப் பொறியியற் பீடத்திலே எனது ஆசிரியப் பணியில் அவர்களின் பலரின் ஆற்றலைக்கண்டு நான் வியந்திருக்கின்றேன்.

"ஷத்ருபி" சங்கநாத மலரில் ஆக்கங்களை யாத்து, மனமகிழ கலையுரைக்க விழாவெடுக்கும் முயற்சி விருப்புக்கும் பெருமைக்கும் வாழ்த்துக்குமுரியது.

பல அறிஞர்கள் உவகையோடு தமிழை "அன்புத்தமிழ்", "அழகுதமிழ்", "பைந்தமிழ்", "செந்தமிழ்" எனச் சிறப்போடு செப்பினர். 21ம் நூற்றாண்டின் விஞ்ஞானத் தகவல் யுகத்திலே எம்தமிழ் "அறிவுத்தமிழாயும்" ஜொலிக்க இளவல்கள் உங்களின் கரங்கள் அடிப்படையானவை... அத்தியாவசியமானவை. மகாகவி பாரதி நயத்தது போல "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்... கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்...." கலைச்செல்வப் புதையல் தேடும் உமது தேடல் ஷத்ருபியில் சிலிர்த்து உங்கள் கலைவிழாவில் நகைத்து, எல்லை வரை சிறக்க என் மனமார்ந்த ஆசிகளும் பாராட்டுகளும்......

தலைசிறந்த விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டைன் கூறியது போல அறிவுதான் இறுதித்தேடல். இத்தேடல் உங்களில் ஊற்றெடுத்து உங்களையும் தமிழன்னையையும் முடிவிலி நீளப் பல்லாண்டுகளுக்கு ஆகர்ஷிக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி அ. அற்புதராசா
தலைவர், மின்னியல் இலத்திரனியல் பொறியியல் திணைக்களம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from our Dearest Principal...

I have great pleasure in releasing this message of felicitation to mark the annual event "Kalaivizha" which has become a much looked forward event in the calender of Girls' High School, Kandy. Every year we have a new group of students who perform their cultural items with perfection and excellence in bringing out their talents.

It is really interesting to note our multilingual students with multi cultural backgrounds present each item representing unity in diversity. I appreciate the work done by the Tamil Assistant Principal (Tamil Medium), Sectional Head (Tamil Medium), Teachers, Members of the Tamil Literary Association, Students and parents for their co-operation and dedication in achieving their goal.

***I wish them success.***

Mrs. Malkanthi Abeygunasekara
Principal
Girls' High School,
Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பிரிவு அதிபரின் அன்புமிகு வாழ்த்துச் செய்தி

'உலக சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து
நேர்மை, விசுவாசம், ஒழுக்கம் என்பவற்றைப் பேணி
வீட்டையும் சமூகத்தையும் ஏனையோரையும்
சுட்டியெழுப்பக்கூடிய அனுபவமிகு யுவதிகளை உருவாக்குவோம்''

மேற்கண்ட எமது கல்லூரியின் நோக்கக் கூற்றினை சிறபேற்றால் பெண்கள் உயர்தர பாடசாலை மாணவர் தமது ஆற்றல்களை மிகவும் கௌரவமாக வெளிப்படுத்தும் மாலைவேளை இது. இம்மாலை வேளைக்கு சங்கநாத நூல் வெளியீடும் ஷத்ருபி கலைவிழாவும் அழகு செய்க்கின்றன. இந்நிகழ்விற்கு வாழ்த்துச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மகான்களின் நாவன்மையால் பொதுமக்கள் நல்வழிப்பட்டமை பேனாமுனை சரித்திரமாய் படைத்திருக்கின்றது. நாடகங்கள் மஹாத்மா உருவாக காரணமாயிருந்திருக்கின்றது. இசையானது அ∴றினைப் பொருட்களைக்கூட வசமாக்கி விடுகின்றது. நன்றாக பேசியவர் பாராட்டபடுவதுடன் அவரைச்சுற்றி ஒரு கூட்டம் வளைந்து வருகின்றது. எனவே முத்தமிழால் உயர்வுபெற்றார் பற்றி நாளாந்தம் நாம் கேட்கின்றோம், காண்கின்றோம். இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் மனித பண்புகளை ஒழுங்கு செய்கின்றன. இதன் முழுபயனையும் முறையாகத் தருவதிலும் அதனைப் பெறுவதிலும் வருடாவருடம் எம் கல்லூரிக் கலைவிழா முதன்மை பெறுகிறது. மனதுக்கினிய பாடல்களும் ஆடல்களும் அறிவான ஆக்கங்களும் இப்பாடசாலையின் தமிழ்ப்பிரிவு மாணவரது தனித்துவமான படைப்புக்களும் தமிழ் பண்பாட்டுக்குள் நின்று கலையை தாமும் பயின்று எதிர்வரும் இளையவர்க்கம் பயிற்றுவித்துச் செல்லும் பாரம்பரியத்தை எமது கல்லூரிக் கலைவிழா ஒரு பணியாகக் கொண்டு செயல்படுகிறது.

காத்திரமான படைப்புகளை தன்னகத்தே உள்வாங்கி மூத்தவரின் நல்லாசிகளுடன் வெளிவரும் 20வது ஷத்ருபி சங்கநாத நூல் இம்முறை பெண்களின் பெருமையை கருத்தில் கொள்வதைக் காணலாம். மேலும் மாணவருக்கு பயனுறு நூலாவதுடன் பாடசாலையின் ஒரு ஆவணமாகும். இவ்வருடம் இக்கலை விழாவினை ஒழுங்குபடுத்தும் 2010/2012 வருட மாணவர் க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் பாடசாலை வரலாற்றில் தரம் பதித்தனர் பரீட்சைக்கு முகம் கொடுத்த அனைவரும் விஞ்ஞானத் துறைக்கு செல்லக்கூடிய வகையில் உயர் பெறுபேற்றுச் சித்திகளைப் பெற்றுத்தந்தனர். எல்லாப் பாடங்களிலும் நூற்றுவீதம் பெறுபேற்றைப் பெற்றுத் தந்தவர்கள் இவர்கள். சகல துறைகளிலும் ஈடுபாட்டுடன் இயங்கும் இம் மாணவர்கள் தம்மை தம்மோடிணைந்த இளைய சகோதரகளையும் ஆற்றல்கள் தரணியில் தரம் பெற்றோங்க மனதார வாழ்த்துகின்றேன்.

பெண்கள் உயர்தர பாடசாலையில் வருடாவருடம் நடைபெறும் இக்கலைவிழா ஒரு கூட்டு முயற்சி இதன் வெற்றிக்கு ஒத்துழைத்த நல்லிதயங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறேன்.

திருமதி. கோகிலேஸ்வரி ராம்குமார்
தமிழ்ப்பிரிவு அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதித் தலைவரின் பைந்தமிழ் வாழ்த்துச் செய்தி...

படைக்கும் பெண்ணை தன் நாவில் வைத்தாள். காக்கும் தெய்வம் பெண்ணை தன் நெஞ்சில் வைத்தான். பரம்பொருளாய் விளங்கும் தெய்வம் பரமசிவனோ தன் உடலின் பாதியில் வைத்தான். தெய்வங்களே இப்படி பெண்மையை பேணி அமைத்தது ஏன்? இத்தகைய பெருமை பெண்ணுக்கு தேவையோ என்ற கேள்வி எழலாம் விடை ஆம். எவர்காக என்று எம்மவர்கள் நினைப்பீர்கள். ஒரு மனிதனின் உயர்வுக்கு துணையாக இருப்பவள் பெண் என்பதால்தான். இறைவனே அப்படி செய்தான். உலகிற்கு உண்மை நெறிகாட்டும் பொய்யா மொழி புலவன் ஏழு சொற்களால் எழுதி வைத்தானே ஒரு சட்டம். இல்லதுஎன், இல்லவள் மாண்பானால், உள்ளதுஎன், இல்லவள் மாணாக் கடை. ஒருவனுக்கு இல்லாதது ஒன்றுமே இல்லை என்ற நிலை வரவேண்டும் என்றால் இல்லவள் நல்லவளாய் பண்பு உள்ளவளாய் அமைய வேண்டும். எனவே உலகிலே உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் பெண்கள் உத்தமியாய் பத்தினியாய் அமைய வேண்டும். அதனால்தான் நாம் வணங்கும் தெய்வங்கள் மங்கையருக்கு பேச்சு முதல் மூச்சு வரை இடங்கொடுத்து செயல் வீரர்கள் ஆகினார்கள். பெண், பொன், மண் இம்மூன்று சொற்களும் முத்தமிழின் இரண்டு எழுத்துக்களால் உருவாக்கப்பட்டவை. ஒரு மனிதனின் வாழ்விற்கு பொருளாதாரம் வேண்டும். அதை நெறிப்படி செலவு செய்ய பெண்கள் வேண்டும். மனிதன் வாழ்வதற்கு இடம் மண் வேண்டும். எனவே அரசன் முதல் ஆண்டி வரை நிலைத்து நிற்க உயர்ந்து நிற்க நிச்சயமாக பெண் வேண்டும்.

தமிழ் வளர்க்க சங்கம் அமைத்தான் அகத்தியன் அதன் பின் மூவேந்தர் இன்று சுந்தர பூமி என்று போற்றப்படும் இலங்கையில் எழில் பொங்கும் மலையகத்தின் உயர்தர பெண்கள் பாடசாலையில் நற்தமிழ் வளர்க்க நங்கையர் கூட்டம் எழுந்து நிற்கிறதே என்றால் பெண்களின் பெருமைக்கும் அயராத உழைப்பிற்கும் அசையாத நெஞ்சு உறுதிக்கும் திறமைக்கும் சங்க நாதமே சான்று பகிரும். அதனால் எங்கள் மாணவிகளின் பெருமை மலையை விட உயர்ந்து நிற்கும். வலம்புரி சங்கில் இருந்து வருகின்ற ஒலி உலகிற்கே ஒலிதரும்.

"கற்க கசடறக் கற்பவை
நிற்க அதற்கு தக"

குற்றமற்றவைகளையே மிக சுருக்கி கூறிய நீதிபதியாய் விளங்கும் வள்ளுவன் வகுத்த தீர்ப்பு இது.

இப்பாடசாலை மாணவிகளின் உள்ளத்தில் இல்லாதது இல்லை, இல்லாதது இல்லை என்றால் இருப்பது இனிமையும் இறுதிவரையும். எந்த நோக்கத்திற்காக பாடசாலைக்கு வந்தோமோ அதிலே வெற்றி. மாணவிகளிடம் அயராத உழைப்பு உண்டு. அஞ்சாத நெஞ்சம் உண்டு, அறம் காக்கும் திறம் உண்டு, பெற்றோரின் உள்ளத்தில் மங்காத மகிழ்வுண்டு, பெரியோரின் ஆசி உண்டு. சுற்றத்தார் வாழ்த்துண்டு அவர்களை வழிநடத்த ஆசிரியர் குழாம் உண்டு, அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டு. அவர்களின் ஆசியும் மாணவர்களுக்கு உண்டு. இவர்களுள் ஒருத்தியாய் நானும் விளங்குவதால் என் உளம் கனிந்த வாழ்த்தும் உண்டு. இப்பத்திரிகையின் பொறுப்பாசிரியர் என்ற முறையில் திருமதி. அல்பிரேட் மகிழ்ந்து வழங்குகின்ற கௌரவ வாழ்த்துண்டு. எனவே இத்துடன் முடிப்பது நன்று. முழங்கட்டும் சங்க நாதம், வளரட்டும் தமிழ்மானம், ஓங்கட்டும் பாடசாலையின் கீர்த்தி.

திருமதி. இரதி இளகுப்பிள்ளை
தமிழ் பிரிவு - பகுதித் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியரின் தேனினிய வாழ்த்துக்கள்...

தங்க தமிழுக்கு சங்கம் அமைத்து, தமிழ் வளர்க்கும் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் பெருவிழா இன்று அரங்கேறுகின்றது. அழகிய இதழையும் ஆர்வத்துடன் சமர்ப்பிக்கின்றார்கள் இவ் இனிய தருணத்தில் இந் நிகழ்வு அனைவரிடமும் ஆனந்தத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயம்மில்லை

இவ்வேலையில் எம்மை வழி நடாத்தும் பாடசாலையின் அதிபர், உபஅதிபர்கள், தமிழ் பிரிவு உதவி அதிபர், தமிழ் பிரிவு பகுதி தலைவர், தமிழ் இலக்கிய மன்ற உறுபினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழுக்கு அமுதென்று பெயர்
அந்த தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

வாழ்க தமிழ்!
வளர்க மன்ற பணி!

திருமதி. ரஹீமா நயீம்
தமிழ் இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இலக்கிய மன்றச் செயலாளர் வாழ்த்துக்கள்...

"கல்தோன்றி மண் தோன்றி காலத்து மூத்த தமிழ்" என்ற பெருமை எம் இனிய தமிழுக்கே உரித்தானது. இப்பெருமை மிகு மொழி அழிவில்லாது இன்றும் உலகெங்கும் மிளிர்ந்தோங்குகிறது. எனின் இதைக் கட்டிக்காத்த பண்டைய தமிழறிஞர்கள், ஆசான்கள், தமிழ் கலை ஆர்விளர்கள் மட்டுமன்றி அவர்களின் அடிபற்றி தொடர்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களின் தமிழுக்கான அர்ப்பணிப்பும் அதன் பாலான ஈர்ப்பும் காரணமாகுமென்றால் மிகையாகாது.

ஒரு மனிதனை சிறந்த ஆளுமையுடையவனாக மாற்றித் தருவது அவனது ஏட்டுக்கல்வி மாத்திரமின்றி இணைச்செயற்பாடுகளான கலை, கலாச்சார, விளையாட்டு போன்ற நிகழ்வுகளுமாகும். இவ்வகையில் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலைப் பெண் ஆளுமை மிகு மங்கையராக இச்சமூகத்துக்குப் பெற்றுக் கொடுத்து அவர்கள் எதிர்கொள்ளும் எவ்வித சவால்களும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான பயிற்சியளிப்பது எமது கல்லூரியின் தலையாய கடமையாகும். ஒவ்வொரு வருடமும் எம் கல்லூரி மாணவியர் பேராவலுடன் அரங்கேற்றும் தமிழ் இலக்கிய மன்றத்தால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளும் "சங்கநாதம்" சஞ்சிகை வெளியிடும் மாணவியருக்கு பல்வேறு பயனுள்ள அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கின்றேன். வரவேற்பு, நிகழ்ச்சித் தொகுப்பு, அழைப்பிதழ், தசான்றிதழ் தயாரிப்பு, அலங்கரிப்பு, சஞ்சிகை தயாரிப்பும் வெளியீடும், விருந்துபசாரம், படப்பிடிப்பு, போட்டி ஒழுங்கமைப்பு, கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு போன்ற பல்வேறு செயற்பாடுளினூடாக இன்னோரன்ன பல அனுபவங்களை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பெற்றுக் கொள்ள பெரும் வாய்ப்பினை இவ்விழா ஏற்படுத்தித் தருகிறது. இவர்களின் வாழ்விலும் இவ்வாறு பலங்களைப் பயன்படுத்திக் கொள்ள இது உதவுகிறது என்பதில் ஐயமில்லை.

தமிழையும் தமிழன்னையையும் மறக்காது வருடந்தோறும் அரங்கேற்றும் இந்நிகழ்வு சிறப்புற நிகழ ஒத்துழைப்பு நல்கிய கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், தமிழ்ப்பிரிவு அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும் என்றும் எமக்கு நல்லாதரவு நல்கும் பேராதனைப்பல்கலைக்கழக பேராசான்களுக்கும் போட்டி நிகழ்வுகளைச் சிறப்புற நடாத்த உதவிய ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மற்றும் சாகலவிதத்திலும் மனமுவந்து நல்கிய ஒத்துழைப்பு யாவருக்கும் எனது மனங்கனிந்த நன்றிகள்.

இச் சங்கநாத கலைவிழா மென்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவன் துணையிருக்க வேண்டுகிறேன்.

"வாழ்க தமிழ் வளர்க எம்மங்காத தமிழ்"

செல்வி. சுபத்ரா மகாலிங்கம்
செயலாளர்.
தமிழ் இலக்கிய மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் பொன்னுரை

கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தால் நடாத்தப்படும் கலைவிழாவில் தமிழ் அன்னைக்கு உயர் சமர்ப்பணம் சங்கநாதம் சஞ்சிகையின் வெளியீடாகும்.

மாணவப் பருவத்தை அனுபவிக்கும் இளம் நெஞ்சங்களில் உதித்த இனிய எண்ணங்கள் இனிய இதழாக வடிவம் பெறுவது மன மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ்விழாவை முன்னெடுத்து செல்வதன் மூலம் பல்வேறு அனுபவங்களை தாமாகவே பெற்று பொறுப்புகளை ஏற்பதால் எதிர்கால வாழ்க்கைக்கு அது அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை

மேலும் பல் இனச் சமூகங்களிடையே ஒற்றுமையும், சமத்துவமும் வளவும் பெற இது அடித்தளமாகவும் அமைகின்றது. மெண் மேலும் தமிழ் மன்றத்தின் இலக்கியப் பணியால் புகழ் வளர மனம் கனிந்து வாழ்த்துகிறேன்.

திரு. அஸ்மில் பாரூக்
பொருளாளர்
தமிழ் இலக்கிய மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவத் தலைவியின் தங்க உரை...

தமிழுண்டு தமிழ்மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழென்று தோள் தட்டி ஆடு! நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றெ நினைப்போடு!!!

தமிழ் ஒரு மொழிச்சமுத்திரம். அச்சமுத்திரத்தில் ஒரு மழை துளியாய் கலக்கும் நாள்வரை விழி வைத்து காத்திருந்தது ஷத்ரூபி சங்கநாதம் வடிவில் இன்று நனவாகின்றது.

கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சிகரங்களின் நடுவே ஒளிபரப்பி பல சவால்களைத் தாண்டி மெய்சிலிர்க்கும் வெற்றிகளுடன் 132வது வீரிய வருடத்தில் கால்பதிக்கின்றது. இவ்வினிய தருணத்தில் எமது பாடசாலையின் தமிழ்ப் பிரிவு மாணவர்கள் தமது அனைத்துத் திறமைகளையும் குவிக்கும் ஒரு இனிய விழாவே எமது தமிழ்க்கலை விழா.

எமது தமிழ் இலக்கிய மன்றம் 1992ம் ஆண்டு தித்திக்கும் தேன் தமிழால் முத்தமிழுக்கு முதல் சஞ்சிகையைச் சமர்ப்பித்து, அன்று தொடக்கம் எமது மாணவியரின் எழுத்தாக்கங்களை நூல் வடிவில் உலகிற்கு காட்டும் இம்முயற்சி வெற்றி நடை போட்டது! போடுகின்றது! இனிமேலும் சிறப்புடன் வீரநடை போடும்.

எமது இலக்கிய மன்றத்தின் இனிய முயற்சி என்றென்றும் பார் புகழ குன்றின் மேல் விளக்காய் இன்பத்தமிழின் புகழ் பரப்ப உளமார வாழ்த்துகின்றேன்.

"சங்க நாதமே தமிழுக்காய் செய்யும் பணி
என்றென்றும் வாழியவே!!!
வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்!!!

கங்கைப் போல் காவிரிப் போல் கருத்துள்ள
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்!!!

வெங்குருதி தன்னீர் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற
தமிழ் எங்கள் மூச்சாம்!!!"

தர்ஷினி செல்வநாயகம்
மாணவத் தலைவி
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவச் செயலாளர் செப்புகின்றார்...

கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வருடந்தோறும் விழாக் கோலம் பூண்டு வரும் சங்கநாதத்தில் தெள்ளு தமிழின் தெவிட்டாச் சுவை கண்ட எம் மாணவர்களின் அனைத்துத் திறமைகளையும் எம்மைப் படைத்த இறைவனுக்கும் பாடசாலை மாதாவிற்கும் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

"வெந்தழலும் நீராகும்: வெள்ளெலும்பும் பெண்ணாகும்
வந்த மத வேழம் வணங்கிடுமே ! - சந்தமெழப்
பாடுவார உள்ளுருகிப் பாடும் தமிழிசை
நீடுலகி லூாண்டோ நிகர்......

பத்து மாதம் கருவில் சுமந்து எம்மை ஈன்ற தாய் தன் தாய்ப்பாலோடு நமக்களித்த மொழி தமிழ் மொழி. அம் மொழியை தாய் மொழியாகக் கொண்டதற்கு பெருமையடைய வேண்டும் என்றும் குன்றா இளமையைக் கொண்ட இன்தமிழின் சிறப்பை ஷத்ரூபி சங்கநாத இதழினூடாக உங்கள் கரங்களில் உங்கள் கரங்களில் அடைவதே எம் மன்றத்தின் மாபெரும் வெற்றியாகும்.

"எந்நன்றி கொன்றார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இவ்விழாவை இனிதே நடத்த உதவிய தமிழ்ப் பிரிவு அதிபர், பகுதித் தலைவர், தமிழ் தமிழ் இலக்கிய மன்றத்தலைவர் அங்கத்தவர்கள் இதழாசிரியர், ஆசிரியர் குழாம், அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் இதயப்பூர்வமான நன்றிகள்!!!

எங்கும் தமிழென்று சங்கே முழங்கு!! என்று வாழ்த்துகிறேன்.

ஸ்ரீ கௌசல்யா ஸ்ரீதர்,
மாணவச் செயலாளர்.
தமிழ் இலக்கிய மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவப் பொருளாளர் உள்ளத்திலிருந்த...

எத்தகைய கலை இலக்கிய விடயமாயினும் அதற்கு அடிநாதமாய் அமைவது இலக்கிய ஆர்வம். இக்கருதுகோளுக்கு உங்கள் கரங்களில் தவழும் இச்சாதனை மலர் மட்டும் விதிவிலக்கன்று. எமக்குத் உறுதுணையாக அமைந்த அனுசரனையாளர் யாவருக்கும் எம் உள்ளம்கனிந்த நன்றிகள்.

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்"

என்ற பாரதியின் அமுத வாக்கிற்கு அமைய அன்பு உள்ளங்களின் ஆதரவு கிடைத்தது.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

எனும் பொய்யாமொழிக்கமைய பொருளாதார ரீதியாக, தார்மீக ரீதியாக எமக்கு உதவிகள் புரிந்து, அதன் மூலம் இம்மலரை வெளியிட ஊக்கமளித்த அனைவரும் நன்றிக்குரியவர்கள்.

பேரறிஞர்களும் பெரும் புலவர்கள் பலரும் படைத்தளித்துச் சூட்டிய எத்தனையோ அழகு மிகு ஆரங்களைப் பூண்ட அழகுடையவள் தமிழ் அன்னை. எமது இச்சிறு முயற்சியும் எம் தமிழ் நங்கைக்கு இன்னுமொரு காணிக்கையாகட்டும்.

"கலை நங்கை இதழ் புன்னகைக்கே
விலை ஏது தலை தாழ்த்தி வணங்குகிறோம்"

யசோகீர்த்தனா மும்மூர்த்தி
மாணவப் பொருளாளர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

132ம் வெற்றி வருடத்தில் தடம் பதிக்கும் கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையின் வீர மங்கையர் நாம். இயல், இசை, நாடகம் என முத்தமிழ் மணம் பரப்ப இன்று நாம் சங்கநாதம் கலைவிழாவை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

ஹத்ரூபி மங்கை இவள் பிரம்ம தேவனால் படைக்கப்பட்ட ஏழு குணங்களையும் அக்குணங்களை பிரதிபலிக்கும் ஏழு உருவங்களையும் கொண்ட முதல் தையுலாவாள். அவளின் பெயர் கொண்டு எமது 20 வது சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.


கடந்த இரு தசாப்த காலங்களாய் உயர்தர மங்கையின் தமிழ் வளத்தை வெளி கொண்டுவரும் விதமாக பல தமிழ் எழுத்தாக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வருடமும் எமது மாணவியின் சொந்த திறமை, முயற்சி, உழைப்பு கொண்டு உருவாகும் இந்த சஞ்சிகை உலகெங்கும் தமிழ் மணம் பரப்ப இறைவனை வேண்டி நிற்கின்றேன.

இனி வரும் காலங்களிலும் எமது பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றம் வெளியிடும் ஒவ்வொரு சஞ்சிகையும் வெற்றிவாகை சூட என் உளமாற வாழ்த்துகின்றேன்.


மேலும் இவ்விதழை சிறப்புற வெளியிட ஆக்கங்களை தந்துதவிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றிகள் எம்முடன் இறுதி வரை இருந்து இம்முயற்சியை ஜெயம் கொள்ள வைத்த அதிபர், தமிழ் பிரிவு அதிபர், பகுதித்தலைவர் உள்ளிட அனைத்து ஆசான்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

சௌமியா கனகஜோதி
மாணவ இதழாசிரியர்
தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பர்ஸானா ஹுஸைன்
தரம் 13 கலை



# மாதர் மனச்செல்வம் !

## ஔவைப்பிராட்டியார்

**பெண்பாற் புலவர்களில் தலை சிறந்தவர்**
**முடியுடைமூவேந்தர்கள் முதல்**
**கடையெழு வள்ளல்கள் வரை போற்ற**
**கவியாட்சி செய்தவர்**
**வையத்துவாழ்வாங்கு**
**வாழும் நெறியுரைத்தவர்**

**ஆக்கங்கள் :**

- **ஆத்திசூடி**
- **கொன்றை வேந்தன்**
- **நல்வழி**
- **மூதுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரிடமிருந்து...

இன்னருள் தேடி
உளம் தவித்து
ஆவியும், அன்பும்
அளிப்பவர் மனம்
மேவிய மோகனன்
மலர்ப் பாதம்
மனதிருத்தினேன்...

இனியவன் இன்னருள்...
மலர்ந்தது இவ்விதழ்...

இவ்விதழ் இம்முறை மங்கையர் மனச்செல்வமான ஔவைப் பிராட்டியாரின் மாண்பினை சற்றே மீட்டுகிறது இவ்வினிய தருணத்தில், இவ்விதழினை நெறிப்படுத்த வாய்ப்பளித்த தமிழ்ப்பிரிவு அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவ மலர்களுக்கும், அழகுருப்படுத்திய "சிட்னி" (கண்டி) பதிப்பகத்தினருக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் பல கோடி...

திருமதி.அ.அல்பிரட்
இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களும் தமிழ்ப்பிரிவு ஆசிரியர்களும்



அமர்ந்திருப்போர்(இடமிருந்து வலம்)
திருமதி.A.அல்பிரட், திருமதி.N.மொஹிடீன், திருமதி.V.செல்வவிக்னேஸ்வரன், திருமதி.S.N.தாவுத், திருமதி.R.இலகுப்பிள்ளை, திருமதி.A.M.V.K.அபேகோன் (பிரதி அதிபர்), திருமதி.M.அபேகுணசேகர(அதிபர்), திருமதி.M.K.P.வாசல(பிரதி அதிபர்), திருமதி.S.K.தசநாயக(பிரதி அதிபர்), திருமதி.K. ராம்குமார்(தமிழ் பிரிவு உதவி அதிபர்), திருமதி.V.ராஜேஸ்வரன், திரு. N. யோகநாதன், திரு. A. ரவீந்திரன்.
நிற்பவர்கள்- முதலாம் வரிசை (இடமிருந்து வலம்) திரு. அகிலேஷன், திருமதி.N. சசிகலா, திருமதி.S. உஷாந்தினி, செல்வி .M.சுபத்ரா, திருமதி.K.பீலிக்ஸ், திருமதி.M.பாலசுப்ரமனியம், திருமதி.M.R.F.ஹனீம், திருமதி.M.வசந்தி, திருமதி.T.M.தம்பையா, திருமதி.M.சுபாஷினி, செல்வி.V.சுதாஞ்சலி, திருமதி.A.பிரபாங்கனி, திருமதி.M.A.R.நயீம், திரு.M.F.A.M.பாரூக்.
அமர்ந்தருப்போர்- இரண்டாம் வரிசை (இடமிருந்து வலம்) திருமதி.P.மாலதி, திருமதி.K.ரோஹினி, திருமதி.M.சுமதினி, திருமதி.M.Y.F.யஸ்மின், திருமதி.M.F.மஹீஸா, திருமதி.Y.G.M.S.F.ரினோஸா, திருமதி.P.சரோஜினி, திருமதி.S.கௌசல்யா தேவி, செல்வி.J.லாபிரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மன்ற செயற்குழு உறுப்பினர்



அமர்ந்திருப்போர்:- முதலாம் வரிசை (இடமிருந்து வலம்)
செல்வி. தர்ஷினி செல்வநாயகம் திருமதி. A. அல்பிரட் செல்வி. சுதாஞ்சலி வேலாயுதம் திருமதி. செல்வவிக்னேஷ்வரன்திருமதி. ரதி இலகுப்பிள்ளை
திருமதி. கோகிலேஸ்வரி ராம்குமார்திருமதி. ரஹீமா நயீம் செல்வி. சுபத்ரா மகாலிங்கம்திரு. அஸ்மில் பாருக் செல்வி. ஸ்ரீ கௌஷல்யா ஸ்ரீதரன்
நிற்போர (இடமிருந்து வலம்)
செல்வி. யசோகீர்த்தனா மும்மூர்த்தி செல்வி. இன்ஷிரா நவ்ஷாட் செல்வி. சௌமியா கனகஜோதி செல்வி. சசிகலா தனச்செல்வம்,
செல்வி. பாததிமா முஸ்னா முனீர் செல்வி. மேகலாதனராமசிங்கம்செல்வி. ரஹ்மதுல்லாஹ் பாதிமா ராஷிதா
அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்)
செல்வி. திவ்யா ஏகநாதன் செல்வி. தரனி சங்கரி கைலேயநாதன், செல்வி. வேனுசௌமியா கனகராஜ் செல்வி. சிப்னா ஷரீப்தீன், செல்வி. பவித்ரா குமாரதாஸ்
செல்வி. மதுஷாலினி குணசேகரன் , செல்வி. கௌஷிகா ராஜரட்ணம் செல்வி. ஹர்ஷலா ராமமூர்த்தி, செல்வி. சவின் ஆர்த்தி சந்திரசேகரம் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மன்ற பொறுப்பாசிரியர்களும் மாணவத் தலைவிகளும்



அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்)
திருமதி.M.A.R.நயீம் (தமிழ் இலக்கியமன்றப் பொறுப்பாசிரியை),திரு.N.யோகநாதன் (இந்துமன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி. M. கோகிலேஸ்வரி (தமிழ்ப் பிரிவு உதவி அதிபர்), திருமதி.R.இலகுப்பிள்ளை (பகுதித் தலைவர்), திருமதி.M.R.F.ஹனீம் (இஸ்லாமிய மன்றப் பொறுப்பாசிரியை), திருமதி.S.தமயந்தி (கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியை - தமிழ்ப் பிரிவு)

நிற்போர் (இடமிருந்து வலம்)
செல்வி சப்ரா ஹுனைஸ், செல்வி ஸ்ரீ.பவித்ரா விநாயகமூர்த்தி, செல்வி ஸ்ரீ கௌஷல்யா ஸ்ரீதரன், செல்வி தர்ஷினி செல்வநாயகம், செல்வி பிரஷாந்தி பீதாம்பரம், செல்வி துவாரகா இராதாகிருஷ்ணன், செல்வி பிரஷாந்தினி அந்தோனிசாமி, செல்வி நிகன்யா மணிராஜ், செல்வி அபிலாஷினி ஜெயகொடி, செல்வி. ஹுஸ்னா ஹுசைன் செல்வி நிரோஷி சிறில் மார்டினஸ், செல்வி பிருந்தா ராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயமட்ட தமிழ்த் தினப் போட்டிகள்



அமர்ந்திருப்போர் - இடமிருந்து வலம் :- செல்வி.ஸ்ரீ கௌஷல்யா ஸ்ரீதரன் (மாணவச் செயலாளர்), திருமதி.M.S.F.ரினோசா , செல்வி.சுதாஞ்சலி வேலாயுதம், திருமதி.வசந்தமலர் செல்வவிக்னேஷ்வரன், திருமதி.ரஹீமாநயீம், திருமதி.மல்லிகா பாலசுப்ரமணியம் ,திருமதி.கோகிலேஸ்வரி ராம்குமார் (தமிழ்பிரிவு உதவி.அதிபர்), திருமதி.ரதி இலகுபிள்ளை (பகுதி தலைவர்), செல்வி.சுபத்ரா மகாலிங்கம், திருமதி.N.சசிகலா, திரு.அஸ்மில் பாரூக், திருமதி.A.அல்பிரட், செல்வி.தர்ஷினி செல்வநாயகம்(மாணவத் தலைவி) .

நிற்போர் - முதலாம் வரிசை (இடமிருந்து வலம்) :- திலீசா பிரதீப், மேகலா தனராமசிங்கம், பிருந்தா ராகவன், ஹர்ஷலா ராமமூர்த்தி, தினீஷா பிரதீப், நயனி இராஜேஸ்வரன், ஹரினி கீர்த்தனா மோகன், ஹார்த்திகா மயில்வாகனம், பிரயூதா விஜயகுமார், நிஷ்மிதா ராம்ராஜ், மதுமிதா ராம்ராஜ், நஷ்ஹத் ஆரா இக்பால், சரீபா மொஹமட் சாலி, கலையரசி நல்லதம்பி.

அமர்ந்திருப்போர் - இரண்டாம் வரிசை (இடமிருந்து வலம்) :- மாதுமை தேவமனோகரன், துஷாந்தி சிவராசா, ஆதிகா ஆரிப், வேலு சௌமியா கனகராஜ், ஹர்ஷதா விஜயானந்தன் , வெனுஷினி மோகன், வத்சலா நயோமி அதிகாரம், ஹஸினி இமல்கா பெர்னான்டோ, மாதுமை சிவானந்தவேள், யுவஸ்ரீ தங்கராஜ், லுக்ஷாயினி வசீகரன், தஷ்வினி வரதராஜன், ஹஸ்வதி ரவீந்திரன், தக்ஷலா முரளிதாஸ், சாகித்யா சர்வேஸ்வரன், நிரோஷிகா தங்கராஜ்.

அமர்திருப்போர் - மூன்றாம் வரிசை (இடமிருந்து வலம்) தனுஷி சமல்கா காரியவசம், நிவேதா ராஜேந்திரன், சவின் ஆர்த்தி சந்திரசேகரபிள்ளை , ரோஷிகா சத்தீஸ்வரன், நிதுர்ஷா ஜெயகுமார், அஸ்வினி காயத்ரி ஜெகனாதன், திலக்ஷாயினி வசீகரன், அம்ஷாலினி ரட்ணகுமார், ஹர்ஷிகா பாலசுப்ரமணியம், சௌமிகா ரகுநாதன், விஷ்மி ஷமோதா சபுகொட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 உயர்தர வகுப்பு மாணவிகளும் கற்பிக்கும் ஆசிரியர்களும் – (2012)



அமர்ந்திருப்போர்- முதலாம் வரிசை (இடமிருந்து வலம்)
திரு. S. அகிலேஷன் , திருமதி.N.சசிகலா , செல்வி. சுதாஞ்சலி வேலாயுதம், திருமதி. வசந்தமலர் செல்வவிக்னேஷ்வரன் , திருமதி .ரஹீமா நயீம், திருமதி. வசந்தி ராஜேஸ்வரன் , திருமதி. ரதி இலகுபிள்ளை, திருமதி. கோகிலேஸ்வரி ராம்குமார் , திருமதி. நிஹாரா மொஹிடீன், திருமதி. மல்லிகா பாலசுப்ரமணியம் , திருமதி. K. ரோஹினி, செல்வி. சுபத்ரா மகாலிங்கம் , திருமதி.A.ரவீந்திரன் , திரு.அஸ்மில் பாருக்.


நிற்போர் : 2012 உயர்தர வகுப்பு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சஞ்சுதா நடராஜா (தரம் - 13 விஞ்ஞானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவ மலர்கள்...
மனப்பூங்காவில்
மலர்ந்த கவிப்பூக்கள்
மாந்துவீர்...
மகிழ்வீர்!

கவினுறு கட்டுரைகள்
பார்த்தனவும்...
பதிந்தனவும்...
பதித்தனவும்...
உங்கள் பார்வைக்கு
கண்ணோடுவீர்
களிப்பீர்...

நயனத்தைக் கவரும்
நயமிரு ஒவியங்கள்...
நயப்பீர்!
மதி மிக்க ஆசிரிய மணிகளின்
நலம் தரும் ஆக்கங்கள்
ஆய்வீர்...
ஆனந்திப்பீர்!

இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## அருள்வாய் நீயே

இந்து மக்களின் கடவுளாய்
மக்களின் துன்பத்தைப் போக்க உதவுவாய்
ஏழை எளியவர்களுக்கு உதவுவாய்.
வாட்டிடும் கடும் துயர் போக்கிடுவாய்.
உயிர்களுக்கு தந்தையும் நீயே
கருணையாய் காத்திடும் தாயும் நீயே.
துணை என்றும் நீயே
அருள்வாய் ஆனந்தம் தானே

ரொசிகா சத்தியேஸ்வரன்
தரம் - 7

## அல்லாஹ்



அல்லாஹ்வே இவ்வுலகின் படைப்பாளன்
எல்லாப் பண்புகளையும் பெற்றவனே நீ - அல்லாஹ்
எனது குறை குற்றங்களை தீர்த்திடுவாய் - அருளாளனே
அனைத்தும் அறிந்தவன் நீயே!

மலக்குகளை படைத்தவன் நீயே - அல்லாஹ்
உன் ஆணையாளர்களை
சைத்தான்களும் ஜின்களும் அறிய - யா அல்லாஹ்
உன் பார்வை ஒன்றே போதுமே

பாத்திமா ரிகாஸா
தரம் - 09

## புத்தபகவான்



புவியினில்
புதுமைகள்
படைத்தாய்
புகழுடன்
மனதினுள்
புகுந்தாய்
போற்றினோம்
பொற்பாதம்



பா. சோபியா
தரம் - 10

## எம்முடன் இருப்பீர்

பாரதம் செய்த புண்ணியம் எனவா
பாரின் அற்புதம் எனவா...
எம்துயர் போக்க வந்த ஆத்மா எனவா...
எம்மை வழிநடத்திச் செல்வீர் பகவானே
என்றும் எம்முடன் இருப்பீரே

விதுக்ஷி வசந்தகுமார்
தரம் - 8

## இயேசுவே



இவ்வுலக
மாந்தருக்காய்
இன்னுயிர்
ஈந்தவர்
இருமலர்பாதம்
போற்றுவோம்...

செலோமி புஷ்பராஜன்
தரம் - 10

## உளம் கனிவாய்.... தாயே

இசையின் ஸ்வரூபமே - தேவி
வீணையுடன் வீற்றிருப்பாய்
கல்வியின் அருள் மணியே - தாயே
உன் அருள் வேண்டி நின்றோம்

வெண்தாமரைப் பூ தாயே - உன் மனம்
வெண்தாமரைப் பூவை மிஞ்சியது
உன் அருள் தேடியே - தாயே
உள்ளம் கனிந்து அருள்வாய்

தனுஜா தங்கராஜா
தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை திரேசா

அன்பு எனும் சொல்லுக்கு
அடித்தளமாய் விளங்கினாய்
பூலோக மானிடர்களை உன்
குழந்தையாய் நினைத்தாய்
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்டாய்
பெற்ற தாயை விட மானிடன்
மதித்த பெருந்தெய்வமும் நீயே
ஆனால் உன் குரல் மட்டும்
இன்று கேட்கவில்லையே
மீண்டும் ஓர் திரேசா எப்பொழுது
மறுபிறவி எடுத்து வருவாள்
அதுவரை காத்திருக்கும் இந்த உலகம்

யுவஸ்ரீ தங்கராஜ்
தரம் - 8

## அம்மா

உயிரையும் உடலையும் காத்து
ஊர் ஊராய் என்னைச் சுமந்து
அன்புடன் அரவணைத்து
அற்புதமாய் வந்தாயே அம்மா

பத்து மாதம் என்னைச் சுமந்து
பாசத்துடன் என்னை வளர்த்து
பாடல்கள் பாடிப்பாடி என்னை
தூங்க வைத்தாயே அம்மா

கட்டித்தழுவி முத்தம் தந்து
கண்ணீர் சிந்தாமல் கதைகள் சொல்லி
காதலித்து காத்தாயே அம்மா

சைனப் ஜிப்ரி
தரம் - 8

## அன்பு


அன்பு என்பது அன்னையைப் போல
இறுதிக் காலம் வரை கூடவே இருக்கும்
குருவி தன் குஞ்சிடம் காட்டுவது அன்பு
தாய் தன் குழந்தையிடம் காட்டுவது அன்பு
அன்பு என்பது ஆலயத்தைப் போல
அகிலம் வரை நிறைந்திருக்கும்
அன்பு இருந்தால் கிடைக்கும் இனிமை
அது இருந்தால் மானிடத் தவத்திற்கே பெருமை

ஆர்த்தி செல்வமோகன்
தரம் 08

## தாய்

பத்து மாதம் சுமந்து பெற்றதாயே
நீ இல்லாமல் நான் வாழ்வேனா
நீ என் கடவுள் போல்
நீ இல்லையெனின் துன்பம்தான்

பாத்திமா ஹில்மா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் மகிமை

மன்னனின் வழியே நாட்டின் - பெரும்
செல்வந்தனின் வழியே பணப்புகழ் - கடல்
மீனவனின் வழியே தொழிற்புகழ் - சேர்
கற்றவனுக்கு உலகப்புகழ்

யானைக்கு உண்டு தும்பிக்கை - மாணவா
உனக்கு வேண்டும் கல்வியின் நம்பிக்கை
மனதில் உறுதி எடு - செல்வனே
உலகம் திரும்பிவருன் உன் - பின்னே

பவித்ரா தியாகராஜா
தரம் 09

## மனித நேயம்

மண்ணில் பிறந்த நாம்
மறவா மகிழச்சியும்
மனித நேயத்தைப் பின்பற்றி
மனிதர்களாய் வாழ்ந்திடுவோம்.

மனதிலும் தீமை நினைக்காது
மறக்க வேண்டியதை மறந்து
மன்னிக்க வேண்டியதை மன்னித்து
மகான்களாய் வாழ்ந்திடுவோம்

மாணவர்களாம் நாம் வையகத்தில்
மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக
மனித நேயத்தைப் பேணி
மாண்புடனே வாழ்ந்திடுவோம்.

தஸ்வினி வரதராஜ
தரம் 9

# வரம் தா...

இந்த உலகமே கல்வி மயம்
அன்னை சரஸ்வதியே எங்கள் தெய்வமே
உன்னைச் சரணடைந்தோம்
கல்வி இயலாதது
ஒன்று உண்டோ???
கள்வரால் திருடமுடியாத கல்வி
வெள்ளத்தால் அழியாத கல்வி
அந்த கல்வியை அன்னையே எனக்கு தா...

ஜயப்ரதா கிருஷ்ணமூர்த்தி
தரம் 8

# வியப்பமான உலகம்

மரங்கள் நடந்து பேசினால்
மலர்கள் பாட்டுப் பாடினால்
மீன்கள் வானத்தில் பறந்தால்
இவ் உலகம் எப்படி இருக்கும்?

வயோதிபர் பாடசாலைக்கு சென்றால்
அவர்கள் பந்து விளையாடினால்
குழந்தைகள் வீட்டில் சமைத்தால்
இவ் உலகம் எப்படி இருக்கும்?

ஹனீகா சுவைர்
தரம் 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பது ஏன்!

படிப்பதும் ஏன்? பயன்கள் என்ன
படிப்பதனால் - என்று
பகுத்தறிந்து பார்த்தவர்கள்
எனக்குச் சொல்லுங்கள்

பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகம்
இல்லை என்பதால் - அந்தப்
பொருளைத்தேடிப் பெறுவது தான்
படிப்பின் நோக்கமா?

அறிவுடைமை நிலையான உடைமை
என்பதாலே - அந்த அறிவைத்
தேடிப் பெறுவது தான்
படிப்பின் நோக்கமா?

சவால்களை வெற்றி கொள்ளச்
சக்தி தருவதால் - நாம்
என்றும் அந்தச் சக்தி பெறப்
படிக்க வேண்டுமா?

ஆமாம் ஆமாம் ஆமாம் ஆமாம்
படிப்பின் நோக்கங்கள் - இன்னும்
பலப்பலவாய் அடுக்கடுக்காய் இருக்கும்
என்றாலும்

படைத்துக் காத்து வழி காட்டும்
இறைவன் திருப்தியை - நன்கு
பற்றிப் பிடித்துக் கொள்ளுவதே
பயிலுவதின் தலைமை நோக்கமாம்

எப. ஷஹ்னாஸ பரீட்
தரம் 10

# மனுநீதி மரணித்துவிட்டதா?

யுத்த அரக்கனின் காலடியில்
சமாதானத்தை தேடினோம்
ஆனால், சமாதான பறவை குருதி
தோய்ந்து நமது கையில் வீழ்ந்தது

விண்கூவும் விமானங்கள் நெருப்பு,
மழைபொழிய உதிர ஆற்றில்
நீந்தினோம். எங்கே மனுநீதி!
மரணித்துவிட்டதா?

அழுதும் கண்ணீர் வராத கண்கள்
மூடமறந்து உயிரற்றுப் போனது
எங்கே மனுநீதி! மரணித்து விட்டதா?
உயிரோடு இருக்கையில் ஆறுதல்
சொல்லாத நீ எமது சமாதிக்கு கண்ணீர்
பூக்கள் தூவவா வரப்போகிறாய்?

புல்லாங்குழல் இசைத்த எமது கரங்களில்
இறந்த எமது செல்வங்களின் சிதறிய
உடல்களை ஏந்திய வண்ணம் மனுநீதி
கேட்டு அழைக்கின்றோம்!

இடம் பெயர நம் தேசத்தில் இனி இடமில்லை
மாயான பூமிகளை தவிர, சிலுவையை சுமந்த
யேசு பிரானை போல் கால், கைகளை
இழந்த சொந்தங்களை கையில் ஏந்தி நீதி
கேட்கின்றோம். மனுநீதி மரணித்து விட்டதா?
அல்லது நீதி தேவதையே! நீ மௌனித்து விட்டாயா?

பிணக்குவியல்களின் மேல் நடந்து
சென்றபேது மனிதாபிமானம்
மண்குழியில் புதைக்கப்பட்டு
மனுநீதி மௌனிக்கின்றது!

தனிமையில் தவிக்கும் எமது
சொந்தங்களின் அவலங்களை
பார்த்தும், நீதி தேவதையே!
உன் கண்களை மூடி விட்டாய்?
எம் மண்ணில் மனுநீதி மரணித்து
விட்டதா?

பயிர்களும், பாதைகளும் மட்டுமன்றி
உடைமைகளுடன் சேர்ந்து மனித
உயிர்களை பந்தாடிய யுத்தம் ஓய்ந்து
சாம்பல் மேட்டில் சமாதானத்தைத் தேடுகின்றோம்
நீதி தேவதையே!
எமது அவலம் உன் காதுக்கு கேட்கவில்லையா?
மனுநீதி மரணித்து விட்டதா?

முத்துக்கிருஷ்ணராஜா சாலினி
தரம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பே உயிர்நாடி

அன்பு என்பது மூன்றெழுத்து சொல் மட்டுமல்ல
அன்புக்கு நிகர் அன்பே
அன்பு என்பது சோதனையல்ல
அரும்பெரும் சாதனை

மனிதா நீ காணாத அன்பா
மனதைக் தொட்டுச் சொல்
கர்ப்பப் பை தொடக்கம் கடைசிவரை
காண்பாய் அதுவே அன்பு

அன்னையிடம் பெறுவது அளவற்ற அன்பு
தந்தையிடம் பெறுவது நிகரற்ற அன்பு
சகோதரரிடம் பெறுவது எல்லையற்ற அன்பு
ஆசானிடம் பெறுவது ஒப்பற்ற அன்பு

உலகை. நாட்டை பிணைப்பது அன்பு
உன்னை. என்னை பிணைப்பது அன்பு
குடும்பத்தை பிணைப்பது
குடிகளையும் பிணைப்பது அன்பு

அம்ஷீலினி ரட்ணகுமார்
தரம் - 10

## என் தாயின் அன்பு

*அழகான வீடிருந்தும்*
*மகிழ்வான இடமிருந்தும்*
*சீராட்ட உறவிருந்தும்*
*பசியாற உணவிருந்தும்*
*தாலாட்ட நீ வேண்டும்!*

*உறவுகள் மாறலாம்*
*காலங்கள் மாறலாம்*
*என் மனம் கூட மாறலாம்*
*என் தாயின் பாசம் மாறுமா?*

*ஸ்ரீதரன் அனுகூஷ்வர்யா*
*தரம் – 10*


## அழகு

அழகு அழகு அழகு - என்றும்
அம்மா உன்னிடத்தில் அழகு
உன் அன்பு முத்தம் அழகு
உன்னால் எனக்கு வந்தது அழகு

பூக்களில் பனித்துளி அழகு
புல்வெளியில் பச்சை அழகு
கூந்தலிலே கருமை அழகு
குருவியே உன் அழகும் அழகு

வானமே உன் பஞ்சும் அழகு
வர்ணமே உன் வெண்மையழகு
கடலே உன் நீலம் அழகு
காலமே உன் போக்கும் அழகு

வேணுசௌமியா கனகராஜ்
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த எம்மை
ஒன்றிணைத்த எனக்கு ஒருகோடி நமஸ்காரம்
மதங்களால் வேறுபட்ட எம்மை நீ ஒன்றிணைத்தாய்
கோயில் மணியோ, தேவாலய மணியோ
எம்மை ஒன்றிணைக்க வில்லை பள்ளிகூட
மணியே எம்மை ஒன்றாக்கியது, ஓசையால்
எம்மை ஒன்றுபடுத்தி நட்பு எனும் உறவை
ஏற்படுத்தியது பள்ளி தான் நண்பா
புதிய, உறவு, இனிய கனவு, சிறந்த இலக்கு
பொருத்தமான கொள்கைகளை தந்த ஆசானும் பாடசாலையே

என் வாழ்வில் மகிழ்ச்சி எனும் ஒளியை
ஏற்படுத்திய பாடசாலையை என்றும் மறவேன்
இன்னும் சில வருடங்களில் நாம் பிரியப்
போவதை நினைக்கையில் என்
கண்களில் நீர் வழிகிறது

டிலுக்ஷினி செல்வதுரை
தரம் - 11

## அன்னை திரேசா...

அ - ன்பிற்கு உதாரணமே!
ஆ - ருயிர் அன்னையே!
இ - ன்பத்தை தருபவளே!
ஈ - கைக்குனம் கொண்டவளே!
உ - ண்மைக்கு உதாரணமே!
ஊ - னமானவர்களுக்கு தாயே!
எ - ங்களின் வழிக்காட்டியே!
ஏ - ழ்மையின் துணையே!
ஐ - யமின்றி உதவுபவளே!
ஒ - ற்றுமையில் உலகெங்கும்!
ஓ - ங்கி நிற்க நினைத்தவளே!

அன்னை திரேசாவே, உங்கள்
நினைவுகளால் வாழும்
உலக மக்கள் நாம்!!!

ச. சுகிர்தனா
தரம் 11

## நட்பு

மேகத்துடன் பேச
- காற்றாக வேண்டும்
மரத்தோடு பேச
- தென்றலாக வேண்டும்
நீரோடு பேச
- அலையாக வேண்டும்
மலரோடு பேச
- மணமாக வேண்டும்
மனிதர்களோடு பேச
- நண்பர்களாக வேண்டும்

பிரயுதா விஜயகுமார்
தரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி வருமா......

துள்ளித் திரியும் பள்ளிப் பருவம்
அள்ளித் தரும் இன்பங்கள்
அடியோடு எரித்தாலும்
அழியாத தழும்புகள்

சோகங்கள் சொல்லிட
தோழமை கொண்டிட
நல்லொழுக்கம் கற்றிட
களம் அமைக்கும் பள்ளி

குதூகலிக்கும் குறும்புகளும்
சண்டையும் நமதானமும்
கல கலப்பும் நாதுரியமும்
சர்க்கரையாய் சங்மிக்கும்

வெற்றியினை வாழ்த்திடவும்
தோல்வியினை ஏற்றிடவும்
தோள் மீது தோழமையும்
தொடராதோ நம் வாழ்நாளில்?

துளிர்விட்ட இளமையில்
தளிர்விட்ட திறமைகள்
வானோங்க வழி அமைத்த
வளம் மிகு களம் பள்ளி

உருவங்கள் மாறினாலும்
பருவங்கள் கழிந்தாலும்
அழுதாலும் தொழுதாலும்
இனி வருமா இப் பள்ளிப் பருவம்....

பஸ்னா பெரோஸ்
12 - கலை

## பயணம்

நாங்கள் இடம்பெயர்ந்தோம்
விளக்குகள் அனைக்கப்பட்ட இரவில்
எறிகணைகள் திசைகாட்டி நிற்க
கிழக்கிலிருந்து மேற்கு சோக்கி

கடலில் ஊர்வலம் போனோம்
கடலலைகள் பன்னீர் தெளித்திட
கடார்காற்றில் பாரம் கசிய விட்டே
அண்டை நாட்டில் மடியேந்தி

அங்கேதான்
தொப்புள் கொடி உறவுகளால்
"சிலோன் அகதிகள்" என்றழைக்கப்பட்டு
முட்கம்பி வேலிகள் பின்ன
சடம் போல் முடக்கப்பட்டோம்.

உருண்டோடின வருடங்கள் பல
தணிந்து போர் மேகங்கள் சில
பல கனவுகளைச் சுமந்து கொண்டு
சமதானம் வந்ததாம்
மீண்டு தமிழீழம் வந்து சேர்ந்தோம்.

யுகணியா முரளீஸ்வரன்
12 (வர்த்தகம்)

## ஏ மனிதா என்ன? தேடுகிறாய்.....?

"ஏ மனிதா, கொஞ்சம் நில்......
என்ன தேடுகிறாய்.....
எதையோ தொலைந்து விட்டாய்......
அதுதான் அமைதியா?......
ஐயோ பாவம், இது....
இங்கு கிடைக்குமா?......
அங்கு கிடைக்குமா?......
என்று அலையாதே......
ஏன்? அமைதி இங்குமில்லை......
அங்குமில்லை.....
அப்போ எங்னே என்றாய்?......
அது உன் இதயத்தில்தான்.....
இருக்கிறது அங்கு இல்லாவிட்டால்.....
நீ எங்கு சென்றாலும்......
உனக்கது கிடைக்காது......
அமைதி வேண்டுமானால்......
அமைதியாக இரு"...

யவண்யா செல்வராஜ்
தரம் - 12 கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையின் கொடுமையே...

மனித நேயம் மண்ணாய்
மாறிப்போக.
மனமோ.......
சிந்தனை இல்லாமல்
சிறகடித்து சிதறிப் போவதும்
வறுமையின் கொடுமையே

மழலை மனம் கொண்ட
மானிடப் பிறப்பில்
சிங்கம் போன்ற சினம் சீர்த்தூக்கி........
மௌனகங்களை உடைத்து
மதயானை வடிவமாய்
உருவம் எடுப்பதும் வறுமையின் கொடுமையே

காவியங்கள் காட்டிச் சென்ற
அரக்க குணம் படைத்த பிறப்புக்களை
காலத்தால் அழியாமல் இன்றும் (என்றும்)
நிஜத்தில் உருவாக்கியதும்
வறுமையின் கொடுமையே

நிலூஜா ராஜரட்ணம்
12 வர்த்தகம்



## சுயவழி

மானிடா
மனித மறை மொழியை
மனங் கொண்டு
முன்னிறுத்து
உனக்காக வாழ் - உன்
நிகழச்சி நிரலை
உன் உடைமையாக்க

உன் இதயம் இருக்க
இன்னொன்று எதற்கு
கடமையில் கண்ணியாயிரு
பிறர் சோலையில்
பூப்பறிக்காதே! உன்
பூங்காவில் பூக்களை நடு

உன்னை உனக்கே
கண்ணாடியாக்கு
உனக்கு விதியாக்கப்பட்டதை
விடுத்து - ஏன்
ஏதாவதொன்றை எடுத்தயம்புகிறாய்

உன் மாசுக்களை மட்டும்
ஆராய்ந்து பார்
மற்றவர் குணங்களை
நுகராதிருக்க - உன்
மனதிற்கு கட்டளையிடு

சுயவழி எனும் ஓரடிப் பாதையில்
உன்னைத்தேடு - நீ கிடைப்பாய்
மனிதனாய்....

பாத்திமா அருசியா அன்சார்
தரம் 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலாபாரம்

வேண்டா யுத்தங்கள் தமக்கிடையே புரிந்து
வேண்டும் சமாதானத்தை சாவகாசகமாய் சாகடிக்கும்
தீண்டத் தகாத மானிடரைக் கண்டு
துலாபாரம் ஒருபுறம் சாய்ந்து நிற்கிறது

மலையாய் பொருட்கள் குவிந்திருந்தும் - அதன்
விலையால் மக்களின் வயிற்றை அடிக்கும்
கறுப்பு வியாபாரிகளின் கல்நெஞ்சம் கண்டு
வெறுப்புற்று துலாபாரம் ஒருபுறம் சாய்ந்து நிற்கின்றது

மடியிலே மிடியைச் சுமந்து நிற்கும் மக்களிடையேயும்
மனமின்றித் திருடும் மனித மிருகங்களுக்கு
கொள்ளையே கொள்கையாய்ப் போய்விட்ட
கோலம் கண்டு கலக்கமுற்று
துலாபாரம் ஒருபுறம் சாய்ந்து நிற்கிறது

மார்கழி மாதக் கடுங்குளிரில் கூட
மனமின்றி மடம் புகுந்து
மழலையரை முகம் பார்த்து வருவேன் என்று
குளிரால் கால் வெடிக்க
கூடையைச் சுமந்து சென்றும்
குறைகூலி பெறும் தோட்டத்துப் பெண்களின்
கூக்குரல் தாளாது
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

உழைத்துழைத்து ஓடாய்ப் போயே - இறுதியில் தன்
உதிரத்தைத் தந்து வளர்த்த தேயிலைச் செடிகளுக்கு
உரமாகப் போய்த் தொலைந்த
உயர்ந்தவர்களுக்கு உரிமைகள் இல்லையே என்று
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

பெண்கள் நாட்டின் கண்கள் என்று
மேடை போட்டு பேசியும்
காடையர் கன்னியரைக் கற்பைக்
கருத்தூன்றுவதை கண்டு கண்கலங்கி
துலாபாரம் ஒரு பக்கம் சாய்ந்து நிற்கிறது

காதலித்த மண்ணை மோதலில் தொலைத்து விட்டு
சாதலே சாத்தியமாயப் போய்விட்ட நிலையில்
கால்வயிற்றுக் கஞ்சிக்காய் கையேந்தும் மக்களின்
நிலைகண்டு துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

அறிவுப் பசியால் உழன்று கொண்டிருந்த பிள்ளைகள் - செல்
அரக்கனால் புசிக்கப்பட்ட பேரவலம் கண்டு
பொங்கியெழும் கண்ணீரின் கனம் தாளாமல்
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

சாதனைகளைக் குழி தோண்டி புதைத்து விட்டு
வேதனைகளையும் சோதனைகளையும தோளில் சுமந்து
முட்கம்பி வேலிகட்குள் முகம் புதைக்கும் மக்களின்
முனகலைக் கேட்டு துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

படித்துப் பட்டம் பெற்றும் - தன்
பாதத்தில் உயரந்து நிற்க முடியாமல்
வறுமையெனும் கொடும் பிடியில் - மற்றோர்
சிறுமையாய் நோக்க
வாழ்ந்தும் வாழாத வேலையற்ற பட்டதாரிகளைப் பார்த்து
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

கல்வி கற்றுயர வேண்டிய வயதில்
கள்ளுக் கொட்டகை புகுந்து களியாட்டத்தில் ஈடுபட்டு
சீரழிந்து நிற்கும் இளைஞர் சமுதாயம் கண்டு
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

வாயார வாக்குறுதிகளை அள்ளி வீசி
வாக்குப் பெட்டிகளுடன் - தன்
வயிற்றையும் நிரப்பிக் கொள்ளும்
வஞ்சக அரசியல் வாதிகளின் நெஞ்சம் கண்டு
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

ஊடகச் சுதந்திரம் என்று நாடகம் நடத்தி
ஊடகவியலாளரின் உயிரைக் குடிக்கும்
இரக்கமற்ற மனிதரின் கள்ளத்தனம் கண்டு
உருகியே துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

சாதிகளும் சண்டைகளும்
மீதியாய் வாழும் மக்களிடையேயும்
மிஞ்சி நின்று வஞ்சம் புரிவதைக் கண்டு
நெஞ்சம் பொறுக்காது
துலாபாரம் ஒரு புறம் சாய்ந்து நிற்கிறது

இதர சகோதரரின் இதயக் கனம் போக்கி
இன்றும் என்றும் வேற்றுமையின்றி ஒற்றுமையாய்
நன்றே இருப்போம் வாருங்கள் அப்போது
துலாபாரம் ஒரு புறம் சாயாமல் இருந்திடட்டும்

நயனி இராஜேஸ்வரன்
தரம் - 13
விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

தனிமைக்கு இனிமை இரவு
அவ்விரவுக்கு தேவை நிலவு
அந்நிலவுக்கு அழகு உறவு
உறவுக்கு உண்டு பிரிவு
நட்பு என்றாலே சோகம் தானா? இல்லை,
அது இளமையின் வாலிப நாட்கள்
பிரியும் போது புரிய அது உறவல்ல
உறவுகளுக்கு அப்பாற்பட்ட உன்னதம்
நட்புக்கு நடுவிலே நாதங்கள் மட்டுமே
நாதங்களின்றி எவ்வித பேதங்களுமில்லை
பேதங்களை இரசித்தாலும் அதனால்
எவ்வித சேதங்களும் இல்லை
மொட்டுக்குள் புதைந்து போன
பனித்துளிகளின் சுவடுகளை
சிட்டுக்களின் சிறு சொண்டுகள்
உரிமை யோடு ஆக்கிரமிப்பது போல
குறும்புகள் செய்த காலங்கள் எங்கே?
அடுத்த நொடியின் நிலை அறியமுடியாத போதும்கூட
துடிப்புடன் பகிர்ந்து கொண்ட
வடிக்கப்படாத நாவல் மட்டுமல்ல
இழக்க முடியாத கோவிலும் கூட
இமைகள் குளிரில் நடுங்க
மனமோ நெருப்பில் ஒடுங்க
மனப்புயலின் மகளாய் வந்தாள்
பிரிவென்னும் மாயமங்கை
அன்பினால் மட்டும் கட்டுப்பட்ட இதயங்கள்
இன்று முகவரி இழந்து பிரிவில் தவிக்கிறது
நட்புடன் சேர்ந்திருந்த நாட்கள்
நினைவலைகளாக வருகின்ற வேலையால்
உன்முகம் காண விளைகிறது
கண்ணாடியில் அல்ல நம்
நட்புக் கரங்கள் கோர்க்க

**இராதாகிருஷ்ணன் துவாரஹா**
தரம் 13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழகு

இயற்கை அன்னை ஈன்றளித்த
ஈடிலாச் செல்வம்
இறைவன் தன் அரவணைப்பில்
உருவான உற்சவம்

கண்ணுக்கு கவியூட்டும்
காவியங்கள் உருப்பெறும்
பசுமைக்கு பஞ்சமில்லை
பார்ப்போருக்கு பரவசம்

எழிலுக்கு நிகரில்லை
ஏழைக்கு நிழல்
சுந்தரமான அழகில்
கோலமிடும் வண்ணம்

இரவின் கதகதப்பில்
இனிய மெல்லிசை
பனி மழையின் பரிதவிப்பில்
புஷ்பங்கள் பூஜிக்கும்

முத்தான் வடிவங்களில்
முக்கனிகள் அபிஷேகம்
வெற்றியின் வெளிச்சத்தில்
வேகமான ஊடுறுவல்

சோலையின் சொந்தத்தில்
உறவாடும் உயிர்ஜீவிகள்
மெல்லினம் துள்ளும்
தேனான குயிலிசை

தென்றலின் தேடலில்
துவண்டு போன துள்ளிசை
மேகங்கள் நகரும்
மெலிதான சோகத்தின்

தாழிடும் நெஞ்சங்கள்
கண்ணின் கலகலப்பில்
கண்டு கொண்ட
இயற்கை அழகே அழகு

த. மேகலா
தரம் 13 கலை

# நினைத்தாலே இனிக்கும்

கடவுள் பூமிக்கு வந்தான்
கருகிய நாட்கள் மீண்டும் வேண்டுமா? என்றான்
இல்லை. வேண்டாம் என் உள்ளம் உருகிய
இனிய பள்ளி நாட்கள் வேண்டும் என்றேன்.
அன்று மலர்ந்த செந்தாழம் பூவைப் போல
புதுமணம் வீசிய அந்தநாட்கள்....
ஆஹா! மீண்டும் என் உள்ளக்கமலத்திலே
மின்சாரத்தைப் பாய்ச்சுகிறது
எத்தனை இன்பங்கள் சிரிப்புக்கு பஞ்சமில்லை.
பேனாக்கள் பரீட்சைத் தாளை விட
மேசைகளிலே இனிய கவிதை பேசும்
உறவுக்கு ஆதாரமாக அமைந்த நட்பு
பிரிவுக்கு இரையாகிவிட்டது.
பிரிவும் ஒரு சுகம் தான்
இதை உணர்த்தியது பள்ளிதான்
கரைந்து போன கனவுகளை
காற்று மீண்டும் பரிசளிக்கும்
உறைந்து போன உணர்வுகளை
நினைத்தால் நினைக்கவே தோன்றும்


கலைவாணி சுகுமாரன்
தரம் 13 கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸப்ரா ஹுனைஸ்
தரம் - 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார்

தமிழ் கூறும் நல் ஒழுக்கம் போற்றும் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞன் சுப்ரமணிய பாரதியார் ஆவார். இவர் 1882ம் அண்டு மார்கழி மாதம் 11ம் திகதி சின்னச்சாமி ஐயருக்கும் இலக்சுமி அம்மாளுக்கும் மகனாக இவ் பூவுலகில் அவதரித்தார். சிறுவயதிலேயே கவிபாடும் திறன் பெற்றமையால் தனது 11 வது வயதிலேயே பாரதி என்ற பட்டத்தைப் பெற்றார்.

நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும் கொண்ட இவர் சமுதாயத்தில் நிலவும் பல கொடுமைகளை இலகு தமிழில் எளிய நடையில் பாடல்களாலேயே சாடினார். அடிமைப் பட்டிருந்த மக்களை எழுச்சியுறச் செய்வதற்காக,

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை
அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்று பாடினார். சாதிக் கொடுமைகள் காரணமாக,
"வெள்ளைநிறத்தொரு பூனை எந்தன்
வீட்டில் வளர்வதைக் கண்டேன்
பிள்ளைகள் பெற்றது பூனை - அவை
பேருக்கொருநிறமாகும் - சாம்பல்
நிறமொருகுட்டி கருஞ்சாந்து
நிறமாரு குட்டி பாம்பின்
நிறமொருகுட்டி வெள்ளை
பாலின் நிறமொருகுட்டி எந்த
நிறமிருந்தாலும் அவையாவும்
ஒரே தரமனடறோ இந்த நிறம்
சிறிதென்று இதில் இஃது
ஏற்றம் கொள்ளலாமோ" என்று பாடினார்.

சின்னஞ் சிறு குழந்தைகளுக்காக "ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்றும் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக்களஞ்சியமே" என்ற பாடல்கள் மூலம் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் தந்து நின்றவர் பாரதியார். "தமிழ்மொழிப்போல் இனிய மொழி இனிதும் எங்கும் காணோம்" என்பது மூலம் அவரது மொழி பவற்றையும் "வாழிய செந்தமிழ் வாழ்க வாழ்க பாரத மணித்திருநாடு" என்பதன் மூலம் அவரது நாட்டுப்பற்றும் வெளிக்கொணரப்படுகிறது.

உயிர்களிடத்தே அன்புபம் கருணையும் கொண்ட பாரதியார் கோயில் யானைக்கு உணவளித்த வேளை கோயில் யானை தாக்கியதால் இந்த மண்ணுலகை விட்டு மறைந்தார். இன்று பாரதியார் நம்மிடையே இல்லாவிட்டாலும் அவர் பாடிய பாடல்கள் தமிழ் நெஞ்சங்கள் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.



"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

லுக்சாயினி வசீகரன்
தரம் - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

பழமொழி என்றால் என்ன? என்பதற்கு அந்தச் சொல்லிலேயே விளக்கம் உள்ளது. பழைய மொழி பழமொழி, பழகிப் போன மொழி பழக்கத்தில் வந்துவிட்ட மொழி பழமொழி எனப்பலவிதமாகக் பழமொழிகள் ஆதிகாலத்திலிருந்தே வழக்கத்தில் உள்ளன. அவற்றுக்கு இலக்கணமோ, வரையறையோ கிடையாது. நம்முன்னோர் அனுபவ ரீதியாகப் பெற்ற அறிவைக் கொண்டே பழமொழிகளைக் கூறினர். அவை செந்தமிழிலன்றிக் கொச்சை மொழியிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

முன்னோர்கள் தம் வாழ்க்கையில் அனுபவித்தவற்றைப் பின்னோர்கள் அறிந்து கொள்வதற்குப் பேருதவியாக இருப்பவை பழமொழிகள். பழமொழிகளுக்கு "எழுதா இலக்கியம்" என்ற பெயரும் உண்டு. முன்னோரின் வாழ்க்கை அனுபவங்களே பழமொழிகள் என்பவை கற்பனை சிறிது கலவாத வாழ்க்கை நெறி : இலக்கிய வடிவங்கள்.

நீதியைக் கூறி வாழ்க்கையை நேர்மைப்படுத்தும் கருத்துக்களைக் கொண்ட பழமொழிகள் பலவுள. இந்த எளிமையான வாசகங்களைப் பயன்படுத்தாதோர் எவருமிலர் எனலாம். பழமையாகச் சொல்லப்பட்டதானாலும் காலத்தை வென்று வாழும் சிறப்புடையான பழமொழிகள். எல்லோராலும் என்றும் ஏற்கத்தக்கவையாக அவை திகழ்கின்றன.

தமிழில் ஏராளமான பழமொழிகள் பழக்கத்தில் உள்ளன. படிப்பறிவற்றவர்கள் கூடத் தாம் பேசும்போது நீதி, நேர்மை, நியாயத்தை வலியுறுத்த இத்தகைய பழமொழிகளைப் பயன்படுத்துவதைக் காணலாம் வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ விடயங்களைப் பழமொழிகள் மூலம் நாம் புரிந்து கொள்ள முடியும். பழமொழிகள் வாழ்கைக்குப் பயன்தரும் பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றன பழமொழிகளை மேலோட்டமாகப் பார்த்தால் அவை ஏதோ ஓர் அர்த்தம் தருவனவாகவே தோன்றும்.

மேலும் பழமொழிகள் யாவும் நமது முன்னோரின் அனுபவ வார்த்தைகள் அவை நமக்கு நல்வழி காட்டவல்லன பழமொழிகள் நமது முன்னோர் அளித்த செல்வங்கள் அவற்றைப் போற்றிப் படிப்பதுடன் பேணிக் காக்கவும் நாம் முற்பட வேண்டும்.

நிரோஷிகா
தரம் - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் - நேரமுகாமை

மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நேரத்தினை எவ்வாறு முகாமை செய்தல் வேண்டும் என்பது பற்றி அறிந்திருத்தல் இன்றியமையாதது அகும். எங்கள் அனைவருக்கும் நாளொன்றிற்கு 24 மணித்தியாலங்கள் அல்லது 1140 நிமிடங்கள தான் உண்டு. எனவே இந் நேரத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் வேண்டும்.

நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவது பற்றி அறிந்து அவற்றை கடைபிடிப்பதன் மூலம் நாம் பல்வேறு நன்மைகளை பெற முடியும்.

அவையாவன:-

1. எங்கள் வேலைகளைச் செய்வதற்கு கூடுதலான நேரம் கிடைக்கின்றது.
2. தீர்மானம் எடுக்கும் ஆற்றல் அதிகரிக்கின்றது.
3. எம் உடல் ஆரோக்கியத்தை முன்னேற்றுகின்றது.
4. எம் வேலைகளை இலகுபடுத்துகின்றது.
5. எமக்கு கூடுதலான ஓய்வு நேரத்தை தருகிறது.
6. நாம் எதிர்நோக்கும் ஆபத்துக்களை குறைக்கின்றது.
7. மன அழுத்தத்தை குறைக்க உதவுகின்றது.
8. வேலைகளை சிறப்பாகவும், திறமையாகவும், சரியாகவும் செய்ய வழிகோலுகின்றது.
9. குறைந்த நேரத்தில் கூடிய வேலைகளை செய்ய உதவுகின்றது.

மாணவர் தமது நேரத்தினை சரியான முறையில் முகாமை செய்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளாவன,

1. எமது நாளாந்த வாழ்க்கையை அதிகாலையில் ஆரம்பிப்பது. அதாவது அதிகாலை 4.30 மணி அல்லது 5.00 மணிக்கு நித்திரை விட்டு எழும்புதல்.

2. எமது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் நேரத்தினை ஒதுக்கீடு செய்தல் அவசியமாகும். இல்லாவிடின் ஒரு செயற்பாட்டிற்கு அதிகளவு நேரம் செலவழிக்கப்படுகின்றது. இதனால் ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போகின்றது.

3. தினமும் பாடசாலைக்கு நேரத்திற்கு செல்லுதல் வேண்டும்.

4. கடினமான வேலைகளை முதலில் மேற்கொள்ளல் பின்னர் சுலபமான வேலைகளை மேற்கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாடசாலையில் தேவையற்ற உரையாடல்களை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

6. வேலைகளை திட்டமிடுதல் வேண்டும். திட்டமிட்ட படி கருமங்களை நிறைவேற்ற வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் வேலைகளை திட்டமிட்ல வேண்டும்.

7. நாட்குறிப்பினை பயன்படுத்தி வேலைகளைத் திட்டமிடலாம்.

9. குறிப்பிட்ட நாளில் அல்லது வாரத்தில் நிறைவேற்ற வேண்டிய வேலையின் அளவினை தீர்மானித்து அவற்றினை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

10 தினமும் மேற்கொள்ளும் செயற்பாடுகளை தினமும் ஒழுங்காக அந்தந்த நேரத்தில் மேற்கொள்ளல். உதாரணமாக உணவு அருந்துதல், நித்திரைக்குச் செல்லல் போன்ற கருமங்கள் தினந்தோறும் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஆகும். அக் கருமங்களை தினமும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

11. கருமங்களை பிற்போடுவதனைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

12. தினமும் நித்திரைக்குச் செல்வதற்கு முன்பு அன்று உங்கள் நேரத்தினை ஏற்கனவே திட்டமிட்டபடி பயன்படுத்தியுள்ளீர்களா? என்பதனைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். நேரம் விரயமாக்கப்பட்டு இருப்பின் அதற்குரிய காரணங்களை அறிந்து அதனை நிவர்த்தி செய்ய முயற்சித்தல் வேண்டும்.

எனவே மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது நேரத்திற்கும் பிறரது நேரத்திற்கும் மதிப்பளித்து நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும். இதற்கு நேர முகாமை பற்றிய அறிவும் சுயகட்டுப்பாடும் இன்றியமையாதது ஆகும். எமது நேரத்தினை சரியாக திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் வாழ்வில் முன்னேற்றம் அடைவோமாக.

சௌமியா ரகுநாதன்.
தரம் - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் விந்தைகள்

மூட நம்பிக்கை எனும் இருண்ட போர்வையால் மூடப்பட்டிருந்த மனித குலத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது விஞ்ஞானம்தான். நாம் வாழும் இன்றைய உலகானது "விஞ்ஞான யுகம்" என்றழைக்கப்படுகிறது. பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே விஞ்ஞானம் தோற்றம் பெற்றுவிட்டது. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் நல்லதொரு வளர்ச்சியைக் கண்ணுற்று, 20ம், 21ம் நூற்றாண்டுகளில் "அசுர வேகம்" கொண்டு அதிஉச்சப் பரிமாணத்தைத் தோற்றப்பாடாக கொண்டு திகழ்கிறது.

விஞ்ஞானத்தின் மின்சாரக் கண்டுபிடிப்பு ஒரு மாபெரும் திருப்பு முனையாக விளங்குகிறது. மின்சாரத்தின் மூலம் இன்றைய அவசர உலகில் நாம் பல்வேறு பயன்களைப் பெற்றுக் கொள்கின்றோம். தோமஸ் அல்வா எடிசனின் அயராத உழைப்பின் பயனாக மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டது. "மின்சாரம் இல்லையேல் இன்றைய உலகில்லை" என்றநிலை உருவாகிவிட்டது. தகவல் தொடர்பாடல் வளர்ச்சிக்கும், தொழிநுட்ப வளர்ச்சிக்கும் மின்சாரம் அவசியம்.

மேலும் சில நொடிகளில் பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இடங்களுக்குச் சென்று வர விமானம் உதவுகிறது. மலைகள், கடல் என்பவற்றை கடந்து செல்லவும், விரும்பிய திசையில் செல்ல முடிகிறது. ஆழ்கடலில் மீனுக்கு ஓடம் செலுத்தினான். ஆனால் இன்றைய விஞ்ஞானமோ விண்வெளிக்கு ஓடம் செலுத்தி விண்மீன்களை ஆராய்கிறது.

இன்றைய உலகை ஒன்றினைக்கும் ஒன்றாக தொலைத்தொடர்பு சாதனங்கள் திகழ்கின்றன. கணினி, இணையம், தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்பன உலகை சிறிய கிராமமாக்கிவிட்டது. இவை மனித சமுதாயத்திற்கு பல்வேறு வகையில் உதவுகின்றன. ஒரே இடத்திலிருந்து உலகின் பல்வேறு பாகங்களில் நடைபெறும் நிகழ்வுகளை அறிய முடிதல், நூலகத்திற்கு செல்லாது இணையம் மூலம் தகவல்களைப் பெற்று அறிவை வளர்த்துக் கொள்ள முடிகிறது. "ஸ்கைப்" எனும் சாதனம் மூலம் வெளிநாடுகளிலுள்ள நண்பர்கள், உறவினர்களோடு உரையாட விஞ்ஞானமானது வழிவகுத்துள்ளது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழிக்கிணங்க நாம் நோயற்று வாழ்வதற்கு விஞ்ஞானம் மருத்துவத்துறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. புற்றுநோய்ச் சிகிச்சை, இருதய மாற்றுச் சிகிச்சை, மிக நுண்ணிய சத்திர சிகிச்சை, லேசர் கதிர்கள் மூலம் செய்யப்படும் சிகிச்சை, இரவல் சிறுநீர்ப்பை பொருத்துதல், ஸ்கேனர் மூலம் நோயைச் கண்டறிதல், பரிசோதனைக் குழாய் மூலம் கருவை உண்டாக்குதல் என்று எத்தனையோ சிகிச்சைகள். இவையனைத்தும் விஞ்ஞான வளர்ச்சியே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இன்று மோட்டார் வாகனம், புகையிரதம், கப்பல்கள், விமானம், வானவூர்திகளில் செல்கின்றான். இன்று புவியிலிருந்து சந்திரன் வேறு கிரகங்களுக்கும் செல்ல விஞ்ஞானம் வழிவகுத்துவிட்டது. செய்மதிகள் மூலம் தொடர்பாடல்கள், வானிலை, காலநிலை, இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றை அறிய முடிகிறது. தரையில் மட்டுமின்றி நீரிலும் விஞ்ஞானம் தாண்டவமாடுகிறது. நீர் ஊர்த்திக் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்களை செயற்படுத்தவும் விஞ்ஞானம் மறக்கவில்லை.

இவ்வாறு பல்வேறு நன்மைகளை அளிக்கும் விஞ்ஞானம் சில தீய விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. உலக முன்னேற்றத்திற்கு கண்டுபிடிக்கப்பட்ட "அணுச்சக்தி" இன்றோ அழிவுக்காகவே பயன்படுத்தப்படுகிறது. நோய்க்கிருமிகளை அழிக்க, நோய்களைப் போக்க, மருந்து வகைகள் கண்டு பிடிக்கப்பட்ட போதும் நோயை ஏற்படுத்த விஞ்ஞானம் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக நச்சு வாயு கூறலாம்.

அவசர உலகின் அருமருந்தாகும் இவ்விஞ்ஞானம் மனிதனுக்கு நன்மை தீமை என்பவற்றைக் கொண்டிருக்கும் நிலையில் நாம் நன்மையைப் பெற்றுக் கொண்டு தீமைகளிலிருந்து கூடியளவு விலகிக் கொள்வதற்கான விஞ்ஞான உத்திகளைக் கையாள வேண்டும். மாணவர்களாகிய நாம் விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திடுவோம்.

சாஹித்யா சர்வேஸ்வரன்
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

நாம் தன்னம்பிக்கையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கையே எதையும் துணிவுடன் செய்யும் ஆற்றலை வளர்க்கும் தன்னம்பிக்கையுடன் செய்யும் செயல்கள் வெற்றியையும் திறமைகளையும் வெளிக்காட்டும். தன்னம்பிக்கையுடன் செயல்படும் போது எமது சிந்தனை, சொல், செயல் யாவும் செய்யப்படும் செயலிலேயே ஒன்றித்திருக்கும். தன்னம்பிக்கை என்றால் ஒருவருக்கு தன்மீது ஏற்படும் நம்பிக்கையே அகும். நாம் செய்யும் செயல்களுக்கு எமக்கு துணிவைக் கொடுப்பது தன்னம்பிக்கையே ஆகும். தன்னம்பிக்கை இல்லாத ஒருவரால் எதையும் சாதிக்க முடியாது. பரீட்சையில் நல்ல முறையில் சித்தி பெற தன்னம்பிக்கை அவசியம். அதே போல போட்டி நிகழ்ச்சிகளில் சிறந்த வெற்றிகளைப் பெற துணை நிற்பது தன்னம்பிக்கையே ஆகும்.

தன்னம்பிக்கையும் முயற்சியும் என்றுமே தோல்வி அடைந்ததில்லை. உலகில் தன்னம்பிக்கையோடு சாதனைகள் பல புரிந்தோர் இருக்கின்றனர். தன்னம்பிக்கை என்ற சொல்லின் முன்னால் கஷ்டங்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. முடியாத எனும் சொல் வாழ்வில் இருக்கவே கூடாது. தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் நம் வாழ்வில் நாம் எதையும் சாதிக்கலாம். தன்னம்பிக்கையோடும் இறை நம்பிக்கையுடனும் எமது வாழ்வில் வெற்றிகள் பல பெற்று சிறப்புடன் வாழ்வோம்.

எம். வேணுஷினி
தரம் - 10

அரியது டீகட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறந்த லரிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதும் ஊரெ யாவரும் கேளிர்

இறைவன் இப்பூவுலகில் எல்லா உயிர்களையும் சமமாகவே படைத்தான். இருப்பினும் இவ்வுலகில் உதித்த எல்லா உயிர்களும் ஒற்றுமையுடன் வாழ்வது அரிதே. அநேகர் ஒற்றுமையில் வேற்றுமை கண்டு தம் குலத்தையும் சமுதாயத்தையும் பிளவுபடச் செய்கின்றனர். புறநானூறு என்னும் நூல் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற இலக்கிய வரி மூலம் நமக்கு இதனை புலப்படுத்துகின்றது. விரித்த நோக்கும், பரந்த சிந்தனையும், சீர்திருத்த உள்ளமும் கொண்ட இந்நூலின் இலக்கியவரி இவ்விருபத்தோறாம் நூற்றாண்டிலும் புதைந்து போகாமல் ஒளி விளக்காய்த் திகழ்கின்றது.

இவ்வுலகில் வாழும் எல்லாச் சமுதாயத்தினரும் சாதி, சமய, இன, நாடு வேறுபாடு இன்றி சுதந்திரமாகவும், இன்பத்தை நாடியும் வாழ வேண்டுமென நாம் கொள்கை அளவில் கூறுவதை உண்மையாக நம்பினால் அனைவரும் ஒருவருக்கொருவர் சொந்தமானவர்களாக ஒரு தாய் மக்களாக வாழலாம் என்பதில் ஐயமில்லை. உலக மக்களிடம் இறைவன் பாரபட்சம் காட்டவில்லை என்பது எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மையாகும். இவ் உண்மையை எல்லா நாட்டவரும் நடைமுறையில் ஏற்றுக்கொண்டால் யாவரும் ஓர் குடும்பம் போல், யாதும் ஊர், யாவரும் உறவினர்போல் இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழலாம்.

இத் தரணியில் இன்றும் ஏற்றிப் போற்றி வாழ்த்தி வணங்கும் உலகத்தலைவர்களும், கவிஞர்களும் உலக மக்கள் வேற்றுமை ஒழிந்து ஒற்றுமையுடன் வாழ்வதற்கு அரும் பணி புரிந்துள்ளனர், புரிந்தும் வருகின்றனர். ஆனால் இன்று மதவெறியாலும், நிறவெறியாலும், எல்லைப் போராட்டங்களாலும் உலகில் பல பாகத்திலும் போரும், பூசலும் நடந்து கொண்டே இருக்கின்றன. இவை உலக மக்களின் அழிவுக்கு உலவைக்கும் என்பதை வலியுறுத்துகின்றன.

இன்றைய நவீன உலகில் தேவைகள் அதிகரிக்க உலகம் நெருங்கி, சுருங்கி விட்டது. உலகம் சுருங்கச் சுருங்க நமது சிந்தனைகளும் நோக்கமும் பரந்து விரிந்து வளர வேண்டும், மனச்சான்று பக்குவப் படவேண்டும். நாடு, கண்டம், மதம், மரபு, இனம், நிறம், பால் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு எழும் பிரச்சினைகளைக் களைத்தெரிந்து புதுப் பொலிவுடன் வாழ வேண்டும். உலகம் முழுவதும் மானிடர்களின் உறைவிடமாகக் கொண்டு அனைவரும் தோழமை பூண்டு பணியாற்றும் நிலை உருவாக வேண்டும்.

கடல்களும், கண்டங்களும் ஏக காலத்தில் உலகைப் பிரிந்திருந்தன. விஞ்ஞானம், அறிவியல் முதலியன முன்னேறியுள்ளதின் பயனாய் கண்டங்களும், நாடுகளும் இணைக்கப்பட்டு ஒரு நாடு போல் பிணைந்து வருகின்றது. வெல்ல வேண்டிய இலட்சியங்களும் எண்ணிலடங்காதென. எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணம் மலர வேண்டும். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ வேண்டும். புரட்சிக் கவிஞன் பாரதியார்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்குந் தாழ்வே"

என்று ஒற்றுமைச் சங்கநாதம் செய்தார். மாணவர்களாகிய நாம் அன்பு மிகுந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதின் பங்கு பெறுவோம்.

ஹர்ஷ்தா விஜயானந்தம்.
தரம் - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித மேதை பைதகரஸ் திகில் அடைய செய்த சம்பவம்

சிறந்த கணித மேதையான பைதகரஸ் நிறுவிய கல்விக் கூட்டத்தில் கற்பித்தவர்கள் "பைதகரஸியர்கள்" என்று அழைக்கப்பட்டனர். பைதகரஸ்ஸும் அவரது சிரேஷ்ட ஆசிரியர்களும் தேற்றத்தை ஆக்கும் போதே பல செங்கோண முக்கோணங்களை வெவ்வேறு அலகுகளில் வரைந்து அளந்து பார்த்தும் பின்னர் கணக்கீட்டுப் பார்த்தும்தான் ஆக்கினார்கள்.

பைதகரஸின் தேற்றம் சரி என்பதை இலகுவாக நாம் காணக்ககூடியதாக இருப்பது செங்கோணத்தை ஆக்கும் பக்கங்கள் 3 அலகுகளாகவும், 4 அலகுகளாகவும், 6 அலகுகளாகவும், 8 அலகுகளாகவும், 9 அலகுகளாகவும் அல்லது 12 அலகுகளாகவும் இருக்கும் போது என்பதை அவதானித்திருப்பீர்கள்.

பைதகரஸும் இவற்றைக் கொண்டுதான் தேற்றத்தை ஆக்கனார். அவரது கல்விக் கூடத்தில் தேற்றம் கற்பிக்கப்படலாயிற்று. சில நாட்களிலேயே ஒரு மாணவன் இரு பக்கங்களும் 1 அலகு உள்ளதாக ஒரு சம பக்கச் செங்கோண முக்கோணத்தை வரைந்தான்.

பைதகரசின் தேற்றத்தின் படி செம்பக்கத்தின் அளவு $\sqrt{1^2 \times 1^2} = \sqrt{2}$

பைதகரின் மாணவர்கள் திகைத்தார்கள்: 2ன் வரக்க மூலத்தை எப்படிக் காண்பது என்று. இதை பைதகரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பைதகரஸும் அயர்ந்து நின்றார்.

நீங்கள் விடையைச் சுலபமாக கூறக் கூடும். ஆனால் பைதகரஸின் காலத்தில் தசமபின்னம் கண்டுபிடிக்கப்படவில்லை. மடக்கை வாய்ப்பாடும் இல்லவே இல்லை. பைதகரஸும் சகாக்களும் கலந்து ஆலோசித்தனர். தக்களுக்கு இக்கணித பிரச்சனையைத் தீர்க்க வழி தெரியவில்லை என்பது வெளியெ தெரிந்தால் அவமானம். தங்கள் கல்விகூடத்தின் பெயர் வெளியே மங்கிவிடும் என்பதால் சகல மாணவர்களையும் இவ்விடயம் வெளியே தெரியாமல் இரகசியமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்தனர்.

பின்னர் இதனைத் தீர்க்க தீவிரமாக்கப்பட்டார்கள். மிகவும் பெரிய அலகுகளில் 1m : 1 பர்லாங்; 1 யார் போன்ற அலகுளில் இருபக்க சம செங்கோன முக்கோணிகளை வரைந்தார்கள். அவற்றை மிகவும் கவனமாக அளந்தார்கள். பொதுவாக அவற்றில் இருந்து கிடைத்த விடை 1 அலகும் 4/10 அலகும் 1/00 அலகுமாகும்.

அதாவது 4/1000 அலகுமாகும். அதாவது (1+4/10+1/100+4/1000) என்பதாகும் இது 1414/1000 ஆகம் இதன் வர்க்கம் $(1414/100)^2 = 1999396/1000000$ இது அண்ணளவாக 2 க்குச் சமம் என்பதால் பைதகராஸ்

$\sqrt{2} = \frac{1414}{1000}$ என்று எடுத்துக் கொள்ளலாம் என்றும், இதனால் தேற்றம் சரியானது என்பது திருபிக்கப்பட்டது.

கலையரசி நல்லதம்பி
தரம் - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லியனார்டோ டாவின்சி

லியானார்டோ டாவின்சி என்றதும் நம் அனைவரினதும் நினைவுக்கு வருவது மோனாலிஸா ஓவியமாகும். உண்மையில் டாவின்சி ஒரு சிறந்த ஓவியர் மட்டுமல்ல திறமையான ஒரு அறிவியல் ஆய்வாளர் பற்பல ஆராய்ச்சிகள் செய்து புதிய கண்டுபிடிப்புக்களுக்கான குறிப்புரைகளும், விளக்கப்படங்களும் கொடுத்த தீர்க்கதரிசியாவார். சிறந்த தட்டிடக்கலை வல்லுநர் புதுமைகள் நிறைந்த போர்க்கருவிகளை வடிவமைத்த பொறியியலாளர், இசைக்கலைஞர்கள், தத்துவஞானி மற்றும் புவியியல், வானியல், தாவரவியல் துறைகளில் சாதனைகள் பல புரிந்தவர்.

கனவுகளின் பலன்களைப்பற்றி ஆய்வு நடத்திய அறிஞர் ப்ரொய்டு என்பவர் டாவின்சியை பற்றி கூறும்போது அனைவரும் உறங்கும் நேரம் அவர் ஒருவர் மட்டும் விழித்துக் கொண்டார் என பெருமையுடன் கூறினார் என்பது வரலாறு தரும் உண்மையாகும். அக்கூற்றே டாவின்சிக்கு எதிராக செயற்பட்டது. பொழுதெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டு அதே ஞாபகத்தில் உலவிவந்த டாவின்சியை புரிந்து கொள்ளாத ஊர் மக்கள் டாவின்சி மனநிலை சரியில்லாதவர் என நினைத்தனர். அவர்களின் கேலிப்பேச்சில் இருந்து தப்புவதற்கு கண்ணாடி எழுத்து முறையில் எழுதினார். அதற்கான காரணம் யாதெனில் தன் எழுத்துக்களை இடம்வலம் திருப்பி எழுதப்பட்டிருந்தமை ஆகும். அவ்வெழுத்துக்களை கண்ணாடியில் பார்த்தே வாசிக்க வேண்டும்.

டாவின்சி தன் வாழ்வினை தொடங்கியது வெர்ரோக்சியா என்ற புகழ்பூத்த ஓவியரின் மாணவனாக பிறப்பு முதல் ஓவியக்கலையில் சிறந்த ஆர்வம் கொண்டிருந்ததால் வெர்ரொக்கியாவின் ஓவியக் கற்பித்தல் டாவின்சிக்கு சிறந்த தீனி போட்டது. தன் அயராத முயற்சியால் சிறந்த ஓவியராக டாவின்சி உருவெடுத்தார். வாழும் சூழ்நிலை ஒரு மனிதனுக்கு எவ்வாறெல்லாம் புதிய வாய்ப்புக்களை உண்டாக்கித்தரும் என்பது டாவின்சியின் வாழ்க்கையில் நாம் காணும் உண்மையாகும்.

அறிவியல் படித்திருந்தும் மனதளவில் ஒரு ஓவியராக பணியாற்றிய டாவின்சி மிலான் எனும் நகரில் தன்னை சூழ நடந்த சிறு சம்பவங்களிலே புதிய விடயங்களை அறியவும் ஆராயவும் ஆசை கொண்டார். அக்காலகட்டத்தில் இத்தாலியின் சிற்றரசுகள் தமக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தனர். டாவின்சி அதற்காகவே பல போர்க்கருவிகளை வடிவமைத்தார். தொற்ற நோய்களால் பாதிக்கப்பட்டு மக்கள் பலர் இறக்க இது தொடர்பாக ஆராய்ந்து சுகாதார வழிதுறைகளையும் சாக்கடைகளையும் கட்டியெழுப்புதல் தொடர்பாக கட்டட அமைப்புக்களை கொடுத்து வந்தார்.

லியனார்டோ டாவின்சி வரைந்த மோனாலிஸா ஓவியத்தின் புன்னகையின் மர்மத்தை இன்றுவரையிலும் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. காரணம் சோகத்துடன் அவ்வோவியத்தை பார்க்கும் போது மோனாலிஸா உருவம் அழுவது போலவும் மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் அவ்வோவியத்தை பார்க்கும்போது மோனாலிஸா ஓவியம் சிறிப்பது போலவும் தென்படும். டாவின்சியின் புகழ்பெற்ற ஏனைய ஓவியங்களாக இறுதி இராப்போசன விருந்து (Virgin of the Rock) பாறையின் கன்னி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

திவ்யா ஹரிஹரன்
தரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் இலக்குகளும்

எமது நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்க்கையில் எவ்வித இலக்குகளுமின்றி வெறுமையாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இலக்குகள் எதுவுமில்லாததனால் இவர்கள் தாம் நினைத்தபடி வெற்றுப் பொழுது போக்குகளிலும் அரட்டை அடிப்பதிலும் நித்திரையிலும் காலத்தைக் கழிக்கின்றனர். சிலர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதையே பொழுது போக்காகக் கொண்டுள்ளனர்.

ஒருவரின் வாழ்க்கையில் திட்டவட்டமான இலக்குகள் எதுவும் இல்லாவிட்டால் அவரிடம் இயற்கையாக அமைந்துள்ள ஆற்றல்களிலிருந்தும் அவர் பெற்றுள்ள அறிவிலிருந்தும் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ள முடியாது. வாழ்க்கையில் இலக்குகள் இல்லாவிடில் வீணே காலத்தைக் கழித்து தோல்வியையும் விரக்தியையும் எதிர்கொள்ள நோக்கும்.

இன்று குடும்பங்களில் பிளவுகள் ஏற்படுவதற்கும் ஊர்களில் சச்சரவு ஏற்படுவதற்கும் நாட்டில் குழப்பங்கள் நிகழ்வதற்கும் குற்றச் செயல்கள் பெருகுவதற்கும் இவ்வாறு வாழ்க்கையில் இலட்சியமின்றி திரிபவர்கள் முக்கிய காரணமாக அமைகின்றனர்.

இவ்வாறானவர்கள் வாழ்க்கையில் முன்னேறாது காணப்படுவதற்குக் காரணம் அவர்களுக்கு சரியான வாய்ப்புக்கள் கிடைக்காமல் போவதல்ல. மாறாக இவர்கள் வாழ்க்கையில் திட்டவட்டமான இலக்குகளை அமைத்துக் கொண்டு அவற்றுக்காக முயற்சிக்காததனாலேயே இந்நிலைக்கு ஆளாகின்றனர். குடும்பப் பொறுப்புக்கள் இல்லாமை, உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமை போன்ற காரணிகளும் இவ்வாறான துர்பாக்கியசாலிகள் பெருகுவதற்கு காரணமாக அமைகின்றன.

மேலும் சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும் இதற்குக் காரணமாக அமைவதை நாம் மறந்து விடக் கூடாது.

எனவே மாணவர்களாகிய நாம் இலக்குகள் ஏதுமின்றி பயனற்ற வகையில் காலத்தைக் கழிப்பதைக் கைவிட்டு நல்ல இலட்சியங்களை அமைத்துக் கொண்டு வாழ்க்கையைப் பெறுமதி மிக்கதாக ஆக்கிக் கொள்வதன் மூலம் நாம் இந்த அவல நிலையிலிருந்து விமோசனம் பெறலாம்.

சுபாஷினி பாலேந்திரன்
தரம் - 12 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு வளர்ச்சிக்கு தாய்மொழியே அடிப்படை

அன்னை மடியில் குழந்தையாய் அறிந்து கற்ற முதல் மொழி தாய்மொழி. பிறந்தது முதல் பேசிவரும் மொழியே தாய்மொழி. தாயானவள் குழந்தைக்கு உணவூட்டும் போது உணர்வையும் ஊட்டுகிறாள். அதற்கு தாய்மொழியே உதவும். தாயிற் சிறந்த கோயில் இல்லை என்பது போல் தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை. ஒருவள் எத்தனை மொழிகளையும் கற்கலாம் அது தவறல்ல. எனினும் அறிவு வளர்ச்சிக்கு தாய்மொழியே அடிப்படையானது.

தாய்மொழி மூலம் கல்வி பயிலும் குழந்தையே தனது இயல்புகளுக்கேற்ப பூரண திறன்களை வெளிக்காட்ட முடியும் என்பது நவீன கருத்து. தாய் மொழி மூலம் கல்வி பயில்வதே சிந்தனை வளர்ச்சிக்கு துணை புரியும். ஆங்கில மொழியே உயர்கல்விக்கு ஏற்ற மொழி. தாய்மொழி மூலம் எதுவும் சாதிக்க முடியாது என சிலர் கூறுகின்றனர். ஆனால் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்றோரிலும் பார்க்கத் தாய்மொழி மூலம் கல்வி கற்று இவ்வுலகில் விஞ்ஞானிகள் பொறியிலாளர் மருத்துவர்கள் உள்ளனர்.

தாய்மொழியின் மீது ஒவ்வொருவனும் பற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றில்லாதவன் தாயையே பழித்தவனாவான். பெற்று வளர்த்த தாயைக் காட்டிலும் உற்ற தாய்மொழி உயர்ந்தது. தாய்பாலே குழந்தையின் ஆரோக்கியத்திற்கு உகந்தது. அதைப்போல தாய்மொழியே கற்பதற்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் ஏற்றது. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் தாய்மொழி மூலம் கற்றலே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

பிறமொழி மூலம் உயர்கல்வி பெற நினைப்போர் ஒன்றை மட்டும் மனதிற் கொள்ள வேண்டும். பெற்று வளர்த்த தாயை மறந்து வேறொருத்தியை தாயாக நினைத்துக் கொள்வதற்கு அது சமனாகும் என்பதை உணர்தல் வேண்டும். தாய்மொழி மூலம் பெறப்படும் கல்வியே உள்ளத்தில் நிலைக்கும். எனவே கல்வி என்று கூறும் போது அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழியே அடிப்படை என்பதை எவருமே மறக்க கூடாது.

கிருபாணி தேவதாஸ்
தரம் 12- கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பெண்கள் தினம்

மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதற்குக் காரணமாய் அமைத்தவர்கள் உழைக்கும் கீழ்த்தட்டுப் பெண்கள் வர்க்கமே என்றால் ஆச்சரியமாக இருக்கும்.

1789 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் திகதி சுதந்திரம், சமத்துவம், அரசனின் ஆலோசனைக் குழுக்களில் பிரதிநிதித்துவம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸில் உள்ள பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆண்களுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெற வேண்டும் என்றும், வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவதில் இருந்து விடுதலை வேண்டும் என்றும் பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

அரச மாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்காப்பாளர் இருவரையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதை எதிர்பாராத அரசன் அதிர்ந்து போனான். "கோரிக்கைகளை கண்டிப்பாகப் பரிசீலிப்பேன், உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன்" என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப்படுத்தினேன். இயலாது போகவும் அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான். இந்தச் செய்தி ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து கிரிஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட, ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது. இத்தாலியிலும் பெண்கள் இதுதான் சமயம் என்று தங்களது நீண்ட நாள் கோரிக்கையான வாக்குரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். மார்ச் 8 ஆம் நாள்தான் மகளிர் தினம் உலகெங்கும் அமைய ஒரு வித்தாக அமைந்தது.

அமெரிக்காவின் தொழிற்புரட்சி நகர் நியூயோர்க் இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணிநேரம் வேலை செய்து மிகக் குறைவான ஊதியத்தைப் பெற்றனர். 1857 இல் நியூயோர்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1908 இல் வாக்குரிமை கேட்டுக் கொதித்து எழுந்தனர். ஜனாதிபதி தியோடோர் ருஸ்வெல்ட்டே போராட்த்தின் தாக்கம் கண்டு குலைந்து போனார். 1909 இல் அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சியினால் அமெரிக்கா முழுவதும் பெண்கள் தினம் பெப்ரவரி 28 இல் கொண்டாடப்பட்டது.

அதன் விளைவு 1910 இல் 17 நாடுகளிலிருந்து வந்திருந்த பெண்கள் கோர்பன்ஹேகனில் சர்வதேச பெண்கள் மாநாட்டைக் கூட்டினர். சர்வதேச பெண்கள் தினத்தை சர்வதேச அளவில் கொண்டாட வேண்டும் என முடிவுசெய்தனர். அதன் பின் சர்வதேச அளவில் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வரவது மாணவர்களாகிய எங்களுக்கும் ஒரு உத்வேகம் தருகின்றது என்பது மிகையல்ல.

உலகின் முதன்மைப் பெண்மணிகள்

உலகில் முதல் பெண் ஜனாதிபதி : மரியா எஸ்டெலா பெரன்
உலகின் முதல் பெண் பிரதமர் : சிறிமாவோ பண்டார நாயக்க
உலகின் முதல் பெண் நீதிபதி : சான்ட் ராடே ஓ கான்னர்
உலகின் முதல் பெண் பாராளுமன்ற உறுப்பினர்
: விஸ்கவுண்ட்ஸ் நான்சி அஸ்டர்
உலகின் முதல் நோபல் பரிசுபெற்ற பெண் இலக்கியவாதி: செல்மாலா காலாவ்
உலகின் முதல் பெண் விஞ்ஞானி : மேரி கியூரி
உலகின் முதல் பெண் மருத்துவர் : எலிசபெத் பிளக்வெல்
உலகின் முதல் பெண் விமானி : மிஸ்யேஸ் பிங்கல ஸ்பீன்
உலகின் முதல் பெண் காவலர் : ஆலிஸ் வெல்ஸ்
உலகின் முதல் பெண் ரயில் சாரதி : சுரெகா யாதவ்

பாத்திமா நப்லியா
தரம் - 12 விஞ்ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துவோம் வளம் பெறுவோம்

"வாழ்க வளமுடன்" என்ற வார்த்தையை திரும்பத் திரும்பச் சொன்னால் புன்னகையும் முகத்தில் மலர்ச்சியும் ஏற்படும். வாழ்த்தப்படுபவர் முகத்தில் ஆனந்தம் ஏற்படும்.

உலகில் எந்த ஜீவனுமே தனித்து வாழ முடியாது. ஒன்றையொன்று சார்ந்து தான் வாழ வேண்டும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்போடும் நட்போடும் வாழ வேண்டியது அவசியம். அதைவிட்டு விட்டு ஒருவருக்கொருவர் துன்பம் விளைப்பது நல்லதல்ல.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்ளும் விதமாக "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தையை ஸ்வாமி வேதாத்திரி மகரிஷிகள் அவர்கள் அமைத்தார். முதலில் நம்மை நாமே வாழ்த்திக் கொள்ள வேண்டுமாயின் பிறரையும் வாழ்த்துவோம். நாமும் நன்றாக இருந்து அனைவரும் நன்றாக இருக்கப் பிரார்த்திப்பதே இலட்சியம் ஆக வேண்டும். மனிதனிடத்தே உள்ள ஆறாவது அறிவானது மனம், உயிர், மெய்ப்பொருள் என்ற மூன்று மறைபொருட்களையும் உணரத்தக்க ஆற்றலுடையது. இத்தகைய ஆறாவது அறிவைப் பெற்ற மனிதன் தீமைகள்ச் செய்து அதன் வழியே துன்பம் அடைவது அறிவினம் தொடர்ந்து வந்த பழக்கத்தினால் என்னென்ன காரியங்கள் முன்னர் செய்துள்ளமோ. அவையெல்லாம் ஆழப்பதிவாகி விடுகிறது. அந்த பதிவுகள் தூண்டுதல் பெற்று இயக்கம் உண்டாகி மனிதனை தவறான பாதையில் இழுத்துக் கொண்டு போகின்றன. இதனால் மனமானது சக்தி இழக்கின்றது.

நாம் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். "ஒரு செயல நல்லதல்ல செய்யக் கூடாது" என்று ஒரு நேரம் நினைத்தாலும் உடனே மனிதன் மறந்து விடுகின்றான். மறுபடியும் அதே செயலைச் செய்கின்றான். இந்த நிலை மாற வேண்டுமென்றால் எம்மிடமுள்ள தீய பழக்கங்களை எல்லாம் கண்டுபிடித்து ஒவ்வொன்றாக நல்ல பழக்கமாக மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

நாம் வாழும் போது பிறருடன் சினேகமாகத்தான் வாழ்ந்தாக வேண்டும். அவர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு இனிமையானதாக இருப்பதற்காக வாழ்த்தும் போது பகைமையை வைத்துக் கொண்டு வாழ்த்த முடியாது. வாழ்த்தும் போது முதலில் நம்மை நாமே வாழ்த்திக் கொள்வோம். அவ்வாறு சொல்லும் போது உடல் நன்றாக இருக்கும். மனம் நன்றாக இருக்கும். நம்மைச சுற்றிலும் ஒரு நல்ல அலை இயக்கம் இருக்கும். நம்மிடம் தொடர்பு கொள்பவர்களும் நல்லவர்களாக மாறுவார்கள்.

தனிமனிதன் நலமாக அமைதியுடன் வாழ வேண்டுமானால் இந்த உலகம் முழுவதும் வளமாக இருந்தால் தான் முடியும். எனவே உலகம் முழுவதும் அமைதியாகவும், மகிழ்ச்சியுடனும் வளமுடனும் வாழ வேண்டும் எனக் கருதுவோம். உலகம் முழுவதையும் நினைத்து வாழ்த்துவோம்.

நம் மனத்திற்கு முறையாகப் பயிற்சி கொடுத்த சரியான திசையில் கொண்டு செல்வோமானால் மிகப் பெரிய சாதனைகளைச் செய்ய முடியும். இதன் மூலம் மனிதன் நிறைவான மனதையும் குறைவில்லாத வாழ்வையும் பெற முடியும். "வாழ்த்துவோம் வளம் பெறுவோம்".

தயாளினி ரட்ணகுமார்
தரம் - 12 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய முன்னேற்றத்தில் பெண்கள் பங்கு

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்று பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்றேன பெண்களின் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடமுண்டு. முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்கு தனியிடமளித்துள்ளனர் என்பதைச் சங்க நூல்கள் பறைசாற்றுகின்றன. ஔவையார் காக்கை பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பெருமை பெற்றதற்கு வரலாறுமுண்டு.

இறைவனது படைப்பில் ஆண், பெண் இருபாலாரும் சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பேசுவதில் பேதைமையாகும். குறிப்பாகப் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்பின் பண்பே பெண்மை. அறத்தின் வடிவே பெண்மை. கற்பின் உயர்வே பெண்மை. உயிரின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள். பெண்ணைத் தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பமாகவும், பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினர். பெண்ணைச் சக்தியின் வடிவமாபக் போற்றின சமயங்கள், வாழ்க்கைத் துணைவியாகவும் வாழவைக்கும் தாயாகவும் வழி நடத்தி செல்பவளே பெண். அவளுக்கு ஈடாக எதனையுமே எடுத்துரைத்தல் இயலாது. பாரதியார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடந்த வந்தோம்
எட்டும் அறிவானில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காண்"

என்று முழங்கிய பின்னர் தானட பெண்ணுரிமை மலரத் தொடங்கியது பெண்கள் விழித்தெழுந்தனர். மகளிர் வாழ்வில் புதிய ஒளி மலர்ந்தது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

இன்று பெண்கள் சகலதுறையிலும் ஆண்களோடு, சரிநிகர் சமனாகப் பங்கு கொண்டு வருகின்றனர். சமுதாயத்தின் பல்வேறு ஆக்கப்பணிகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை நன்குணர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் பெண்களும் பங்கு கொள்ள வேண்டும்.

சமுதாய முன்னேற்றத்திற்கான சகல துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்கேற்று வருகின்றார்கள் அதனால் அவர்கள் சமூகத்தின் உன்னத நிலையைப் பெற்றுத் திகழ்கிறார்கள். நமது நாடு வளம் பெற நங்கையர் வாழ்வு சிறப்புறச் சமுதாய முன்னேனற்றத்தில் பெண்கள் பெரும் பங்கேற்க வேண்டும்.

இன்று பெண்கள் தம் அறிவாலும் ஆற்றலாலும் உழைப்பாலும் முன்னேறிவருகின்றனர். ஆடவர்க்கு நிகராகச் சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய மகளிர் பங்கு சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் இடம் பெற வேண்டும். இதன் மூலம் மகளிர் வாழ்வும் சமுதாயமும் நாடும் வளம் பெறவேண்டும்.

ராஷிகா.ரா
தரம் - 12 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவப் பெருந்தகை

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றார் பாரதியார். தமிழகத்தை உலகறியச் செய்தவர் வள்ளுவர் என்றும் கூறலாம்.

தெய்வப்புலவர் நல்ல வேளான்குடி மரபினைச் சேர்ந்தவர். இவர் பிறந்து, வாழ்ந்தது, தமிழ் நாட்டிலுள்ள மதுரையிலே ஆகும். இவர் பாண்டிய மன்னனுக்கு உள்பட்டு கருமத் தலைவராக செயலாற்றினர். அதாவது அரசனது கருத்தை மக்களுக்கும் அறிவிக்கும் பணியாகும். இந்தப் பணி புரிந்ததன் காரணமாகவே வள்ளுவன் எனப் பெயர் பெற்றார் எனலாம்.

அருள் உள்ளம் படைத்தவர்கள் தேவர் என சிறப்பிக்கப்படுவார்கள். திருவள்ளுவர் மனிதருள் தேவர் எனவே! தான் திருவள்ளுவத் தேவர் என யாவராலும் சிறப்பிக்கப்படுகிறார். அதுமட்டுமன்றி தெய்வப் புலமை மிக்கவர் என்பதனால் தெய்வப்புலவர் எனவும் அழைக்கப்படுகிறார்.

திருவள்ளுவர் பரந்த நோக்கம் உடையவர். எம்மதத்தையும் சாராது நடுநிலையில் நின்று ஒரு மனிதன் தன் வாழ்க்கை காலத்தில் செய்ய வேண்டியவற்றையும் தவிர்க்க வேண்டியவற்றையும் எளிமையாக இரு வரிகளில் அழகாக ஆணித்தரமாக கூறியவர்.

"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பது முன்னோர் வாக்கு. இங்கு இரண்டு எனக் குறிப்பிடப்படுவது திருக்குறளாகும். திருக்குறள் இரு வரிகளைக் கொண்டது. இவ் அரிய நூல், திருவள்ளுவரால் மொழியப்பட்டதனாலேயே தமிழ்நாடு வான்புகழ் கொண்டது என்றால் மிகையாகாது. ஏனெனில் பைபிள், திருக்குர் ஆன் எனும் நூல்களுக்கு அடுத்ததாக உலகளாவிய ரீதியில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 80க்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட இலக்கியங்களில் முதன்மையாக திகழ்வது திருக்குறள். இது திருக்குறளின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

திருக்குறள் 3 பிரதான பிரிவுகளைக் கொண்டது. அவையாவன, அறத்துப் பால், பொருட்பால், காமத்துப் பால் ஆகும். 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறட்பாக்களை உடையது. ஒவ்வொரு குறட்பாக்களும் தேனிலும் இனியது. வந்த வினைக்கு மருந்தாக உதவுவது வாழ்வியலுடன் ஒன்றுடனொன்று பிணைக்கப்பட்ட அனைத்து விடயங்கயையும் உள்ளடக்கியது. அன்பு, அமைச்சு, அறிவு, இன்சொல், கல்வி, நட்பு, குடி, சூது, பெரியாரைத் துணைக்கொள் என்றவாறு பல தலைப்புகளில் ஒவ்வொரு அதிகாரமும் விளங்குகிறது. இரு வரிகளில் அருமையான பல கருத்துக்கள் பொதிந்துள்ளவாறு திருவாய் மலர்ந்தருளிய திருவள்ளுவரின் ஞானம் எத்தகையது என்பதை வார்த்தையால் சொல்ல இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பரந்த வியத்தகு ஞானமுடைய திருவள்ளுவர் எண்ணு! எண்ணு! நல்லதை எண்ணு! பெரியதை எண்ணு! உயர்வை எண்ணு! சிறப்பை எண்ணு! அழுத்தமாக எண்ணு! ஆழமாக எண்ணு என எத்தனை அழகாக எண்ணத்தக்கவற்றை விபரித்துள்ளார்.

"மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து"
நோக்கக் குழையும் விருந்து"

என்ற குறளில் விருந்தோம்பல் எனும் அரிய கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார் தெய்வப் புலவர்.

இதுமட்டுமன்றி ஒழுக்கம், பணிவு, வறுமை, ஒற்றுமை, ஆகிய நற்கருத்துக்களையும் தன் குறட்பாக்களில் விளம்புகிறார். இவ் அரிதற்கரிய நூலை எமக்களித்த திருவள்ளுவர் இன்றும் போற்றப்படகிறார். திருக்குறள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வழிகாட்டியாகவே அமைகின்றது. திருக்குறளை முற்று முழுதாக கற்று தெளிந்தவர் ஒருகாலமும் மறந்தும் தவறான பாதையில் பயணிக்கமாட்டார் என்பது உறுதி.

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் எளிது"

எனும் குறள் கூறும் அருமையான கருத்து என்னவென்றால் சிறிய காரியங்களை முயன்று வெற்றிபெறுவதிலும் பெரிய காரியங்களிலே முயன்று தோல்வி அடைவது சிறப்பு என்பதே ஆகும். இவ்வாறு 1330 குறட்பாக்களை அருளிச் செய்த திருவள்ளுவரின் அடி பற்றி உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளை கற்றுத் தெளிந்து இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்.

ஜே. அஸ்வினி காயத்ரி
12 - விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதி மயக்கும் மது

இன்றைய இளைஞர்களின் பெரும்பாலும் மது, சிகரட், போதை மருந்து என்பவர்களை உபயோகிக்கின்றனர். மனத்திற்கு துன்பம் ஏற்படும்போது, வீட்டில் ஏதேனும் பிரச்சனைகளுக்கும் போதே சமூகத்தில் ஏற்படும் ஏதேனும் பிரச்சனைகளுக்கு உள்ளாகும் போது, நண்பர்களுடன் ஒன்று சேர்ந்து குதூகளிக்கும் சந்தர்ப்பங்களிலோ இவர்கள் போதைப் பொருள் பாவிப்பது ஒரு நாகரீக பழக்கமாக எண்ணுகின்றனர்.

இன்றைய இளைஞர்கள் மத்தியில் மது போதை நகைச்சுவை இல்லாத நாடகங்களும், சினிமாக்களுமே இல்லை என்று சொல்லலாம். அவர்கள் வெறுமனே நடிக்கின்றார்கள் என்பது உண்மைத்தான். ஆனால் அவர்களுடைய நகைச்சுவை, மிதமீறீ குடிப்பதன் பேரில் பலருக்கு இருக்கும் இரண்டுகெட்டான் கருத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. குடித்து வெறிப்பது கெட்ட பழக்கம்தான் என்று ஒத்துக்கொள்கின்றார்கள், ஆனால் அதில் எந்த தீங்கும் இல்லை என்றும் நினைக்கின்றார்கள் அது மட்டுமல்ல, கூறுகிறார்கள்.

நிஜத்தை எடுத்துக் கொண்டு அதில் எந்த நகைச்சுவையும் இல்லை. மதுபான துஷ்பிரியோகம் உலகெங்கிலும் வாழும் இளைஞர்களின் உடலாரோக்கியத்தை பாதிக்கும் மிக ஆபத்தான பழக்கங்களின் ஒன்று என உலக சுகாதார நிறுவனம் மதிப்பிடுகிறது. புகையிலைக்கு அடுத்ததாக, அடிமைப்படுத்தும் வேறெந்த வஸ்துவின் துஷ்பிரயோகத்தை விட மதுபான துஷ்பிரயோகத்தாலே அதிக மரணங்களும் வியாதிகளும் ஏற்படுகின்றன. மேலும், அமெரிக்க பொருளாதாரத்தில் மட்டுமே ஆண்டுக்கு 18,400 கோடிகரும் அதிகமான டாலரை இது விழுங்கிவிடுகிறது.

இந்த உண்மைகளின் மத்தியிலும், மிதமீறி குடிப்பதும் தவறு என்பதை அநேகமானோர் ஏளனமாக எடுத்துக்கொள்கின்றனர். நீண்ட காலம் துஷ்பிரியோகம் செய்வதால், ஏற்படக்கூடிய தீங்கான விளைவுகளை ஒப்புக்கொள்கின்ற போதிலும், எப்போதாவது குடித்து வெறிப்பதில் எந்தத் தவறுமில்லை என்றே அவர்கள் நினைக்கின்றார்கள்.

உலகில் சில இடங்களில் இளைஞர்கள் மத்தியில் குடிவெறி என்பது பெரிய மனிதனாக்கிவிட்டதற்கு அடையாளமாக கருதப்படுகிறது. சுகாதார நிறுவனங்கள் கடும் எச்சரிக்கை விடுத்தப் போதிலும் கூட, இன்றைய இளைஞர்கள் மத்தியில் எதுவும் சாத்தியமில்லாமல் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக போதையில் இருக்கும் போது மனிதர்கள் யோசனை இல்லாமல் நடக்கிறார்கள். ஆபத்தான அநேக காரியங்களை செய்கின்றனர். இன்று இளைஞர்களுக்கு பீடித்திருக்கும் எல்லா சமூக தொல்லைகளிலும் மிக மோசமானது மது, போதை துஷ்பிரயோகமே எனச் சொல்லப்படுகிறது.

இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் ஒரு காட்சிப் பொருளாக மட்டும் கருதி அதனை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அதனை அருந்தாந்தீர்கள். மாணவர்களாகிய நாம் நம் சூழலில் தென்படும் இத்தகைய நடவடிக்கைகளைக் காணும் போது நம்மாலாகக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய அளவு தைரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். என்பது இக்காலக் கட்டத்தில் மிக அவசியமானதாகும்

சதுர்கா குணசேகரன்
12 - கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் திரு. சாண்டில்யன்

இந்திய எழுத்தாளர் திரு. சாண்டில்யன் அவர்களின் புத்தகங்கள் சுமார் நூற்றுக்கும் அதிகமாக காணப்படுகின்றது. அப்புத்தகங்களில் சில உங்களுக்காக. கடல் வேந்தன், ராணியின் கனவு, பல்லவ திலகம், நாக தேவி, மோகினி வனம், கடல் புறா, சேரன் செல்வி, ஜலமோகினி, மங்களா தேவி, அலை அரசி, ராஜ்யஸ்ரீ போன்ற பல புத்தகங்கள் இவரது படைப்பாகும். இவர் நாவல்கள் மட்டுமல்லாது பக்தி நாவல், சமூக நாவல்கள், போராட்டங்கள் என்பவற்றையும் எழுதியுள்ளார். உதாரணம் புரட்சி பெண், கம்பர் கண்ட பெண்கள், போராட்டங்கள் சினிமா வளர்ந்த கதை என்பவை அவற்றில் சிலவாகும். கடல் புறா, மன்னன் மகள், யவ்வன ராணி என்பன மிக பிரசித்தி பெற்றவையாகும்.

இவரது வெளியீடுகள் இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கையிலும் பிரசித்தி பெற்று காணப்படுகிறது. இவரது கதைகள் இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்து மக்களின் கோரிக்கைக்குகினங்க புத்தகங்களாக இவரால் வெளியிடப்பட்டவையாகும். இப் புத்தகங்களின் சிறப்பம்சமானது இந்திய வரலாற்றை அடிப்படையாக கொண்டதும் அக்கால இளவரசன், இளவரசி, போர்களையும் சிறந்த மொழி நடையும் கொண்டு வர்ணணைகள் மூலம் உணர்ச்சியையும், காட்சிகளையும் கண்முன் கொண்டு வரக் கூடியதுமாக இருக்கிறது.

இவ்வாறு காட்சிகளையும், உணர்வுகளையும் கொண்டுவந்த இவர் 1987ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ம் திகதி இறையடியைச் சேர்ந்தார். இவரின் ஆசைப்படி இவரது புத்தகங்களை வாசிக்து மொழி வளர்ச்சியை பெறுவதோடு இந்திய வரலாற்றை அறிந்து கொண்டு உங்கள் நண்பர்களுக்கும் குட்டிக் குட்டிக் கதைகளைச் சொல்லிக் கொடுங்கள்.

ஆயிஷா நிஸாம்டீன்
தரம் 12 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களுள் மறைந்திருக்கும் விஞ்ஞானம்

கருமங்களை இலக்கிக்கொள்வதற்காக இயந்திரங்களை உருவாக்கிக் கொண்டிருந்ததிலிருந்து, மனிதர்களாக இயந்திரங்களை உருவாக்கும் அளவிற்கு நாம் வாழும் 21ம் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் உச்ச கட்டத்தை நோக்கி பிரவேசித்துக்கொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தின் விந்தைகளைக் கண்டு வியந்து கொண்டிருக்கும் மாந்தராகிய நமக்கு இவ் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பலவற்றின் அடிப்படைகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன எனும் விடயம் ஆச்சியரியத்தை ஏற்படுத்துகிறது. இவ்விடயத்தைப் பற்றி சிறிது நோக்குவோம்.

இன்று நாம் தொலைத்தூர நாடுகளுக்கு மிக இலகுவாகவும், சொகுசாகவும் விமானங்கள் மூலம் பயணிக்கின்றோம். ரைட் சகோதரர்களின் அரியதகு கண்டுபிடிப்பாகும். இருப்பினும் இராமாயணத்தில் இராவணன் சீதையை கவர்ந்து புஸ்பக விமானத்தில் பயணித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விமானம் விண்ணிலும் மண்ணிலும் செல்லக்கூடியது, இராமனும் புஸ்பக விமானம் மண்ணில் சென்ற தடயத்தை பின்பற்றி சென்றதாகவும் சிறிது தூரத்தின் பின் அத்தடயம் புலப்படாமலும் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் நாம் அறியக் கூடிய விடயமானது புஷ்பக விமானம் நிலத்தில் சிறிது தூரம் சென்று பின் மேலெழுந்துள்ளது என்பதாகும். நவீன விமானங்கள் கூட நிலத்தில் சிறிது தூரம் ஓடிப் பின்பே லேலெழுந்து பறக்கின்றது.

மகாபாரதக்கதையை எடுத்துக்கொண்டால் பாரதப்போருக்காக பல விதமான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாகாஸ்திரம், கருடாஸ்திரம், வர்ணாஸ்திரம், அக்கினியாஸ்திரம், பிரம்மாஸ்திரம், சப்தவேதி மற்றும் கிருஷண பரமாத்மாவின் கையிலிருக்கும் சக்ராயுதம் போன்றன அவற்றுள் சிலவாகும். பிரம்மாஸ்திரமானது நொடிப்பொழுதில் பல லட்சக்கணக்கான உயிர்களை அழித்துவிடும். காடுகளும் பூமியும் தீப்பற்றி எரியும், சுற்றுச்சூழல்லெல்லாம் நஞ்சுக் கலந்து விடும், உணவுப் பொருட்களெல்லாம் நஞ்சாகி விடும். இதுபோன்ற பல அழிவுகளை ஏற்படுத்தக்கூடியது. ஜப்பானில் ஏற்பட்ட அணுகுண்டு தாக்கத்தின் விளைவுகளும் இத்தகையனவாகவே இருக்கின்றது. பிரபல ஆராய்ச்சியாளர்கள் பலர் பிரம்மாஸ்திரத்தின் வீரியம் அணுகுண்டின் தாக்கத்திற்கு ஒத்தவை என கூறியுள்ளனர். இதற்கு மேலும் ஒரு ஆதாரமாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதர்களின் மண்டையோடுகள் சிலவற்றில் அணுக்கதிர் வீச்சின் தாக்கங்கள் காணப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் துரோனாச்சாரியார் வில்வித்தையில் வல்லவனான அர்ச்சுணனுக்கு ஒரு அஸ்திரத்தை விட்டால் அது மரத்திலுள்ள எல்லா இலைகளையும் ஊடுருவிப் பாயக்கூடிய வித்தையை கற்றுக்கொடுத்துள்ளார். சிரவண்ணன் குளத்தில் நீர் அள்ளும் போது யானை நீர் குடிக்கும் ஒலி என நினைத்து தசரதர் விட்ட அஸ்திரம் ஒலியைத் தேடிச் சென்று தாக்கும். இவ் அஸ்திரம் "சப்தவேதி" எனப்படும். கிருஷணரின்சக்ராயுதம் சென்று தாக்கி விட்டு மீண்டும் திரும்பிவரும். இவை போன்றே ஆயுதம் ஒன்று சீனர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பெயர் "பூமராங்" ஆகும். இவை போன்றே இன்னும் பல ஆதாரங்கள் தமிழ் இலக்கியங்களில் காணப்படலாம்.

கல் தோன்றா மண் தோன்றா காலத்தின் முன் தோன்றிய மூத்த மொழியான நம் தமிழ் மொழி, செம் மொழியாம் நம் தமிழ்மொழி, என்றும் அழியா புகழுடைய நம் பொன்மொழி உலக மொழிகளுள் முதன்மையானது என்பது இதன் மூலம் புலப்படுத்தப்படுகின்றது.

நிகன்யா மணிராஜா
தரம் - 13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூற்றாண்டின் கோலாகலமான திருமணம்

இருபத்தோராம் நூற்றாண்டின் உலகத்தின் கவனத்தை ஈர்த்த திருமணம் இளவரசர் வில்லியம்ஸ்ஸுக்கும் கேட் மிடில்டன் எனும் நங்கைக்கும் இடப்பெற்ற திருமணமாகும். இளவரசர் சார்ஸ்ஸுக்கும் உலக மக்களின் மனதை ஈர்த்த டயனா இளவரசிக்கும் பிறந்த மூத்த மகன் வில்லியம் என்பதால் உலக வாழ் மக்கள் அனைவரும் இத்திருமணத்தை மிக ஆவலாக எதிர்ப்பார்த்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2011 ஏப்ரல் 29ம் திகதி லண்டன் நகரில் அங்கு நேரப்படி காலை 11.00 மணியளவில் வெஸ்ட் மினிஸ்டர் அபே தேவாலயத்தில் இளவரசர் வில்லியம் கேட் மிடில்டன் எனும் நங்கையைக் கரம்பிடித்தார்.

இளவரசர் வில்லியம் ஐரிஷ் படைத்தளபதிகளுக்கான சிகப்பு நிற ஆடை அணிந்திருந்ததுடன், கேட் அரச பாரம்பரிய திருமண முறைப்படி வெள்ளை நிற கவுன் அணிந்திருந்தார்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 அரச குடும்பத்தினரும், சர்வதேச பிரபலங்கள், தலைவர்கள் உட்பட 1900 பேர் இத் திருமணத்தை சிறப்பிக்க நேரடி வருகை தந்திருந்தனர். இத்திருமணத்தினை ஸ்கை நியூஸ், பி.பி.சி., க்ளோபல் நியூஸ் ஆகிய சேவைகள் நேரடி ஒளிபரப்பினை மேற்கொண்டதுடன் அதனை சுமார் 100 கோடி பேர் கண்டுகளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இத் திருமணத்திற்காக லண்டன் நகர வீதிகள் அலங்கரிக்கப்பட்டதுடன் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இந் நூற்றாண்டில் இடம்பெற்ற கோலாகலமான திருமணமாக வில்லியம் - கேட் திருமணம் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது. அத்தோடு அத்திருமணம் உலக மக்கள் மனதிலும் நீங்கா இடம்பிடிக்கும் என்பது திண்ணம்.

விநாயகமூர்த்தி ஸ்ரீ பவித்ரா
தரம் 13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகமும் தமிழும்

மிகத்தொன்மைக் காலம் தொட்டு தமிழ் நிலையான மொழியாக விளங்குகின்றது. இலக்கியம் தழுவிய கலை வளர்ச்சி தமிழுக்கு நிலைத்து நிற்கும் ஆற்றலை தந்திருக்கிறது. இதமான தமிழை உலகத் தாய்மொழி என அழைக்கின்றனர். இத்தகைய செம்மொழியினை கற்றுத்தேர்ந்த உலகறிஞர்கள் பலர் இவ்வுலகில் நிலையான புகழ்பெற்றுள்ளனர். அண்மையில் உலகத் தமிழ் செம்மொழி மகாநாடு நடைபெற்று யாவரும் அறிந்ததே. ஊடகம் உன்றால் என்ன? என்ற வினா உங்களுக்குள் எழக்கூடும். ஆம் ஊடகம் என்றால் என்ன என்பதைப் சற்று பார்ப்போம்.

செய்திகளையும் தகவல்களையும் மானிட வர்க்கத்திற்கு தெரியப்படுத்த பயன்படுத்துகின்ற தொலைக்காட்சி வானொலி இணையம், கணணி, பத்திரிக்கை போன்றவற்றையே ஊடகம் என்கின்றோம். இவ்வகையான ஊடக சாதனங்கள் இன்று பல்வேறு மொழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக கணணி, தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கை போன்றவற்றில் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதை கருதலாம். ஊடகத்துறையில் காணப்படும் புதியதொரு பரிமானம் விளம்பரம் ஆகும். இவ் விளம்பரங்கள் நாட்டில் மும் மொழியிலும் ஒளிபரப்பப்பட வேண்டும் என அரசு தெரிவித்து உள்ளது. தமிழ் மொழியின் சிறப்பினை அறிந்த அரசு தமிழ் மொழியினை அரசகர்ம மொழியாக மாற்றியுள்ளது.

ஊடகத்துறையில் தமிழ் மொழியின் செல்வாக்கு காரணமாக மக்கள் சில நன்மைகளைப் பெறுகின்றனர். படித்தோர் முதல் பாமரர் வரை அனைவராலும் தகவலை சமநோக்கில் அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமல்ல இலக்கிய வளர்ச்சி ஏற்படுகின்றது. மாணவர்கள் தமது சொந்த மொழியிலேயே தகவல்களை அறியமுடிகின்றது.

இவ்வாறான சில நன்மைகளைப் போல தீமைகளும் இருக்கவேச் செய்கின்றன. உதாரணமாக வானொலி ஒலிப்பரப்புகளை எடுத்து நோக்குவோமானால் அவற்றில் பன்மொழிகள் கையாளப்படுகின்றன. தமிழ் நிகழ்வாயினும் அவற்றில் பல ஆங்கில சொற்கள் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறான காரணத்தால் தனித் தமிழ் மொழியின் சொல்லுக்கு கேள்வித்திடமாகின்றது. ஊட த்துறையில் தமிழ் ஓரளவு வளர்ந்து கொண்டு போகும் போது கூட ஏதோவொரு பக்கம் சரிந்து கொண்டும் போகின்றது எனலாம்.

இப்படி அறிந்து கொண்டு போவதை நாம் குறையாகக் கருதலாம். இதற்கான காரணம் என்னவெனில், நவீன மேலைத்தேய நாகரிகத்துடன் கைகோர்த்து இருப்பதன் காரணமாக எங்களுக்கு மொழிகளே பெரிதும் இலகுவாக, அழகாக தென்படுகின்றது. இதனால் செம்மொழியில் உரையாடுவதை கேட்பதற்கு எம் செவிகள் அஞ்சுகின்றன.

கணணி, இணையம் போன்றவற்றில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டாலுமே கூட, கணணியில் காணப்படும் தமிழ் தட்டச்சை கையாளுவதும், கைகளில் தமிழ் பத்திரிகைகளை வைத்திருப்பதும் இன்றைய சமூகத்தில் குறையாகக் காணப்படுகின்னறது. "வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும்" என்ற தற்காலத்தில் ஊடகத்துறையைப் பொறுத்தவரையில் தமிழ் உச்ச நிலையில் இருக்கின்றது எனலாம்.

ஊடகத்துறையில் தமிழை செம்மையாக பேணுவது மாணவர்கள் முயற்சிக்க வேண்டும், தமிழ்வளமும், உயர்ந்து, தமிழர்களாகிய நாம் பெருமையடையும் நாள் வரவேண்டும்.

மேகலா தனராமசிங்கம்
தரம் 13 - கலைபிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலஸ்ட்ரோல்

கொலஸ்ரோல் என்பது இவிப்பிட்டு போன்ற நீரில் கலையாத எண்கெய் போன்ற ஒரு பளிங்குப் பாதார்த்தமாகும். உயிரிணங்களுக்கு அவசியமான உணவகை எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஆனால் அதன் அளவு குருதியில் பேணப்படுவது அவசியமாகும்.

எமது உடலுக்குத் தேவையான கொலஸ்திரோல் 60% உணவுகளில் இருந்து பெறப்படுகின்றது. மிகுதி உடலினால் சுயமாகத் தயாரிக்கப்படுகின்றது. உடலினால் தயாரிக்கப்படும் கொலஸ்திரோலின் 75% எமது உடல் கலங்களினாலும், 10% ஆனது ஈரள் கலங்களினாலும் 10% ஆனவை சிறு கிடலிளுள்ள கலங்கள் மூலமாகவும் தொடுக்கப்படுகின்றது.

கொலஸ்ரோலின் உள்ள அறு சேபம்:-
கொலஸ்ரோல் இலிப்பிட்டு போன்று அறுசேபத் தன்னமயைக் கொணபுருக்கின்றது. எமது உணவுக் கால்வாய்த் தொகுதியில் பெரும் பகுதி முன்சிறுகுடல், இடை சிறுகுடளினால் அகத்துறிஞ்சப்படுகின்றது. இவ்வகத்துனிச்சலுக்கு பித்த நீர் அவசியமாகும். அதாவது பித்த நீர் கொலஸ்ரோல் துணிக்கைகளின் இடைக்கவர்ச்சி விசையைக் குறைத்து அகத்துறிஞ்சலுக்கு உதவுகிறது. இவ்வாறு அகத்துறிங்சப்பட்ட பொலஸ்ரோல் குருதியின் காவிகளான கொழுப்பும், புரதங்கள் மூலம் காவப்படுகின்றது. இவ்வாறு காவப்படும் கொலஸ்ட்ரோல் தேவையான இடங்களுக்குப் போக மிகுதி நோய்களைத் தோற்றுவகிக்கின்றது.

கொலஸ்டரோல் அதிகம் காணப்படும் உணவுகள்:-
கொலஸ்ட்ரோல் ஆனது ஒரு போதும் தாவர உணவுகளில் காணப்படுவதில்லை. விலங்கு உணவுகள் மூலமே கொலஸ்ட்ரோல் கிடைக்கின்றது. அதாவது இறைச்சி, மீன், முட்டை, மஞ்சட் கரு, மூளை, பால் போன்றவற்றில் அதிகளவில் காணப்படுகின்றது. தேங்காய் எண்ணெய்யில் கொலஸ்ட்ரோல் இல்லை. எனினும் மேலதிகமாகப் பாவிக்கப்படும் இவ்வெண்ணெய்கள் கொலஸ்ட்ரோல் உருவாக்கத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்க நேரிடலாம். அப்போது கொலஸ்ரோலின் அளவு குருதியில் உயர வாய்ப்புண்டு. பச்சை காய்கறிகள், உலர்ந்த விதைகள், வெள்ளைப்பூடு போன்றன உடலிலுள்ள கொலஸ்ட்ரோலைக் கரைக்கவல்லன.

கொலஸ்ட்ரோலின் அணுகூலங்கள்:-
உடல் கலங்களின் கலமென்சவ்வின் கூறாக கொலஸ்ட்ரோல் உள்ளது. இது கலமென்சவ்வின் இலகு நிலையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாக உள்ளது. இதன் அளவு அதிகரிக்கும் போது கலமென்சவ்வின் உட்புகவிடும் திறன் குறைவடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ எமது ஈரற்கலங்களில் ஈராகப்படும் பித்த நீர்த்தொகுப்பிற்கு கொலஸ்ட்ரோலின் ஒரு வடிவமான 7 Hydroxy Choloestrol தேவையாக உள்ளது.

உடலுக்குத் தேவையான விற்றமின் $D_2$ யை சுயமாக நாம் தொகுப்பதற்கு தேவையான வடிவத்தை கொலஸ்ட்ரோல் வழங்குகின்றது.

உடலின் துணைப்பால் விருத்திக்குத் தேவையான ஓமோன்கள் (Oestrogen, Testoesteroen) உருவாக்குவதற்கு உதவுகின்றது. உடல் வெப்பக் காவெளியாகவும் தொழிற்படுகின்றது.

கொலஸ்ட்ரோலின் பிரதி கூலங்கள்:-

இதன் அளவு குறிப்பிட்ட அளவைவிடத் தாண்டும் போது மேலதிக கொலஸ்ட்ரோல் குருதியில் தேங்குகின்றது. இவ்வாறு தேங்கப்பட்ட கொலஸ்திரோல் நாடிகளின் உற்சுவரில் புகுந்து அதன் விட்டத்தைக் குறைக்கின்றது. இதனால் நாடியினுள் குருதி தேக்கம் அமைந்து உயர் குருதி அமுக்கம் உருவாகின்றது. எனவே தான் உயர் குருதி அமுக்கம் உடையவர்கள் கொலஸ்ட்ரோல் உடைய உணவுகளைத் தவிர்ப்பது நன்று.

✍ இதயத்திற்கு குருதி வழங்கும் முடியுரு நாடியின் சுவர்களில் படிவதால் இதயம் சம்பந்தமான நோய்கள் வந்து இறக்க நேரிடலாம்.

✍ மூளைக்குத் தேவையான இரத்த ஓட்டத்தை கொலஸ்ட்ரோல் படிவு குறைப்பதால் மயக்கம், கோமா போன்ற நிலைகள் தோற்றலாம்.

✍ மேலதிகக் கொலஸ்ட்ரோல் பித்தக்கல் போன்றவற்றை உருவாக்கி உடலில் ஏனைய அனுசேபங்களை இடையூறு செய்யலாம்.

✍ ஆகவேதான் உடலில் கொலஸ்ட்ரோலின் அளவு பேணப்பட வேண்டியது அவசியமாகும். உடலிலுள்ள கொலஸ்ட்ரோலின் அளவைக் குறைப்பதற்கு வைத்திய உதவியை விட நமது சுயகட்டுப்பாடு அவசியம்

அம்ரியா
தரம் 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ச்சுவட்டெரி பொருள்

டீஸல் என்ஜினை கொண்ட வாகனங்களில் பயன்படுத்தப்படும் திரவ எரிப்பொருளை நாம் "டீஸல்" என்கிறோம். இது பெற்றோலியத்திலிருந்து பெறப்படுவதனால் இது தொழில்நுட்ப ரீதியில் "பெற்ரோ-டீஸல்" என அழைக்கப்படும்.

தாவர எண்ணைய்கள் விலங்கு கொழுப்புகள் முதலிய உயிர் சார்ந்த பதார்த்தங்களை மூலப் பொருட்களாக கொண்டு இரசாயன முறையில் தொகுக்கப்படக் கூடியதான, பெட்ரோ டீசலைப் போன்ற ஒரு திரவ எரிபொருளையே "Bio - Diesel" பற்றிய ஆர்வம் உலகு எங்கும் அதிகரித்து வருவதை காண்கிறோம்.

இங்கு நாங்கள் முக்கியமான விடயமொன்றை கவனத்தில்கொள்ள வேண்டும். பிலிபைன்ஸ் போன்ற பல நாடுகளில் தேங்காய் எண்ணைய், பாம் எண்ணைய்களை நேரடியாகவே டீஸல் வாகனங்களில் எரிபொருட்களாக பயன்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு பயன்படுத்த முன்னர் டீஸல் என்ஜின்கள் அமைப்பில் சில மாற்றங்களைச் செய்வது அவசியமாகிறது. இப்படி நேரடியாகப் பயன்படும் தாவர எண்ணைய்கள் "SVO" என அழைக்கப்படும்.

"பயோ - டீஸல்" என்பது தாவர எண்ணைய்களை அல்லது விலங்கு கொழுப்புகளை இரசாயன செயன்முறை ஒன்றுக்கு உட்படுத்தி பெறப்படுகிறது. என்ஜினின் எவ்வித மாற்றமும் செய்யாமலேயே அதனை உபயோகிக்கலாம். நாம் வீட்டிலேயே bio-diesel ஐ தயாரித்து கொள்ள முடியும். இதற்கு தொழில்நுட்ப அறிவு அவசியமாகாது. பயோ - டீசலின் தூய்மையை குறிப்பதற்கு B எனும் அளவுத்திட்டம் உபயோகிக்கப்படும். 100% தூய்மையானது "B 100" என குறிக்கப்படும்.

பெற்ரோ டீசலுடன் ஒப்பிடும் போது பயோ-டீசல் பல அனுகூலம் கொண்டது. இது நச்சு தன்மையற்றது மிக விரைவாக தகனம் அடையும். எனினும் என்ஜின்களில் வெளிவரும் புகையில் நைதரசன் ஒட்சைட் காணப்படுவதுடன் தேவைக்கேற்ப உற்பத்தியும் குறைவாகவே காணப்படுகிறது. அத்துடன் பெற்ரோ-டீசலின் விலையை விட பயோ-டீசலின் விலையும் அதிகமாக காணப்படுவதனால் இதன் பயன்பாடு தற்போது குறைவாகவே காணப்படுகிறது.

பாத்திமா ஹாலிதா ஹுவைஸ்
தரம் 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதையின் கதை

சிறுகதை என்ற இலக்கியவகை உலகில் தோன்றி வளர்ந்து இன்றைக்கு 125 ஆண்டுகள் ஆகின்றன. புனைகதை இலக்கியத்தின் ஒரு பிரிவான சிறுகதை இலக்கியம் குறுகிய காலப்பகுதியில் தமிழிற் தோற்றம் பெற்றதாயினும், அது அக்காலப்பகுதியில் மிகவும் வளர்ச்சி கண்டது. மேலை நாட்டில் சிறுகதைகள் ஓர் தனி இலக்கியமாக வளர்வதைக்கண்டு தமிழ் மொழியிலும் சிறுகதை வளர்ச்சியடைய பாடுபட்டவர் வ.வே.சு. ஐயர் என்பவர் ஆவார். வ.வே.சு. ஐயரின் "மங்கையற்கரசியின் காதல்" என்ற சிறுகதை மக்கள் மனதில் இன்றும் அழியா இடம் பெற்றுள்ளது. சிறுகதைகள் எழுதும் போது நாம் சில விடயங்களை கருத்தில் கொள்ளல் நன்று. சிறுகதைகளில் செம்மையான பாத்திர வார்ப்புடையதாக அமைதல் வேண்டும். மற்றும் சொற்சிக்கனமும் இன்றியமையாததாகும். நாம் எடுத்த கதைப் பொருள் உணர்ச்சி புலப்பட விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் உயிர்த்துடிப்பும், கதைக்கேற்றதான ஆரம்பமும், முடிவும், திட்டமும் இருத்தல் வேண்டும். சிறுகதைக்கு என சில கட்டுபாடுகள் உண்டு. அதாவது ஒரே முறையில் படித்து முடிக்கக்கூடியதாகவும் இலகுவானதாகவும் இருத்தல் அவசியம். சிறுகதையில் நீண்ட வருணனை இடம் பெறக்கூடாது. மற்றும் சிறுகதையின் கருவுக்கோ உணர்ச்சிக்கோ தொடர்புபடாத வருணனை இடம் பெறக்கூடாது. சிறுகதை அளவில் சிறிய கதையாக இருந்தாலும், அதனுள் ஒரு முழுமை நைக்க வேண்டும். சிறுகதையின் தொடக்கம் வாசகரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டக்கூடிய வகையில் அமைந்திருத்தல் இன்றியமையாதது. சமகால நிகழ்வுகள் கருப்பொருளாக கொண்டே இன்று பல சிறுகதைகள் எழுகின்றன. சிறுகதைகள் மக்கள் மத்தியில் நல்ல படிப்பினைகளை கூறுவதாகவும் அமைகின்றது.

யோகரத்னம் லோகராணி
தரம் 13 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியக் கல்வியின் அவசியம்

அபிவிருத்தியடைந்த நாடுகளில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கான வழிமுறைகளினால் தமது கலாசாரம் மட்டுமல்ல பிற நாடுகளிலும் மக்களின் கலாசாரம் சீரழிக்கப்படுகிறது. அணு ஆயுதங்கள், யுத்தங்கள், இணையத்தளப் பயன்பாடு போன்ற செய்ற்பாடுகள் மிகவும் பரந்த அளவில் நடைபெறுகின்ற அதேவேளை ஒவ்வொரு மனிதனும் தத்தமது விழுமியங்களிலிருந்து வெகு வேகமாக விலகி வருகின்றனர். குறிப்பாக சமூகங்களிடையேயும், பலவின மக்களிடையேயும் ஒற்றுமையின்மை ஏற்பட்டு வருகின்றது.

பெற்றோர்கள், பிள்ளைகள், முதியோர்கள், இளம்யுவதிகள் என்போரிடையே விழுமியங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மை காணப்பட்டாலும் சில முரண்பாடான தீர்மானங்களின் காரணமாக அவ்விழுமியங்களில் குறைப்பாடுகள் ஏற்படுகின்றன. இதனால் தான் விழுமியக்கல்வி வளர்ந்துவரும் எல்லா சமூகங்களுக்கும், நாடுகளுக்கும் இன்றியமையாததாகின்றது.

ஒரு மனிதன் தன் வாழ்வில் ஜெய்த்திட வேண்டுமென்றால் அவனுக்கு விழுமியக்கல்வி அவசியமாகின்றது. எனவே மனித வள செலுத்துகின்றது. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனிடம் அறிவும், திறமையும் காணப்படும். காரணம் பாடங்கள் திட்டமிடப்படுவது அறிவையும், திறமையையும் அடிப்படையாக கொண்டேயாகும். எனவே விழுமியப் பழக்கவழக்கங்கழைள பாடத்திட்டத்திற்கு புறம்பாக எடுத்துக் காட்ட அநேகமானோர் முயலுவதில்லை. இருப்பினும் சமய [illegible]டத்துடன் இணைத்து இவ்விழுமியக் கல்வியை மாணவரிடையே புகட்டும் நோக்கில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளமை ஈண்டுமனங்கொள்ளத்தக்கது. இதிலிருந்து சிறந்த சமூக மயமாக்கலுக்கு சிறப்பான பழக்கவழக்கங்கள் அடித்தளமாய் அமைகின்றன.

அந்த வகையில், விழுமியக் கல்வியில் பணிவு, நேர்மை, கண்ணியம் போன்ற சமூக வாழ்விற்கு அவசியமான குண நலன்களை கல்விக்கோட்பாடுகளில் உள்ளடக்க வேண்டும் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும். சில நாடுகளில் விழுமியக்கல்வி மத நிறுவனங்களிடையே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தை எடுத்துக்கொண்டால் மத அடிப்படையிலான விழுமியங்களே வழக்கில் இருந்து வருகின்றது. மேலும் சோவியத் ரஷ்யா, சீனா, கியூபா போன்ற குடியரசு நாடுகளில் விழுமிய முறைகள் சட்டத்திட்டங்களில் கீழ் சமூக நன்மைக்காக இன்றும் பாதுகாக்கப்பட்டே வருகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒழுக்க கல்வியை பல மத நிறுவனங்கள் கற்பித்து வருகின்றன என்றாலும், அத்தகைய அறநெறி கல்வி நிலையங்களுக்கு எத்தனைப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை அனுப்ப முன்வருகின்றனர்? எனவே பல பிள்ளைகளுக்கு விழுமியக் கல்வி தற்செயலாகவே ஊட்டப்படுகிறது. ஒழுக்க விழுமியம் புகட்டப்பட வேண்டிய முக்கிய இடம் குடும்பமே ஆகும். நேர்மை, பெரியோரை மதித்தல், உதவுதல், ஒற்றுமை இவைகளையெல்லாம் பற்றி பிள்ளைகள் குடும்பத்திலிருந்தே அதிகமாகப் பெற்றுக்கொள்கின்றனர். எனவே இதற்கு குடும்பத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

வரலாறு மூலம் மனித வாழ்வில் சரி எது பிழை எது என கற்பிக்க முடியும். கணிதம் மூலம் நியாயமான முறைகளை கற்க முடியும். இது போலவே பாடவிடயங்கள் ஒவ்வொன்றும் அவ்வவ் பாடங்களின் மூலம் ஏதோவொரு விழுமியத்தினை உணர்த்துகிறது. மேலும் மாணவர்களுக்கு இலக்கிய, சமூக, சமய அறிவு புகுத்தப்பட்ட நூல்களை வாசிக்க சந்தர்ப்பம் கொடுப்பதோடு, அவர்களை விழுமிய வெளிப்பாடுகளையுடைய தொலைக்காட்சி நிகழ்வுகள், சுற்றுலாக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும்.

விழுமியக்கல்வி என்பது மனித நடத்தை, சமூக செயற்பாடுகள் என்பவைற்றோடு இணைந்ததே தவிர இது ஒரு அறிவு மட்டமல்ல. விழுமியமானது வகுப்பறை விளையாட்டு மைதானம், நூலகம், ஆய்வு கூடம், பாதை, பண்ணை, வீடு போன்ற எல்லா இடங்களிலும் இருக்க வேண்டியதும், கடைப்பிடிக்க வேண்டியதுமாகும். எனவே விழுமியக் கல்வியானது ஒரு குறித்த நபரினதோ பாடத்தினதோ அல்லது ஒரு குறித்த நிறுவனத்தினதோ பொறுப்பல்ல. அது பொதுவானது.

வளமான சமூகத்தை விரைவில் உருவாக்குவதற்காக இன்றைய இளம் சமுதாயத்தினரின் விழுமியக்கல்வியின் விருத்திக்கு வழிசமைக்க வேண்டும். எனவே விழுமியக்கல்வி மூலம் சீரழிந்துள்ள எமது சமுதாயத்தை சீர்செய்வோம்!

ஜெயகுமார் நிதூர்ஷா
தரம் 13 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் நீதிப்பாடல்களும்

தமிழ் மொழியைப் பக்தியின் மொழி, அறத்தின் மொழி, அன்பின் மொழி என்றெல்லாம் கூறுவார். அம் மொழியே எம் செம்மொழி. செம்மொழித் தமிழ் கொண்ட இலக்கியங்கள் ஏராளம். அதில் நீதிப் பாடல்கள் முக்கியமானவை.

நீதி என்றால் என்ன? "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமே நீதி ஆகும்" எனவே சமுதாயத்தில் மனிதன் செய்யக் கூடிய காரியங்கள் எவை என விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை செய்வதே விதித்தன செய்தல் ஆகும். எவற்றை மனிதன் செய்யக் கூடாது என விலக்கப்பட்டுள்ளதோ அதுவே விலக்கியன ஒழித்தல் ஆகும். தமிழில் மிகப் பழங்காலத்திலிருந்தே நீதிப் பாடல்கள் நிறைய உள்ளன. நீதி இலக்கியங்களும் உள்ளன. திருக்குறல் உலகப் புகழ் ரொற்ற நீதி நூல் ஆகும். அதில் "அறன் வலியுறுத்தல்" எனும் அதிகாரம் அருகிறது. அதில் "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தாறன் ஆகுல நீர பிற" என்று வள்ளுவர் கருத்து.

ஔவைப் பாட்டி அறப்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். "ஈதல் அறம்" என்றும் "அறம் செய்ய விரும்பு" என்றும் பாடியுள்ளார். தமிழில் புரடாந்த்தங்கள் எனப்படும் உறுதிப் பொருட்கள் நான்கில் அறமே முதன்மையானது. ஏனைய பொருள் இன்பம், வீடு என்பவற்றிற்கு அறமே அடிப்படையானது. எனவே அறம் என்பது முதன்மையானதாக விளங்குகிறது.

நீதிப் பாடல்களில் பல வேண்டும் என்றும் வேண்டாம் என்றும் முடிவடைகின்றன.

"ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்"

என்று கூறுகிறது. மனித வாழ்வின் முழுமையையும் நீதிப் பாடல்கள் கூறுகின்றன.

"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வள்ளுவப் பெருஞானி கூறுகிறார். அறச் செய்கையால் வருவதே இன்பமும் புகழும் ஆகும். இவ்வகையில் நோக்கும் போது தமிழில் பதினென் கீழ் கணக்கு நூல்கள் தோற்றம் பெற்றன. அவை எதை வலியுறுத்திக் கூறுகின்றன? அறத்தையே வலியுறுத்திக் கூறுகின்றன.

அறத்தின் வழியில் இன்பத்தை அனுபவித்தல், அறத்தின் வழியில் வீடுபேறு அடைதல் என்பவற்றை வலியுறுத்துகின்றனவாய் அமைகின்றன. நீதிப்பாடல்கள் இனிமையும் ஓசைச் சிறப்பும் உள்ளனவாய் அமைகின்றன. நீதிப் பாடல்கள் அணியலங்காரங்களால் சிறப்பு பெறுகிறது. "அறத்தாறு இதுவென வேண்டாகி பொறுத்தானோடு ஊர்த்தான் இடை" என அவை கூறுகின்றன. இதில் அறத்தின் பயனைக் காட்சிப்பயன்பாட்டினூடு விளக்கம் செய்கின்றார் வள்ளுவன். அதாவது, சிவிகை எனப்படும் பல்லக்கினை இருசார் சுமந்து செல்கின்றனர். சுமப்பவனுக்கும், அமர்ந்திருப்பவனுக்கும் அவர் அவர் செய்த அறத்தின் பயன் காரணம் என்று உரைக்கிறார்.

எனவே தமிழ் மொழி "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று உரைத்தது. அறத்தின் அடிப்படையிலேயே ! அறமே நீதி ! நீதியே தமிழ் மொழியின் உள்ள நூல்கள் உயிராகும்.

சௌமியா கனகஜோதி
தரம் 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எந்த நேரமும் களைப்பாக இருக்கிறீர்களா?

நீங்கள் நண்பர்களுடன் வெளியே செல்வதைத் தவிர்க்கிறீர்களா? வழமையான வீட்டுவேலைகள் உங்களை களைப்படையச் செய்கிறதா? இன்று அதிகமான இளைஞர்களும் பெரியவர்களும் விவரிக்க முடியாத ஒரு சோர்வை உணர்வதால் அவர்களுடைய முழுக் கவனத்தையும் பாடசாலையிலோ, வேலையிலோ, வீட்டிலோ செலுத்த முடியாமல் உள்ளனர்.

இவர்கள் முதலாவதாக மருத்துவ அறிவுரையைப் பெறாமல் தமது விருப்பப்படி சக்தி கூடிய பானங்கள், குளிசை வகைகள், விட்டமின்களை உட்கொள்கிறார்கள். அதனால் களைப்புக்கான காரணங்களை கண்டுபிடித்து அதற்கான சிகிச்சையைப் பெறுவதே இதற்கான சிறந்த வழிமுறையாகும்.

காரணம் 1 :- போதுமான தூக்கமின்மை

நீங்கள் குறைவாகத் தூங்கினால் அது உங்களது மன ஒருமையையும், தேக நிலையையும் பாதிக்கும்.

நிவாரணம் : வயது வந்த ஒவ்வொருவரும் ஏழு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் கட்டாயமாக தூங்க வேண்டும்.

காரணம் 2 :- தேவையான சக்தியின்மை

குறைவாக சாப்பிடுவதால் சோர்வு ஏற்படும் தவறான உணவுகளை உட்கொள்வதும் பிரச்சினையாக அமையலாம்.

நிவாரணம் : சமநிலையான உணவு குருதியில் சீனியின் அளவை சாதாரண அளவில் வைத்துக்கொள்ள உதவும். அதனால் எப்பொழுதும் காலை உணவு கட்டாயமாக சாப்பிட வேண்டும். அத்துடன் உணவில் புரதம், மாப்பொருள், கொழுப்பு, விட்டமின்கள், நீர் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

காரணம் 3 :- இரத்த சோகை

பெண்களின் சோர்வுக்கு பிரதான காரணம் இரத்தக் குறைவு ஆகும். மாதம் ஒருமுறை இழக்கும் குருதியினால் இரும்புச்சத்தின் அளவு குறைகிறது. சிவப்பு நிறக் குருதிக்கலன்கள் ஒட்சிசனை கலங்களுக்கு எடுத்துச் செல்ல இரும்பு அவசியம்.

நிவாரணம் : இரும்புச்சத்து குறைவை நிறைவு செய்ய இரும்புச்சத்து அதிகமாகவுள்ள உணவுகள் உட்கொள்ள வேண்டும். இறைச்சி, ஈரல், போஞ்சி வகை, கடலுணவுகள் போன்றவற்றில் இச்சத்து அதிகமாக உள்ளது.

காரணம் 4 :- மனச்சோர்வு

மனச்சோர்வு மனதை மட்டுமன்றி பல தேக சம்பந்தமான அறிகுறிகளைக் காட்டும். களைப்பு, தலைவலி, பசியின்மை போன்ற பிரதானமானவை.

நிவாரணம் :- இந்த அறிகுறிகள் தொடர்ந்து இருந்தால் மனநோய் வைத்தியரை அணுகவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் 5 :- தைரொக்சின் ஓமோன் குறைதல்

தெரொயிட் கழுத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள ஒரு சுரப்பியாகும் இது உடம்பின் அனுசேபச் செய்கைகளுக்கு அவசியம். சுரப்பியின் செயல் குறையும் போது உடற்செயற்காடுகள் குறைவாக நடைபெறுவதால் சோம்பேறித்தன்மையையும்? உடம்பு பாரமாவதையும் (பருமன் கூடுதல்) உணரலாம்.

நிவாரணம் :- இதற்கு குருதியில் தைரொக்சின் ஓமோனின் அளவை பரிசோதித்தல் அல்லது அதற்கேற்ப செயற்கையாக தயாரித்துள்ள வில்லைகளை பாவிக்கலாம்.

காரணம் 6 :- சிறுநீர்க் கால்வாயில் கிருமிகளின் தொற்று ஏற்படல்

இதன் போது சிறுநீர்க்கழிக்கும் போது எரிவும் அடிக்கடி சிறுநீர்க்கழிக்க வேண்டும் என்பது போலும் இருக்கும். ஆனால் இத்தொற்று உள்ளவர்களுக்க எந்த அறிகுறியும் இல்லாமல் சோர்வு மட்டும் ஏற்படலாம்.

நிவாரணம் :- இதற்கு சிறுநீர்ப்பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

காரணம் 7 :- நீரழிவு நோய்

நீரழிவு உள்ளவர்கள் குருதியில் உள்ள குளுக்கோஸ் கலங்களுக்கு செல்வதில்லை. அதனால் குருதியில் சீனியின் அளவு கூடும். கலங்களில் சக்தி பிறப்பிக்க முடியாமல் சோர்வு ஏற்படும்.

நிவாரணம் :- விவரிக்க முடியாத களைப்பு இருப்பின் கட்டாயம் வைத்தியரை நாடி தேவையான சிகிச்சையைப் பெறலாம்.

காரணம் 8 :- இதய நோய்

வழமையான வேலைகளை வீட்டுத்துப்பரவு செய்தல் முற்றத்தை துப்பரவாக்குதல் போன்ற நேரங்களில் களைப்பு ஏற்படின் இது இதய நோயின் அறிகுறியாகும்.

நிவாரணம் :- வைத்தியரை நாடி உரிய பரிசோதனைகள் செய்து தேவையான மருந்துகளுடனும், மருத்துவ செய்முறைகள் மூலமும் இதய நோயை கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம்.

காரணம் 9 :- ஒவ்வாமை

சாப்பாட்டுக்குப்பின் சோர்வு ஏற்படின் இது உணவு ஒவ்வாவையினால் ஆகும். அரிப்பு, தழும்புகள் இருக்காவிடினும் சோர்வு மட்டும் ஏற்படலாம்.

நிவாரணம் :- சோர்வை ஏற்படுத்தும் உணவை தவிர்ப்பது நல்லது.

ஷஹானா வைஸ்
தரம் 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இசை வடிவங்களின் இலக்கணம்

இந்திய இசை, குறிப்பாக கர்நாடக இசை, பக்தியில் தோன்றி பக்தியில் வளர்ந்துள்ள இசை என்று கூறலாம். ஏறக்குறைய எல்லா இசை வடிவங்களிலும் பக்தி அம்சம் ஓரளவு காணப்பட்டாலும் சில இசைவடிவங்களில் பக்தி அம்சம் நிரம்பியிருப்பதால் அத்தகைய இசைவகைகளை இறை இசை வடிவங்களில் என்று கூறுகின்றோம். வைதீககான உருப்படிகள் என்றும் கூறலாம்.

தமிழில் ஏராளமான இறை இசைவகைகளைக் காணலாம். அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரால் இயற்றிய தேவாரப்பாடல்கள், மாணிக்க வாசகப் பொருமான் இயற்றியுள்ள திருவாசகம், வைணவ ஆழ்வார்கள் செய்துள்ள நாலாயிரத்திவ்யப் பிரந்தம், பட்டினத்தார் பாடல், அருணகிரிநாதரின் திருப்புகழ், தாயுமானவரின் பாடல்கள், பதினென் சித்தர்களின் பாடல்கள், இராமலிங்க அடிகளின் அருப்பா ஆகியவை சிறந்த இறை இசை வடிவங்களாகும். மாரிமுத்தாட்பிள்ளை, பாபவிநாச முதலியார், அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, கவிகுஞ்சர பாரதியார், அச்சுதாஸர், ஆனய்யா இராமசாமி சிவன், கனம் கிருஷ்ணய்யர், ஆனந்த பாரதி, சின்னசாமிதாஸர், முத்துராம கவிராயர், மதுரகவி, சுப்பிரமணிய பாரதியார், பாபநாசம் சிவன், பெரியசாமி தூரன், எம். எம். தண்டபாணி, தேசிகர் முதலியோர் பக்தி நிரம்பிய இசைப்பாடல்களை அமைத்துள்ளனர். இவை தவிர தமிழில் பல நாமாவளிகளும் உண்டு.

தெலுங்கு மொழியிலும் இறை இசை வகைகள் நிறைய உள்ளன. 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த "தாளபாக்கம் இசைப் புலவர்கள்" சிறந்த பக்திபாடல்களை இயற்றியுள்ளனர். அவர்களுள் "சின்னய்யா" என்பவர் பஜனை பாடும் முறைக்கு வழிவகுத்தவர். 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த "பத்ராசலம் பற்றிப் புகழந்து பாடியுள்ளார். 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இறை இசைப்பாடல் அமைப்பாளர் கிரிஜாகவி, வீர பத்ரையா, மாத்ருபூதய்யா, கிராமசாமி தீட்சிதர், திபாதாசர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்திதர், விணை தட்பையர், செய்யூர் செங்கல்வராய சாஸ்திரிகள் ஆகியோராவர்.

தியாகராஜரின் உற்சவ சம்பிரதாய கீர்த்தனைகளும் திவ்விய நாம கீர்த்தனைகளும் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை. இவை தவிர தெலுங்கில் பல அழகிய நாமாவளிகளும் இருக்கின்றன.

கன்னட மொழிகயிலும் பல இறை இசைப்பாடல்கள் உள. 15, 16ம் நூற்றாண்டில் (1484-1564) வாழ்ந்த புரந்தரதாஸரும், மற்ற தாசர்களும் "தேவர் நாமாக்கள், தாஸர்பதகளு" என்று அழைக்கப்படும் பக்திப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவர்களுக்குப் பின், ஸ்ரீபாதராசர், வியாசராய சுவாமி, வாடி ராசர், கனகதாசர், ஜகன்னாத தாசர் முதலியோரும் இதை இசைப்பாடல்கள் இயற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்திலும் பல இறை இசைப்பாக்கள் நிரம்ப உள்ளன. வேதகாலப்பாக்கள் "கீரி ஸ்நிதப்" என்ற முறையில் பாடப்பட்டு வந்துள்ளன. இராமாணனம், லலா குசா என்ற சகோதரர்களும் இராமருடைய அரண்மனையில் இனிமையாகப் பாடப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

12ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயதேவர் இயற்றியுள்ள கீதகோவிந்தம் 'அஷ்டபதிகள்' என்று சொல்லப்படும் 8 பிரிவுகளைக் கொண்ட 24 பாடல்களால் ஆன ஓர் இசை நாடகம். ஒவ்வொரு பாடலும் ஒரு குறிப்பிட்ட இராகத்திலும் தாளத்திலும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கீத கோவிந்தத்தைப் பின்பற்றி, சந்திர சே.கேந்திர சரஸ்வதி (18 ஆம் நூற்றாண்டில்) என்பவர். "இராமாஸ்டபதி" என்ற இசைத் தொகுப்பையும் உருவாக்கினார்.

17ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயண தீர்த்தர் இயற்றிய கிருஷ்ணலீலா தரங்கினி மற்றொரு சிறப்பு வாய்ந்த இசை நாடகம் இது "தரங்கம்" என்றழைக்கப்படும் 12 பாடற்பகுதிகளைக் கொண்டது. இராகமும் இரசமும் அருமையாக இணைந்து காணப்படும் பக்திப் பாடல்களைக் கொண்டது.

மற்றும் கீர்த்தனை வடிவில் இறை இசைபாக்களை இயற்றியவர்கள் பலர் உள்ளனர்.

1. மார்க்கதரிசி சேஷ அய்யங்கார் (17ம் நூற்றாண்டு)
2. சதாசிவபிரமேந்திரர்
3. பைடால குருமூர்த்தி சாஸ்திரி
4. தியாகராஜர்
5. முத்துஸ்வாமி தீட்சிதர்
6. சியாமாசாஸ்திரி
7. ஸ்வாதித் திருநாள்
8. வாலா ஜாபேட்டை வெங்கடரமண பாகவதர்
9. மகா வைத்திய நாதய்யர்
10. மைசூர் சதாசிவராயர் - முதலியோர்.

இவர்களது இசைக் கீர்த்தனைகள் நம்மை இறைவனுக்கருவில் அழைத்துச் செல்கின்றன.

பிருந்தா இராகவன்
தரம் - 13 (கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனக்கலை

னிதனின் ஒலி இசையாக பரிணமித்தது போல் அவனது அங்க அசைவுகள் நடனமாக வெளிப்பட்டது. காலத்திற்கும், பிரபஞ்சத்தின் பரந்த வெளிக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்துவது நடனமாகும். சிந்து சமவெளி நாகரிக காலந்தொட்டே இந்தியாவில் நடனமும், கூத்தும் ஒன்றென நிலவி வந்துள்ளது. சங்கம் மருவிய காலத்தினைச் சேர்ந்த சிலப்பதிகாரத்தில் நடனம், மேடையமைப்பு போன்றவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இதனையடுத்து சிற்பங்களும், ஓவியங்களும், கல்வெட்டுகளும் அவ்வக் காலத்தில் நிலவி வந்த நடன முறைகள் பற்றி கூறுகின்றன. கல்வெட்டுகளில் கோயில்களில் நடனமாடிய தேவதாசிகள் முறைப்பற்றியும் அக்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மரியாதைகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. தஞ்சை பிரகதீசுவரர் கோயில்களிலும், சிதம்பரம், நடராஜர் கோயிலிலும் 108 கரணங்களின் அமைப்பைத் தெரிவிக்கும் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேற்கத்தைய பண்பாட்டின் செல்வாக்காலும், சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களாலும் தமிழகத்தில் சிறப்புப்பெற்றிருந்த பரதநாட்டியம், தேவதாசிகளோடு தொடர்புப்படுத்தப்பட்டது. இதனால் நாட்டியத்திற்கு எதிர்ப்புக்கிளம்பியது. இத்துடன் தேவதாசிகள் பொருளாதார நிலையில் ஏற்பட்ட சிக்கலினாலும் நடனத்துறை 1925 வரை ஆதரவின்றித் தவித்தது.

நடனத்திற்கும் புதிய பொலிவும். சமூக மரியாதையும் பெற்றுத்தந்தவர் ருக்மணி தேவியாவார். இன்று தமிழகத்தில் நடைபெற்றுவரும் பரதநாட்டியம் பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்தையும், நந்திகேசுவரரின் அபிநய தர்ப்பணத்தையும் தழுவியது. எனினும் அதன் அமைப்பு முறையானது 18ம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த சகோதரர்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். முத்துச்சாமித் தீட்சிதரின் மாணவர்களாகிய இவர்கள் இசை மற்றும் நாட்டிய குருக்கள் (நட்டுவானார்கள்) ஆவர். இவர்களுக்கும் இவர் தம்வழி வந்தவரான பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை மற்றும் அவரது மாணவிகளான தேவதாசிகளுக்கும் தமிழகத்து நாட்டிய உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பரத நாட்டியத்தின் முக்கிய பங்குகளாவன அவாரிப்பு மற்றும் நடனம் ஆடினார் என்பதாகும். இந்நடனத்தின் முக்கிய மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களின் கூட்டமைப்பே பாரத அல்லது பரத நாட்டியம் என்றாயிற்று. நட்டுவானர்கள் இக்கலையை சொல்லிக் கொடுக்கவும் பாதுகாக்கவும் செய்தனர். தேவதாசிகள் அதனை ஆடிக்காட்டினர். நட்டுவானர்கள் பெரும்பாலும் பிராமணரல்லாதவராவர். சமஸ்கிருதத்திலும், தமிழிலும், சாத்திரத்திலும் வல்லவராயிருந்தனர். பரத நாட்டியம் அண்மைக்காலம் வரை தாசி ஆட்டம் அல்லது சதிராட்டம் எனப்பட்டது. பரத நாட்டியம் அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பாதம் மற்றும் தில்லானா ஆகிய பல நிலைகளைக் கொண்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்பட நடிகை வைஜயந்திமாலா பரத நாட்டியத்திலும் தென்னிந்திய நாட்டுப்புற நடனங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். திரைப்படிங்களில் அவரது பரத நாட்டியம் கரவொலிகளை எழுப்பத்தவறியதில்லை இவரும் இந்தியாவின் பல பகுதிகளிலும் மற்றும் வெளிநாடுகளிலும் இக்கலையைப் பரப்புவதில் பெரும்பங்கு கொண்டுள்ளார். யாமினி கிருஷ்ணமூர்த்தி பரத நாட்டியம், குச்சிப்புடி மற்றும் ஒடிசியில் தேர்ச்சிபெற்ற கலைஞராவார். குமாரி கமலா இளைய தலைமுறைகளில் மூத்த பரத நாட்டியக் கலைஞராவார். இயற்கையிலேயே கருணையும் நாட்டியத்திற்கேற்ற நளினமும் உடற்கூறுகளும் கொண்ட இவரது தூய்மையான நடனம், தில்லானாவிலும், ஜதீஸ்வரத்திலும், வர்ணத்திலும் திறம்படக்காட்டப்பட்டு இவருக்குப் பெரும் புகழ்சேர்த்தது. மும்பை ரசிகர்களைக் கவர்ந்த குமாரி சுதா துரைச்சாமி நடாட்டியத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அதன் தூய்மையைப் பின்பற்றி பல்திறன் இயக்கத்தையும் கலை வேலைப்பாட்டையும் ஒருங்கிணைத்தார்.

பரத நாட்டியம் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ள பரத நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியமும் அவரது மாணவிகளும் உடல் அசைவுகள், நடன இயக்கத்தின் போன்றவற்றில் ஒரே அச்சில் வார்த்தது போல் செயல்படுவது பாராட்டத்தக்க ஒன்றாகும். இதே வரிசையில் அவர் மேல் வள்ளி மற்றும் அவரது மாணவிகள் சுதாராணி ரகுபதி மற்றும் அவரது மாணவர்கள் சித்ரா விஸ்வேஸ்வரன் மற்றும் அவரது மாணவிகள் இலட்சுமி விஸ்வநாதன் மற்றும் அவரது மாணவிகளையும் சேர்க்கலாம். இலட்சுமி விஸ்வநாதனும் அவரது மாணவிகளும் அபிநயத்தின் போது இசைக் கேற்றபடி தலையையும் அசைக்கும் பாங்குடையவர்கள். மரபு வழியான ஆடைமுறைகள், ஆபரணங்கள் வண்ணங்கள் ஆகியவை தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ருக்மணிதேவியின் ஆடையமைப்புக்கள் பலராலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

சிலப்பதிகாரத்தில் மரக்கால்கள் வைத்து ஆடப்படும் ஆட்டம் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. இது பொய்க்கால் குதிரை ஆட்டத்தோடு தொடர்பு கொண்டதாகும். பொய்க்கால் குதிரை சோழர் காலத்திலேயே பிரபலமடைந்துள்ளது. தஞ்சை மராட்டியர் ஆட்சிக்காலத்தில் சிறப்பிடத்தைப் பொற்ற இவ்வாட்டம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஆடப்படுகின்றது.

**இவ்வாறு மன அமைதியை தரும் நாட்டிய கலையை என்றும் சிறப்புற ஓங்க வாழ்த்துவோமாக!!!**

*ராமமூர்த்தி ஹர்ஷிலா*

*தரம் 13 கலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமுதாயமும் நல்வாழ்வும்

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிற இக்காலத்தில் விண்ணிலும் மண்ணிலும் வியத்தகு வித்தைகள் நிகழ்கின்றது. உலகமானது சுருங்கி கைக்குள் அடங்கியதாகி விட்டது. விஞ்ஞானமில்லையேல் மனித வாழ்க்கையுமில்லை எனும் அளவிற்கு விஞ்ஞானம் மனிதனுடன் பிண்ணிப் பிணைந்ததொன்றாகிவிட்டது. உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி வரும் விஞ்ஞானத்தின் தோற்றத்தால் மனிதனுக்கு வசதி வாய்ப்புக்கள் பெருகி விட்டன. இதனால் அவனது தேவைகள் ஒன்றுக்கொன்று இரட்டிப்பாகியுள்ள நிலையே இன்றுள்ளது. இவ்வெண்ணற்ற தேவை விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு விரல் விட்டு எண்ண முடியாதளவுக்கு காணப்படும் வழிமுறைகள்தான் எத்தனை? எத்தனை? என்னதான் சுகபோக வசதிகளையும் ஆடம்பர வாழ்வையும் நுகரந்தாலும் சமூகத்தில் பிரச்சினைகள் இல்லாமலில்லை. அவற்றின் மத்தியில் தீவிரமாக உருவெடுத்துள்ள பிரச்சினை இன்றைய இளைய சமூதாயத்தினரின் சீர்கேடான நிலமையாகும் என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பிறக்கும் போது எல்லாக் குழந்தையும் நல்லக் குழந்தையாகவே இம்மண்ணில் உதிக்கிறது. காலப்போக்கில் அதனது வளர்ப்புக் கோலமும் சுற்றுப் புறச்சூழலும் அதன் வாழ்வை முற்று முழுதாக தீர்மானிக்கிறது. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்று பொய்யா மொழியார் கல்வி பற்றி எடுத்துரைத்துள்ளார். அதாவது மனிதனின் உடல் உறுப்புக்களில் ஒன்றான கண்கள் மிக இன்றியமையாதது. அது போலவே மனிதனுடைய வாழ்வு கல்வி இல்லையேல் அசம்பூர்ணமானதாகும். கல்விச் செல்வத்தால் ஏற்படும் நன்மைகளோ எண்ணற்றவை. கல்வியினால் ஒருவரது வாழ்க்கை தரம் உயர்வடைகிறது. இன்று நிலவும் போட்டி உலகில் எதிர் நீச்சல் போட வேண்டுமானால் உயர் கல்வித் தகைமைகள் காணப்படுதல் அவசியமாகும். இளமைப் பராயத்தில் கல்வியில் சிரத்தையற்று இருந்தால் இன்று அல்லல்படுவோரை நாம் கண் கூடாக காண்கிறோம் இத்தன்மைகளை அறிந்துமட் அறிவீனர்களாய் படிப்பில் அக்கரையின்றி காலந் தள்ளுவதால் இன்றைய இளைஞர்கள் யதார்த்த உலகின் நிதர்சன உண்மைகளை புரியாது இருக்கின்றனர். திறமைக்கு முதலிடம் வழங்கும் இக்காலத்தில் படிப்பறிவு இல்லையேல் எதிர்கால உலகில் வினைதிறனற்ற தொழில்களற்ற சமூகப்பிரிவினர்களே உருவாகுவர். இந்நிலமை நாளைய மைந்தர்களாகப் போகும் இன்றைய இளம் சமூகத்தினரின் எதிர்காலத்தை தொலைத்திடும். ஆதலால் கல்விச் செல்வத்தை கரையின்றி கற்றுத் தேறுதல் ஒளிமயமான எதிர்காலத்தை தோற்றுவிக்கும். இளைஞர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வில் புதுத் திருப்பம் ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட இன்று இளைஞர்கள் பொழுது போக்கு சாதனங்களுக்கு அடிமையாக இருக்கின்றர். தொலைக்காட்சி, வானொலி, இணையம், கணனி என இப்பட்டியல் நீள்கிறது. இவை இச்சாதனங்களை பயன்படுத்துவது தவறில்லையென்றாலும் அதிலேயே மணித்தியாலங்களை செலவிடுவது சரியாகாது. இதனால் கல்விக்காக பயன்படுத்தக் கூடிய பொன்னான காலம் மண்ணாகிறது. அனேக இளைஞர் யுவதிகள் இன்று இச்சாதனங்களினூடாக அறிமுகமற்றோருடனான தொடர்பாடல், ஆபாசப் படங்களை பார்வையிடுதல், விளையாட்டுக்களில் நேரத்தை மூழ்கடித்தல் போன்ற தீய பழக்கங்களை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இவற்றின் பின் விளைவுகள் எவ்வாறானது என்பது குறித்து சொல்லித் தெரிய வேண்டுமென்பதில்லை. இத்தீய எண்ணங்கள், செயற்பாடுகளுடன் வாழ்வை வீண் போக்குக்கு இட்டுச் செல்கின்றனர்.

மேலும் தீய நண்பர்களுடனான சகவாசமும் பிழையான நடத்தைக் கோலங்களை ஏற்படுத்தும். போதைப் பொருட்களை பயன்படுத்தல், புகைப்பிடித்தல், களவு, சூது செய்தல் என்பன அவற்றுள் சிலவாகும். இந்நிலமைகளை பெரும்பாலும் எதிர்கொள்வது எமது இளைய சமுதாயத்தினரே. நெற்றி வியர்வை சிந்தி உழைக்கும் எம் அருமைப் பெற்றாரின் எதிர்பார்ப்புகளை வீணடிக்கும் பெரும் பாவிகளாக விளங்கும் இளைய சமுதாயத்தினரின் அசிரத்தையும் அலட்சியப்போக்கும் நவநாகரிகமுமே இந்நடத்தைக் கோலங்களுக்கு வித்திட்டுள்ளது. கலாச்சார மற்றும் சமூக சீர்கேட்டை ஏற்படுத்தும் இந்நிலமையை சீர்படுத்தல் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரினதும் பொறுப்பாகும். பெற்றோரும் தம் பிள்ளைகளுக்கு நல்வழி காட்டுதலில் ஒரு படி அதிகமாகவே சிரத்தை கொள்ள வேண்டும். "வருமுன் காப்பதே சிறந்தது" என்ற கூற்றுக்கிணங்க, நம் இளைய சமூகத்தினரும் தம் வாழ்வு கெட்டு குட்டிச்சுவராகிய பின் யோசியாது, தூர நோக்குடனே முன்சிந்தனையுடன் செயற்படுதல் வேண்டும். தீயவர் நட்பை கைவிட்டு, கல்வியைப் பெற்று, ஒழுக்கமுடன் உய்வு பெற்று, வளமான எதிர்காலம் காணுவோமாயின், அது நம் வாழ்வை மட்டுமன்றி பிறரது வாழ்வையும் சிறப்புறச் செய்யும் என்பது திண்ணமாகும்.



யசோகீர்த்தனா மும்மூர்த்தி
13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் பெண்களும்

இன்று மலையகப் பிரதேசத்தில் அநேகமான பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் ஓரளவு முன்னேறியுள்ளார்கள். மலையகப் பெண்களும் ஏனைய சமூகத்தில் உள்ள பெண்களைப் போல வாழவேண்டும். வெறுமனே கொழுந்து பறிக்கவும், வீடுகளிலும் நகரங்களிலும் வீட்டு வேலைகளைச் செய்யவும், எக்காலத்திலும் ஆண்களுக்கு அடிமையாகவும், உரிமைகள் மறுக்கப்பட்ட பெண்களாகவும் சமூக அந்தஸ்தில் குறைந்தவர்களாகவும் வாழ வேண்டிய கட்டாயம் இல்லை. இப் பெண்களும் மேற் கூறிய தடைகளை உடைத்தெறிந்து வெளியே வர வேண்டும்.

இதற்கு இருக்கும் ஒரே வழி பெண்களின் கல்வியே. கல்வி மூலமே எந்தவொரு சமூகமும் முன்னேற முடியும். எனவே மலையகப் பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். இனிமேலாவது தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளும் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, வங்கி முகாமையார்களாக, நல்ல எழுத்தாளர்களாக உருவாக வேண்டும்.

தோட்டப்புறங்களிலுள்ள படித்த பெண்கள் ஏனைய பெண்களுக்கு கல்வி சம்பந்தமான அறிவூட்டல்களை வழங்க வேண்டும். பெண்ணியம் பேசுகின்ற நிறுவனங்கள், பெண்ணியம் சார்ந்த அமைப்புகள் மலையகப் பெண்களின் கல்வி சார் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். பெண்கள் பெற்ற அறிவை ஏனையவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். இன்று மலையகத்தில் அறிவு பகிர்தலானது மிகக் குறைவாகவுள்ளது. இன்று மலையக பிரதேசத்தை பொறுத்தவரையில் பெண்களின் கல்வியறிவு குறைவாக இருக்கின்றது. இந் நிலையை மாற்ற வேண்டும். அனைத்துப் பெண்களும் படிக்க வேண்டும். படித்தால் மட்டுமே இவர்களுடைய வாழ்க்கையில் விமோசனம் கிடைக்கும்.

மலையகப் பெருந்தோட்டப் பெண்கள் ஏனைய சமூகத்தினரால் அந்தஸ்து குறைந்தவர்களாகவும் இழிநிலையிலுள்ளவர்களாகவும் நோக்கப்படுவதை மாற்றி அமைக்க வேண்டும். இது ஒரு தனியொரு சமூக வர்க்கத்திற்கு மட்டுமல்ல. முழுச் சமூதாயத்திற்கும் பொருந்தக்கூடியதாகும். இந்நிலையினை மாற்றியமைக்க வேண்டும். அத்தோடு பெண்களும் தங்களுடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் சமத்துவத்தினையும் போராடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் சமூகம் நம்மை மதிக்கும். கடந்த கால பெருந்தோட்டப் பெண்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கையானது எதிர்வரும் காலத்தில் விடியலை நோக்கி நகர வேண்டும். இதற்கு முழுப் பொண்கள் சமுதாயமும் திரண்டெழ வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் அதிகமான மலையகப் பெண்கள் கூட்டினுள் அடைக்கப்பட்ட கூண்டுக் கிளிகளாக வாழும் அவல நிலை காணப்படுகிறது. இதனால் அவர்களின் சுதந்திரம் பறி போகிறது. இதனை ஒழிக்க வேண்டுமானால் பெண்களை சமூகம் மதிக்க வேண்டும். அதற்கு நாம் நன்கு கற்று நம்மாலும் எதையும் சாதிக்கலாம் என்பதை நடத்தையில் காட்ட வேண்டும்.

நாம் சாகப் பிறந்தவர்கள்அல்ல சாதிக்கப் பிறந்தவர்கள். பாரதியின் புதுமைப் பெண்களாக நாமும் மாற வேண்டும். நாட்டை ஆள்வது ஆண்களால் மட்டும் தான் முடியும் என்ற பெருமிதத்தையும் நீக்கி பெண்கள் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

பாத்திமா ஆகிலா ராஹிக்
தரம் 13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அமைதி

மன அமைதி என்பது இன்றைய உலகில் தேடப்படும் ஒன்றாக விளங்குகிறது. மனிதர்கள் மன அமைதி வேண்டிய பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். தியானம் செய்கின்றனர். வழிபாட்டின் இறுதியில் மன அமைதி வேண்டி பிரார்த்திக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது அறிவு, ஆற்றலுக்கு ஏற்ப மன் அமைதி வேண்டி அரும்பாடு படுகின்றனர்.

மன அமைதியை எங்கே தேடுகின்றோம். அது இல்லாத இடங்களிலே சல்லடை போட்டு தேடி அலைகின்றோம். மனிதர்களிடம் விவேகம், அறிவு உண்டு, மன அமைதி புறத்தே இல்லை. அதை புறத்தே தேடுவது விவேகமற்ற செயல் ஒவ்வொருவரும் தம்முள்ளே மன அமைதியை தேட வேண்டும். நிச்சயம் மன அமைதியை பெறலாம். அகத்தில் ஊற்று எடுக்கும் அமைதி புறத்தே மலர்ச்சி பெறும் போது சமாதானம் நிலவும், மன அமைதி பெற மன உறுதியும், தன்னம்பிக்கையுமே முக்கியமாக தேவை. மன அமைதி பெற்றவர்கள் மூலம் உலகும் அமைதி பெறும். மன அமைதி நிலைப்பதற்கு புறச்சூழலின் தாக்கமும் ஏதுவாக காணப்படுகிறது. ஒரு குடும்பத்தில் அமைதி அங்குள்ள ஒருவரின் சிறிய தவறினால் கூட குலைந்து விடுவதை நாம் அன்றாட வாழ்விலேயே காணலாம்.

அதையை ஏற்படுத்துவது கடினம் ஆனால் அதை குலைத்து விடுவது மிக மிக சுலபம். மன அமைதி பெற எமது ஆசைகளை விலக்குதலும் முக்கியமாகும். பல்வேறு செயல்களுக்கு, பிழையான நடத்தைகளுக்கும் காரணம் எமது ஆசைகளே. மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.ஆனால் மனிதனின் ஆசைகளை பூர்த்தி செய்யவே முடியாது என்று காந்தியடிகள் கூறியுள்ளார்கள்.

சிலர் பெரும் செல்வமுடைய செல்வந்தர்களாக இருந்தும் அதனை நிம்மதியாக அனுபவிக்க முடியாது துன்புறுகின்றனர். ஏழை ஒருவன் தன்னிடமுள்ள பணத்தை வைத்து கால் வயிறு நிரம்ப உண்டாலும் நிம்மதியாக அதாவது மன அமைதியாக வாழ்கின்றான். அமைதியைத் தேடி சிலர் மது போதை வஸ்து போன்வற்றையும், மருந்து, மந்திரம், மாயங்களிலும் தஞ்சமடைகின்றர்.

இவை இருக்கும் அமைதியையும் குலைப்பனவாக அமைகின்றன. போர், யுகம், அந்தஸ்தினாலோ நாம் மன அமைதியைப் பெற முடியாது. மனதைக் கட்டுப்படுத்தி நேர் வழியில் வாழ்ந்து உண்மையான நிலைத்த அமைதியை வாழ்க்கையில் எய்துவோமாக!

எம். ஹரிணி கீர்த்தனா
தரம் - 13 (கலை பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தின் எதிர்காலம் .......!

இந்த பூமியில் உயிரினங்கள் எப்பொழுது உருவாகியதோ, அன்றிலிருந்து இன்று வரை மாறாமல் இருப்பது இயற்கைச் சூழல் மட்டுமேயாகும். அதன் சமனிலையில் தளம்பல் ஏற்படுவது என்பது உயிரினங்களின் அழிவுக்கு வழிவகுக்கும். திடீர் காலநிலை மாற்றங்களும் அனர்த்தங்களும் இயற்கைச் சூழலின் சமனிலைத் தளம்பலை ஏற்படுத்தும். இது இயற்கையின் தவறென்று கூறமுடியாது. மனிதர்களின் தவறான செயற்பாடுகளின் விளைவாலேயே நிகழ்கின்றது. இதில் சூழல் என்றால் என்ன? சூழல் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், உலக சூழல் அமைப்பு என்பன பற்றி சற்று ஆராய்வோம்.

நாம் வாழும் சூழல் உயிருள்ள சூழல், உயிரற்ற சூழல் என இரு பகுதிகளைக் கொண்டது. இச்சூழல் நீர், காற்று, கனியவளம், படிமங்கள், சூரிய ஒளி என்ற உயிரற்ற சூழலையும் மனிதர்கள், தாவரங்கள், ஏனைய விலங்குகளையும் உள்ளடக்கிய உயிருள்ள சூழலையும் கொண்டுள்ளது.

நாளுக்கு நாள் உலகம் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பினும், அதனால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எதிர்காலத்தினைப் பாதிக்குமென எவரும் கவனத்தில் கொள்வதில்லை. நாளுக்கு நாள் மனிதனால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்து செல்கின்றன. இவற்றைத் தடுக்கத் தடுக்க துரித செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என சூழலியலாளர்களும், அறிஞர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். அத்துடன், உலக சூழல் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஓர் அமைப்பும் ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. இது "உலக சூழல் அமைப்பு" ஆகும்.

1972 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் திகதி சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் கூடிய சூழல் அறிஞர்களும் சூழல் ஆர்வலர்களும் உலக சூழல் அமைப்பினை ஸ்தாபித்தனர். உலகில் அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுக்கும் போது, சூழலுக்கு தீய விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இவ்வமைப்பின் பிரதான குறிக்கோள்களாகும். மற்றும் பல உடன்பாட்டுக் கொள்கைகளும் அமுலில் உள்ளன. அத்துடன் சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு அரசியல் மற்றும் சமூக ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாடுகளை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். இவ்வாறு பல்வேறு செயற்திட்டங்கள் நடைபெறுகின்ற போதிலும் மனிதர்களின் செயற்பாடுகள் சூழலைப் பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

சூழலின் சமனிலையை உருக்குலைப்பது என்பது உயிர்களின் இருப்புக்கு எச்சரிக்கை விடுவதாக இருக்கின்றது. சூழல் பற்றிப் பேசும் போது அதனைப் பாதுகாக்கும் தேவையைப் பற்றிப் பேசும் நடவடிக்கைகள் 1960 களில் இருந்தே எடுக்கப்பட்டு வந்தன. எனினும் இதுவரை சூழல் பாதுகாப்புக் குறித்த நடவடிக்கைகள் வெறும் பேச்சுக்கும் மாநாடுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுக்கு நாடு சூழல் சமநிலையைக் குலைக்கின்ற செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. இதன் விளைவாக அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தங்களையும் அதன் பாரதூரமான விளைவுகளையும் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் நீர் மட்டம் உயர்வடைதல், பனிப்பாறைகள் உருகுதல், வெள்ளப் பெருக்கு, சூறாவளி, புயல்காற்று, உணவு உற்பத்திகள் பாதிக்கப்படுதல் போன்ற அனர்த்தங்கள் ஏற்படுவதோடு, நேரடி பாதிப்புக்களும் ஏற்படுத்தப்படுகின்றன. உயிரினங்களும் சூழலும் ஒரே பிணைப்பினைக் கொண்டதாகும். ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றது. எமது சூழல் என்பது எமது உலகின் எதிர்காலமாகும். அதனைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். எனவே, சூழலைப் பாதுகாக்க எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் ஏராளம் உள்ளன.

காடழிப்பினை தடுத்தல், மரங்கள், செடிகள், உயிரினங்களுக்கு ஏற்புடைய சூழலை உருவாக்குதல், மனிதனின் தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினை குறைத்தல், உயிரினங்கள் என்பவற்றுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல், சூழல் கட்டமைப்பினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல், பாதுகாப்புப் பகுதிகளைக் குறிப்பிடல், சரணாலயங்களுக்கு அப்பால் தாவரங்களை, விலங்குகளைப் பாதுகாத்தல், மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் சூழலைப் பாதுகாக்க முடியும். எனவே எமது சூழலைப் பாதுகாத்து உலகின் எதிர்காலத்தை வளமாக்குவோமாக!

கே. குளோரி தர்ஷனா
13 வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறியியலின் வளர்ச்சி பற்றிய ஒரு தேடல்

பொறியியல் என்பது அறிவியல் கோட்பாடுகளை திறமுடன் பயன்படுத்தி தக்க முறையில் இயற்கை வளங்களை மனிதப் பயன்பாட்டிற்காக மாற்றும் தொழிற் கலையாகும். இது இயற்பியல், கணிதம், வேதியல், உயிரியல் ஆகிய அறிவியற் துறைகளையும் அவற்றின் சிறப்புத் துறைகளான பொருள் அறிவியல், திண்ம பாய்ம விசைப்பொறியியல், வெப்ப இயக்கவியல் போன்றவற்றை அடிப்படையாகக் கொள்கிறது.

"பொறியியல்" எனப் பெயர்வரக் காரணம் பொறியியல் என்ற தமிழ்ச் சொல் Engineering என்பதற்கு இணையாக பயன்படுத்தும் ஒன்றாகும். பொறி + அறிவியல் = பொறியியல். பொறியியல் எனும் சொல் தமிழில் பயன்பாட்டுக்கு வர முன்னர் யந்திரவியல், இயந்திரவியல், எந்திரவியல் போன்ற வடமொழி மூலகங்களை கொண்ட சொற்களும் பயின்றுவந்துள்ளன. பின்காலத்தில் அறிமுகமான Engneering என்ற ஆங்கிலச் சொல் Engineer என்பவற்றிலிருந்து இது இயந்திரம் என்று பொருள்படும் Engine எனும் சொல்லிலிருந்தும் உருவானதே. இதன் மூலம் இலத்தீன் மொழிச் சொல்லான "ingenium" என்பதாகும். Engineer என்பதை குறிக்கும் Engineour என்னும் நடு ஆங்கிலச் சொல் 14ம் நூற்றாண்டிலிருந்து ஆங்கில பிரெஞ்சு மொழிகளில் பயின்று வந்துள்ளன.

இத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் பொறியியளாலர்கள் எனப்படுவர். பொறியியலாளர்கள் ஆற்றல், பொருட்கள் எனும் இரண்டு விதமான இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றனர்.

1800 களில் அலெக்ஸாண்டரா Volta செய்த சோதனைகளும், மைக்கல் பரடே, ஜோர்ஜ் ஒம் ஆகியோரின் சோதனைகளும் 1872 இல் மின்மோட்டர் கண்டு பிடிக்கப்பட்டதும் மின் பொறியியலை தொடக்கி வைத்தன எனலாம். 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஜேம்ஸ் மெக்ஸ்வெல், ஹென்றிக் ஹேர்ட்ஸ் ஆகியோருடைய ஆய்வுகள் மின்னனுவியல் தொடக்கமாக விளங்கின. தொடர்ந்துவந்த காலங்களில் வெற்றிடங்களாய், படிகப் பெருக்கி போன்றவற்றின் கண்டுபிடிப்பு மின் பொறியியளார்களினதும் மின்னனு பொறியியளாளர்களினதும் எண்ணிக்கையை கூட்டிது. அக்காலத்தில் இவர்கள் பிறதுறைகளை சேர்ந்த பொறியியளாளர்களை விட அதிகமாக இருந்ததாக கூறப்படுகிறது.

தாமஸ் சவேரினதும், ஸ்காட்டியப் பொறியியலாளரான ஜேம்ஸ் வாட்டினதும் கண்டுபிடிப்புகள் தற்கால இயந்திரப் பொறியியல் துறையின் தோற்றத்திற்கு காரணமாகின. பொறியியல் துறையின் தோற்றத்திற்கு காரணமாகின. சிறப்புத் தன்மைகளை கொண்ட இயந்திரங்களினதும் அவற்றை பேணுவதற்கும் தேவையான கருவிகளினதும் வளர்ச்சி, இயந்திரப் பொறியியல் எனப்பட்டது. இதன் பிறப்பிடமான பிரித்தானியாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் வேகமாக வளர்வதற்கு துணை செய்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரப் பொறியியலின் தற்கால வடிவம் பிரித்தானியாவில் தோன்றியதாக கொள்ளப்பட்டாலும், இது மிகப் பழங்காலத்தில் படைத்துறை மற்றும் குடிசார் தேவைகளுக்கு பொறிகள் உருவாக்கப்பட்ட காலத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம். வரலாற்றில் மிகப்பழைய பொறிமுறைக் கணணி எனக் கருதப்படும், "அன்டிக்கிதீரா பொறிமுறை (Antikythera machanism)ஆக்கிமிடிஸின் கண்டுபிடிப்புகள் போன்றவை பழங்கால இயந்திரம் பொறியியலுக்கான எடுத்துக்காட்டுகளாகும். சில ஆக்கிமிட்சின் கண்டுபிடிப்புகளுக்கும் அன்டிக்கிதீரா பொறிமுறையாகும். இயந்திரப் பொறியியலின் இரண்டு முக்கிய கொள்கைகளான வேறுபாட்டுப் பல்லிணைகள் அல்லது வெளிவட்டகப் பல்லினைகள் தொடர்பிலான சிக்கலான அறிவு அவசியமாகும்.

வேதிப் பொறியியல் துறையும் 19ம் நூற்றாண்டின் தொழிற்புரட்சி காலத்தின் போதே உருவானது. பெரும் அளவிலான உற்பத்திகளுக்கு புதிய பொருட்களும் வழிமுறைகளும் தேவைப்பட்டன. 1880 ஆம் ஆண்டளவில் வேதிப் பொருட்களுக்கு இருந்தே தேவைகள் அதிகமதக இருந்ததால், பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி வேதிப் பொருட்களை பெருமளவில் உருவாக்குவதற்கான புதிய தொழில் துறை தொடங்கியது. வேதிப்பொறியியளாளரின் பணி இவ்வாறான இயந்திரத் தொகுதிகளையும் வழிமுறைகளையும் வடிவமைப்பது ஆகும்.

வானூர்திப் பொறியியல், வானூர்திகளை வடிவமைப்பது பேணுவது தொடர்பான துறை, அதே வேளை விண்வெளிப் பொறியியல், வானூர்திப் பொறியியலுக்கு அப்பால் விண்கலங்களின் வடிவமைப்புகளையும் உட்படுத்திய விரிவான துறையாகும். இத்துறைகளுடன் தொடர்புடையவையாகக் கருதப்படக்கூடிய சர் ஜார்ஜ் கேலோன என்பவரின் பணிகள் 18ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தைச் சேர்ந்தவையாயினும் இத்துறைகளின் தோற்றம் 19ம் ஆம் நூற்றாண்டிலிருந்து 20ம் நூற்றாண்டுக்கு மாறுகின்ற காலப்பகுதியைச் சேர்ந்தது என்பதே பொதுக் கருத்து. இத்துறைகள் தொடர்பான பழங்காலத்து அறிவு, அனுபவ வாயிலானது என்பதுடன் சில் கருத்துக்களும், திமைகளும் பிற பொறியியல் துறைகள் வழியாகப் பெறப்பட்டவையாகும்.

1920களில் ரைட் சகோதரர்களால் வெற்றிகரமான பின்னரே முதலாம் உலகப் போருக்கான படைத்துறை வளர்ச்சியடையத் தொடங்கியது. அதே வேளை கோட்பாட்டு இயற்பியலுடன் சோதனைகளையும் அறிவியலை உருவாக்குவதற்கான ஆய்வுகள் நடைபெற்றன.



அபிலாஷினி ஜெயக்கொடி
தரம் - 13 (கணிதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மொழியும் இலக்கியமும்

மனிதனது தொடர்பாடும் ஊடகம் மொழியாகும். இம்மொழியானது எழுத்து மொழி பேச்சு மொழி என இரு வகைப்படும். பேச்சு மொழி நாம் அன்றாடம் பேசும் மொழியைக் குறிக்கிறது. மனிதன் தான் உற்பத்தி செய்யும் ஒலிக் கோலங்களை அழகாக்கி அற்புதமாகச் சொற்சேர்க்கை செய்து சுவைப்படப் பேசுகின்றான். இப் பேச்சு மொழியை அப்படியே பதிவு செய்து நயம்பட எழுதும் போது அது பேச்சு மொழியில் அமைந்த இலக்கியமாக அமைகிறது.

இலக்கியம் என்பது இலக்கை இயம்புவது எனக் கூறப்படுகிறது. மனித வாழ்வியலின் பெரும் இலக்குகள் இலக்கியம் மூலமே கூறப்படுகிறது. பேச்சு மொழியில் அமைந்த இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், கிராமிய இலக்கியங்கள், எழுதா இலக்கியங்கள், பாமர இலக்கியங்கள் போன்ற பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றத.

இந்நாட்டார் இலக்கியங்கள் பேச்சு மொழியில் அமைந்திருப்பது சிறப்பிற்குரியது. பேச்சு மொழயில் அமைந்திருப்பதால் உயிர்துடிப்பு மிக்கவையாய் மிளிர்கின்றன. பேச்சு மொழியில் அமைந்த இலக்கியங்களை பலவகைப்படுத்துவர். கவிதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள், நாடகப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கதைகள் எனப் பலவகைப்படும்.

பேச்சு மொழியில் அமையும் இலக்கியம் குறிப்பிட்ட பிரதேச மக்களின் பண்பாட்டை, வாழ்வியலைக் கலாச்சார அம்சங்களைப் பிரதிபலிக்கும் என்றும் நின்று நிலைக்கும் தன்மையே பேச்சு மொழியில் அமையும் இலக்கியங்களுக்கு உரியவை. நமது வாழ்வோடு தொடர்பான நாட்டார் பாடல்கள் பேச்சு மொழியில் அமைந்த இலக்கியங்கள் பிறப்புத் தொடக்கம் இறப்புவரை அவை எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்தமைக்குக் காரணம் உயிரோட்டமுள்ள பேச்சு மொழயில் அவை அமைந்தவையே ஆகும்.

மருத்துவிச்சி வாழ்த்து, தாலாட்டு முதலியவை தொடக்கம் ஒப்பாரிப் பாடல்கள் வரை உணர்வு நிரம்பி இருப்பதற்குக் காரணம் அவை மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த பேச்சு மொழியில் ஆக்கப்பட்டமையே ஆகும்.

பேச்சு மொழியைப் பலர் கொச்சை மொழி என்று தவறாக நினைக்கின்றனர். பேச்சு மொழியே மொழியின் இயல்பை ஆராய்ந்து அறிய உதவும் முதன்மை அம்சம் என மொழியியலாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் பேச்சு மொழியானது நாவல், சிறுகதை, புதுக்கவிதை போன்ற நவீன இலக்கிய வடிவங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. திரைப்படப் பாடல்களால் பேச்சு மொழி முதன்மையான ஒன்றாக இடம்பிடித்துள்ளன.

பேச்சுமொழியில் இலக்கியத்தை அமைக்கும் போது குறித்த பிரதேசத்தின் பேச்சு வழக்கைக் காண முடியும். சாதியின் பேச்சு வழக்கைக் காணமுடியும், பண்பாட்டின் சொற்களை மற்றும் மூலங்களைத் தெளிவாகக் காணமுடியும்.

தொழில் நிலை இலக்கியமாகவும் வாழ்வு நிலையைப் பிரதிப்பலிக்கும் கண்ணாடியாகவும் விளங்கும். பேச்சு மொழியில் அமைந்த இலக்கியங்கள் எமது சமுதாயத்தின் கண்களாகும். "பேச்சு" என்பது மனிதனது வாயின் குழந்தை அது மொழி என்ற நிலையில் காலம் கடந்து வாழும் குழந்தை. அது எமது பண்பாட்டின் ஊற்று, உறைவிடம், உற்பத்தி, ஜோன்சன் என்ற அறிஞர் கூறுகிறார். "நீ பேசு உன்னை நான் காண்பேன். நீ எழுது உன் சமூகத்தை நான் காண்பேன்" என்று. எனவே பேச்சை எழுத்தாக்கும் போது அது மனித வாழ்வின் தொடர்கதையாகப் பயணிக்கிறது. இலக்கியமாக்கும் போது அழியாத வரலாறாகிறது.

"பேச்சு மொழி மனிதனின் மூச்சு மொழி
பேச்சு மொழி இலக்கியம் மனிதனின் ஊக்க நிலை இலக்கியம்

மயில்வாகனம் ஹார்த்திகா
13 விஞ்ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மூளை

மனித மூளை என்பது, மனித நரம்பு மண்டலத்தின் தலைமையானதும், மனித உறுப்புகளில் சிக்கலானதும் ஆகும். மனித மூளையானது விழிப்புணர்வு இன்றிய செயற்பாடுகளான மூச்சு விடுதல், சமிபாடு, இதயத் துடிப்பு, கொட்டாவி போன்ற செயற்பாடுகளையும், விழிப்புணர்வுடன நிகழும் சிந்தனை புரிதல், தாக்கம் போன்ற சிக்கலான உயர் நிலை செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகிறது. மற்றைய எல்லா விலங்குகளை விடவும் இத்தகைய சிக்கலான உயர் நிலை செயற்பாடுகளை சிறப்பாக கையாளும் திறனை மனித மூளை பெற்றிருக்கிறது.

மனிதனின் மூளையானது மற்றைய பாலூட்டிகளின் மூளையின் பொது வடிவத்தினை பலவாறு ஒத்திருப்பினும் அவற்றின் மூளையை விட, உடல் எடை - மூளை அளவு விகிதத்தில் குறைந்தது ஐந்து மடங்கு பெரியது. இதற்கு காரணம் மனித மூளையின் நன்கு விரிவடைந்து பெருமூளைப் புறணிப் பகுதியாகும்.

நரம்பிழையத்தால் உருவாகி பல தொடர் மடிப்புகளை கொண்ட இப் பகுதி மனிதனின் முன் மூளையில் அமைந்துள்ளது. குறிப்பாக பிற செயற்பாடுகளான தன் கட்டுப்பாடு, திட்டமிடல், பகுத்தறிதல், கற்றறிதல் ஆகியவற்றிற்கு காரணமான மூளையின் முன் மடல்கள் மனித மூளையில் நன்கு விரிவடைந்து காணப்படுகின்றன. மேலும் கண் பார்வைக்குக் காரணமான பகுதியும் மனித மூளையில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித மூளையில் உள்ள சுமார் 50-100 பில்லியன் நரம்பனுக்களில் சுமார் 10 பில்லியன் நரம்பனுக்கள் புறணிக் கோபுர ஊரணக்கள் ஆகும். இவ்வுளரணுக்கள் தமக்குள் சமிக்ஞைகளை (குறிகளை) அனுப்பிக் கொள்ள ஏழத்தாழ 100 டிரிலியன் நரம்பிணைப்புகளை பயன்படுத்துகின்றன.

இந்த டிரிலியன் கணக்கான நரம்பணுக்களில் உள்ள மின் கடத்தல் மூலமாகவே ஞாபகங்கள் நமக்கு மீட்டித் தரப்படுகின்றன. இதில் தற்காலிக நினைவு, நீண்ட கால நினைவு என மூளை இரண்டு விதமான நினைவுகளை கொண்டுள்ளது.

நமது வாழ்வில் ஒரு சில விடயங்களை உடனே நாம் மறந்து விடுகிறோம். இது தற்காலிக நினைவு எனப்படும். இன்னும் சில விடயங்களை வாழ் நாள் முழுவதும் நாம் மறப்பதே இல்லை இதனையே நீண்ட கால நினைவு எனப்படுகிறது. இது மூன்று வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. தூண்டுதல் - (வாசனை போன்ற) சில தூண்டுதல்கள் மூலம் மூளையின் சில பகுதிகளில் மின் தூண்டுதல் பாய்ந்து நினைவில் உள்ள துலங்களை வெளிப்படுத்தச் செய்கிறது.


02. நிகழ் ஞாபகம் - (கடந்த கால நிகழ்வுகளில் மறக்க முடியாத சம்பவங்கள்)

03.உருவங்கள் தொடர்பானவை - (ஒரு படத்தை அல்லது ஒரு உருவத்தை பார்த்தும் பல சம்பவங்ககள் நினைவுக்கு வருதல்) இது நிழற்பட ஞாபகம் எனப்படும். இது சம்பவம், ஒலி, மனம், காட்சி என்பவற்றால் மனதில் பதிவுகளை ஏற்படுத்தும். மேலும் தொடர்பு படுத்தி ஞாபகப் படுத்தல் எனும் முறையும் இதிலடங்கும்.

அனைத்து ஞாபக சக்திகளையும் மீட்டித் தரக் கூடிய அமைப்பு மூளையில் உள்ள ஹைபொதலமஸ் எனும் பகுதியின் செயற்பாடாகும்.

இது போன்றும் வியக்கத்தக்க பல செயற்பாடுகளைக் கொண்ட மனித மூளை பற்றி ஏராளமாக இருந்தாலும் அறியப்படாததும், ஆராயப்படாததுமான பகுதிகள் இன்றும் அதிகமதிகம் உண்டு, என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மாணவர்களாகிய நாமும் இவ்வாய்ப்பில் ஈடுபடும் வண்ணம் உயர்தல் அவசியமாகும்.

ஷிம்லா இர்ஷாட்
13 (விஞ்ஞானம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர முகாமைத்துவம்

வளங்கள், சொத்துக்கள் எனக் குறிப்பிடும்போது தங்கம், பொன், கட்டிடங்கள் போன்ற சொத்துக்களே எமது கண் முன்னே தோன்றுகின்றன. ஆனால் ஒருவராலும் உருவாக்க முடியாத உழைக்க முடியாத நேரத்தின் பெறுமதியை எம்மில் உணர்ந்தவர்கள் ஒப்பீட்டில் குறைவு எனலாம்.

"நேரம் பொன்னானது" என வெறுமனே நம் முன்னோர்கள் சொல்லி வைத்தார்களா? என்றால் இல்லவே இல்லை. எவ்விடயத்தையும் திட்டமிடல் வேண்டும் என நாம் எமக்குள் கூறிக் கொள்கின்றோம். திட்டமிட்ல என்பதுள் நேரமுகாமைத்துவம் புதையுண்டு இருப்பதை நாம் ஆராய்கிறோம் இல்லை.

காலம், நேரம் என்பது அபிவிருத்திக்கான ஒரு வளம் என பல அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நேரம் சரியாகப் பயனுள்ளதாக மாறினால் தனியாள் விருத்தியூடாக நாட்டின் அபிவிருத்தி வேகமடையும் என்பது வெள்ளிடை மலை ஆகும்.

அறிவு, திறன், அனுபவம், பொருள் போன்றவற்றை விருத்தி செய்து கொள்ளலாம். ஆனால் நேரத்தை விருத்தி செய்து கொள்ள முடியாது. நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 24 மணிநேரம் என்பது அனைவர்க்கும் பொதுவானது. அது சிலருக்கு அதிகமாகவோ குறைவாகவோ அமைவது அவரவர் அதனைப் பயன்படுத்தும் பாங்கில் உள்ளது. இதனாலேயே "காலத்தை வென்றர்கள் வாழ்வை வென்றவர்கள்" எனும் ஒரு அராபிய பழமொழியும் உண்டு.

மனிதன் நேரத்தை தன் சிந்தனை சக்தியால் கட்டுப்படுத்த வேண்டும். நேரத்துக்கு அடிமைப்பட்ட மனிதனால் வாழ்க்கையில் வெற்றி காண முடியாது. வாழ்வில் தோற்றவர்கள் நேரத்தை தொலைத்தவர்கள் என்பதே வரலாறு.

நவீன தொடர்பு சாதனங்கள் மலிந்துள்ள இன்றைய உலகில் நேர முகாமைத்துவம் இலகுவானது. நேரப்பயன்பாட்டில் தனிநபர் வெற்றி கண்டுள்ளது போலவே நாடுகளும் வெற்றி கண்டுள்ளது என்பது ஜப்பான் நாட்டை மட்டும் கொண்டு உதாரணம் காட்டலாம்.

சுருகக் கூறின் மாணவர்கள் நேரத்தை முகாமை செய்யப்பழகுவது இன்றியமையாதது. அதனால் அவர்கள் மட்டுமன்றி எதிர்கால சமூகமே நேரப்பயன்பாடுள்ள சமூகமாக மாறி நாடு விருத்தியடையும் என்பது திண்ணமானது ஆகும்.

எம். முஸீனா முனீர்
13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை மேம்படுத்தும் இலக்கியங்கள்

பொதிகையில் தோன்றி வளர்ந்த எம் இனிய தமிழ்மொழி இலக்கியப் படைப்பில் பெரும் பங்களிப்புக் கொண்டுள்ளது. இவ்வினிய தமிழ் இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என வர்ணிக்கப்படுகின்றன. அத்துடன் மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டிய வழிவகைகளூடாக வாழ்வை மேம்படுத்தும் விழுமியங்களையும் கொண்டு விளங்குகின்றன. தமிழகம் சுவைத்து மகிழும் கம்பராமாணம் சிறந்த விழுமியப் பண்புகளுடன் விளங்குகின்றது. மனிதனை மகிழ்வூட்டும் அன்பின் இலக்கணம் இராமன், இலக்குமணன் என்னும் கதாப்பாத்திரங்களினூடாக எடுத்துக்காட்டப்படுகின்றது. தன் வாழ்விலும் மேலான சகோதரப் பாசமுடைய இலக்குமணனின் பண்பைக் கண்டு நாம் எவ்வாறு எடுத்தியம்புவது?

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்னும் வாக்கின் அர்த்தமாய் வாழ்ந்தவன் இராமன் உன் தந்தை கூறினார் என்று சிறியதாய் கூறியதை கேட்டு இராஜ வாழ்க்கையைத் துறந்து காட்டுக்குச் சென்ற இராமனின் மேதகு பண்பு மக்களை வாழவைக்கின்றது. "கணவனே கண்கண்ட தெய்வம்" என்று என்னும் பதிவிரதைகளை தோற்றுவித்தது. சீதை என்னும் நல்லாள் பண்பாகும். செல்வந்த இராச வாழ்வையும் துறந்து கணவன் இருக்கும் இடமே தனக்கு அயோத்தி என கானகம் புகு சீதையின் செயல் இன்றைய பெண்களின் மேதகு பண்புக்கு வித்திட்டது என்று கூறின் மிகையாகாது.

"நன்றி மறப்பது நன்றன்று" என்னும் நன்றி மறவாமை என்னும் சிறந்த விழுமியப் பண்பை எடுத்துக் காட்டுவது இராமாயணமாகும். தன்னை வளர்த்து ஆளாக்கிய தன் அண்ணனுக்காக உயிர் விட்டு செஞ்சோற்றுக்கடன் செலுத்தும் உத்தம குணமுடையவனாக இராமனை விஞ்சும் கதை மாந்தராக மகாபாரதம் படைக்கும் கர்ணன் விளங்குகின்றான். பழிக்கஞ்சி பேழையில் விடுத்த தன்னைச் சகோதரனாக ஏற்று வளர்த்த துரியோதனன் பக்கம் நின்று போராடி வீரமரணம் எய்திலனின் செயலோ மனிதனுக்கு இருக்க வேண்டிய மேதகு இயல்பைக் எடுத்துக் காட்டுகின்றது.

மனிதனை நற்பிரசையாக்கும் சிறப்பியல்பு நடுவுநிலைமையாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்னும் விழுமியப் பண்பை எடுத்துக் காட்டுவது மனுநீதி கண்ட சோழனின் ஆட்சி முறையாகும். தன்மகன் செய் குற்றத்துக்கு ஆவின் துன்பத்தைத் துடைக்க மகனையே தேர்ச்சில்லில் இட்டுக் கொன்றவன் சோழன். அவன் சிறப்பியல்பு எடுத்துக்கூறும் இலக்கியம் இன்றும் மனிதனை நடுவுநிலைமை தவறாமைக்கு வழிகாட்டியாக அமைகின்றது.

சிலப்பதிகாரம் என்னும் இலக்கியம் பெண்களுக்கு கணவனினதும் சிறந்த உறவு வேறு இல்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. தன்னை மறந்து மாதவியுடன் தன் கணவன வாழ்ந்த போதும் கூட அவனை மன்னித்து பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்கின்றாள். இக்குணவியல்பு இன்றைய பெண்கள் கணவனுக்குக் கொடுக்கும் உயர்வுக்கு அத்திவாரமாக அமைகின்றது. இவ்வாறு இலக்கியங்கள் தந்த மேதகு இயல்புகள் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. ஆகவே இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கைக்கு படிப்பினையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது என்பது எவராலும் மறுக்க முடியதா உண்மையாகும்.

தர்ஷினி செல்வநாயகம்
தரம் - 13 விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய வளர்ச்சியில் வெகுசன தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு

அன்றிலிருந்து இன்று வரை எல்லா சமூக மட்டங்களிலும் ஏதோ ஒரு வகையிலான தொடர்பு இருந்து வருகின்றன. இத்தொடர்பு முறையே சமூக நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்கும் பண்பாட்டு கையளிப்பினை மேற்கொள்வதற்கும் வழி ஏற்படுத்துகின்றன. பழைய காலங்களில் சந்திக்குச்சந்தி நின்று முரசறைந்து செய்தியினை மக்களிற்கு தெரிவித்தனர். தூர இடங்களிற்கு புறாக்கலிடம் செய்திகளை கொடுத்தனுப்பினர். பின் குதிரை வண்டிகளில் சென்று செய்திகளை அறிவித்து தமது தொடர்பாடல்களை மேற்கொண்டனர். இன்று பத்தரிகை, வானொலி, தொலைகாட்சி, இன்றனெட் என எத்தனையோ தொடர்பு சாதனங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. அவை தாம் வளர்ந்ததோடு மட்டுமல்லாது சமூகத்திற்கு தேவையானவற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இத்தொடர்பு சாதனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றுகின்ற பங்கு பெரிதாகும்.

தொடர்புசாதனங்களில் மிகப் பழமையானதாகவும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுவதுமாக விளங்குவது பத்திரிகையாகும் வாழ்க்கையின் ஓர் அம்சமாக இலக்கியம் நிலை பெற்றுவிட்டதாலும், இலக்கிய ஊடகங்களின் மூலம் புதியபுதிய கருத்துக்களை உருவாக்க முடியும் என்ற எண்ணத்தாலும் பத்திரிகைகள் இலக்கியத்திற்கு என தனி இடம் ஒதுக்கி இலக்கியத்தினை வளம்பெறச் செய்கின்றன.

பத்திரிகைகள் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அடிப்படையானவை. எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம், எழுத்து சீர்திருத்தம் போன்றவற்றிற்கும் பத்திரிகைகளே முன்னோடியாக விளங்குகின்றன.

இந்தியாவில் கி. பி. 1780 இல் பத்திரிகை இதழ் வெளிவந்தது. 1831 இல் "தமிழ் மகஸீன்" என்ற இதழ் வெளிவந்தது. தமிழில் வெளிவந்த முதல் இதழ் இதுவாகும். 1852 இல் "தினவர்த்தமானி" உம், 1882 ல் "சுதேசமித்திரனும்" தோன்றின. இவை செய்திகளோடு அவ்வப்போது இலக்கிய விடயங்களையும் வெளியிட்டன. எனினும் 1907 இல் பாரதியாரால் தொடங்கப்பட்ட "இந்தியா" 1917 இல் தொடங்கப்பட்ட "தேசபக்தன்" 1920 இல் ஆரம்பிக்கப்பட்ட "நவசக்தி" போன்ற பத்திரிகைகளும் தான் தமது இலக்கியப்பணியை முழுமூச்சுடன் செய்யத் தொடங்கின. "தேசபக்தன்" உலகில் தமிழின் இனிமையை வளரவிட்டு பெருமை கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 களில் "மணிக்கொடி", "கலைமகள்", "கலாமோகினி", கிராம ஊழியன்", ஆனந்தவிகடன்" போன்ற சஞ்சிகைகள் தோன்றின. தமிழ் இலக்கிய வரலாற்றில் "மணிக்கொடிக்கு தனியானதோர் இடமுண்டு. இது நவீன இலக்கிய சிறுகதையின் பரிசோதனை களமாக விளங்கியது. பரிசோதகர்களாக விளங்கியவர்கள் புதுமைபித்தன், ந. பிச்சைமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன் போன்றோரும் இன்னும் பலருமாவர். பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகும் "ஆனந்தவிகடன", "கல்கி", "குமுதம்" போன்றன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதியதொரு சூழ்நிலையை தோற்றுவித்தன. "கலைக்கதிர்", "கலைமானி" போன்ற சஞ்சிகைகளும் குறிப்பிடக்கூடியன. இச்சஞ்சிகைகளில் தற்பொழுது சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் போன்றன பிரசுரமாகின்றன. "குங்குமம்", "கதிர்", "சாவி", "அலிபாபா" போன்ற சஞ்சிகைகளும் அவ்வப்போது தமது பங்களிப்பினை ஆற்றுகின்றன.

ஈழத்தில் 1841 இல் யாழ்ப்பாணத்திலிருந்து "உதயதாரகை" என்ற சஞ்சிகை மாதம் இருமுறை வெளிவந்தது. இதன் ஆசிரியர் கறோல் விசுவநாதப்பிள்ளை, 1891 இல் சைமன் காசிச்செட்டியார், "உதயாதித்தன்" என்ற பத்திரிகையை தொடங்கினர். 1891 இல் "இலங்கைநேசன்" வெளிவந்தது. மேற்கூறப்பட்டவை கிறிஸ்தவ மதமாற்றம் கருதி வெளியானவை, ஆனால் இந்தப் பத்திரிகைகளினூடாகவே வேற்றுமொழி இலக்கியங்களின் தாக்கம் தமிழ் இலக்கியத்திற்கு ஏற்பட்டது.

1930 இல் "தினத்தபால்", 1930 இல் "வீரகேசரி", 1930 இல் "ஈழகேசரி", 1932 இல் "தினகரன்" ஆகிய பத்திரிகைகள் தோன்றின. இலக்கிய வளர்ச்சியை நோக்கமாக கொண்டு இவை செயற்படத் தொடங்கின. எனினும் தொடங்கியவுடனே தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அதிகபங்கு கொடுத்தது ஈழகேசரியே ஆகும்.

1947 இல் "சுதந்திரன்" ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆசிரியராக கோ. நடேசையர் இருந்தார். இக்காலக்கட்டத்தில் தமிழ் இலக்கியம் புது வீறும் வேகமும் பெற்றது. 1945 இல் தொடங்கிய "மறுமலர்ச்சி" என்னும் சஞ்சிகையும் இங்கு குறிப்பிடக்கூடியது. இச்சஞ்சிகை மறுமலர்ச்சி கருத்தினை ஏற்றும் பழைய மரபுகளை நீக்கியும் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது.

தகவல்கள் ஒரே நேரத்தில் பல்லாயிரம் மக்களிடம் சென்றடைய வைப்பதுதான் வானொலி. 1901 இல் வானொலிச் செய்தி பரிமாற்றம் பரீட்சிக்கப்பட்டது. 1930 களில் தான் கலாசார நிகழ்ச்சிகளிற்கும் இலக்கிய நிகழ்ச்சிகளிற்கும் வானொலி பயன்பட தொடங்கியது.

தமிழர்கள் வாழ்கின்ற பல்வேறு நாடுகளிலே இன்று தமிழ் வானொலி நிலையங்கள் உள்ளன. லண்டன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, ஜேர்மனி, சுவிட்ஸ்லாந்து, மலேசியா போன்ற பல்வேறு நாடுகளில் தமிழ் ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன. லண்டனிலிருந்து "பி. பி. ஸியின்" தமிழோசை ஒலிபரப்பாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சர்வதேச ஒலிபரப்பு சேவையாகும். சர்வதேச வானொலிகளான "பி. பி. ஸியின் தமிழோசை", "வெரித்தாஸ்" போன்றவை குறிப்பிட்ட நேரத்திற்குள் மட்டும் ஒலிபரப்பாகி புதினச் செய்திகளை முக்கியமாக ஒலிபரப்பினாலும் அவை அவ்வப்போது ஒலிச்சித்திரம், அறிவியல் அரங்கம், இலக்கிய கருத்துக்கள் போன்றவையும் ஒலிபரப்புகின்றன. நியூசிலாந்திலிருந்து "தமிழ்தென்றல்" என்னும் வானொலி ஒலிபரப்பாகின்றது. இதில் தமிழ் ஈழத்து இலக்கியங்களை பற்றிய பல விடயங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

1950 இல் இலங்கை வானொலி ஆரம்பிக்கப்பட்டது. 1961 இல் அது ஒலிபரப்பு கூட்டுதாபனமாக மாறியது. இதில் கவி மன்றம், இலக்கிய உரை, நூல் மதிப்பீடு, கல்வி ஒலிபரப்பு எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகத் தொடங்கின.

1930 களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. ஆரம்பத்தில் கறுப்பு - வெள்ளை படமாகவே ஒளிபரப்பாகின. பின்னர்தான் வர்ணத் தொலைக்காட்சி அறிமுகமாகியது. இந்தியாவிலே 25 இற்கும் மேற்பட்ட தமிழ் தொலைக்காட்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் சன். ரீ. வீ, ராஜ் ரீ. வீ போன்றவையும் இன்னும் பலவும் தமிழ் இலக்கிய துறைக்கு அவ்வப்போது தமது பங்கினை ஆற்றுகின்றன. இவை இலக்கிய கலந்துரையாடல், பேச்சு, நாடகம் போன்றவை ஒளிபரப்புகின்றன.

இலங்கையில் 1979 இல் தான் தொலைக்காட்சி அறிமுகமாகியது. சிறுவர்களை கார்டடூன், கலந்துரையாடல், நகைச்சுவை நிகழ்ச்சி போன்வற்றை பார்ப்பதற்குத் தூண்டின. எனவே இலங்கையில் தொலைக்காட்சி துறை துரிதமாக வளர்ச்சியடைந்தன. மக்கள் மத்தியில் தொலைகாட்சி துறை வரவேற்கத்தக்கதொன்றாக மாறியது.

உலகைச் சுருக்கி வரும் வெகுசனத் தொடர்பு சாதனங்களால் எமக்கு பல நன்மைகள் கிடைக்க பெறுவதால் அவற்றின் செல்வாக்கினை மாணவர்களாகிய நாம் சிறந்த முறையில் பயன்படுத்தி பயனடைவோம்.

திலீஷா பிரதீப்
தரம் - 13 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் - வாளைப் போன்றது

நேரம் மிகப் பெறுமதியானது. விலைமதிக்க முடியாதது. அது போனால் திரும்பிவராது. அது வாளேந்தி மோதிக்கொள்ளும் வீரர்களைப் போன்றது. அங்கு முந்திக் கொள்பவருக்கே வெற்றி கிடைக்கும். அதுபோல தான் நேரமும் யார் நற்செயல்களில் ஈடுபட்டு நேரத்தை தனதாக்கிவிட வில்லையோ அது அவனைக் கவலையினைக் கொண்டும், கச்சேதத்தைக் கொண்டும் தாக்கி விடும். காலம் பொன்னானது, உயிரானது என்பதற்கு சான்றுகள் எம்மிடம் கேட்டால்.......!

1. பரீட்சையில் சித்தியடையாதவன் கேட்டால் அது கிடைக்காதவரிடம் கேட்டால் தெரியும் ஒரு வருடத்தின் அருமை.

2. பதவி உயர்வுக்காக காத்திருந்து அனுபவத்தினால் அது கிடைக்காதவரிடம் கேட்டால் தெரியும் ஒரு வருடத்தின் அருமை.

3. ஒரு தாயிடம் கேட்டால் தெரியும் 10 மாதங்களின் அருமை.

4. மாதச் சம்பளததைத் தொலைத்தவரிடம் கேட்டால் தெரியும் ஒரு மாதத்தின் அருமை.

5. 15 நிமிடங்களுக்கு முந்தி வந்திருந்தால் அவர் உயிரை காப்பாற்றியிருக்கலாம் என வைத்தியர் கூறும் போது தெரியும் 15 நிமிடத்தின் அருமை.

6. பஸ்ஸையோ, ரயிலையோ தவறிவிட்டவரிடம் கேட்டால் தெரியும் 1 நிமிடத்தின் அருமை.

7. ஒலிம்பிக் போட்டியில் ஒரு வினாடியில் தோல்வியுற்றவரிடம் கேட்டால் தெரியும் ஒரு வினாடியின் அருமை.

இவ்வளவையும் கேட்டும் ஏன் இன்னும் தாமதம் செய்கின்றீர்கள். காலத்தை வெல்வோம்.

பாத்திமா இல்மா யூசுப்
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் மகிமை

அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலக ஜோதி, அன்புதான் உலக மகா சக்தி என்று அன்புக்கு வரைவிலக்கணம் தந்தார் கௌதம புத்தபிரான். அன்பே சிவம் என்று கடவுளை அன்பாகக் கூறுகிறது சைவ சித்தாந்தம். "நீ இந்த உலகத்தையே தனதாக்கிக் கொண்டாலும் உனக்கு அன்பில்லையேல் அதனால் பயனேயில்லை" என்று அன்பின் மகத்துவத்தை கூறி நிற்கிறது கிறிஸ்தவ தர்மம். நீ உன் சகோதரனிடம் அன்புக்காட்டும் போது அல்லாவையே அன்பு செய்கிறாய் என்று அன்பின் உயர்வை கூறுகிறது இஸ்லாம் மதம்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு

என்ற கூறினார். பொய்யாமொழிப்புலவன். இவ்வாறாக நமது எல்லா மார்க்கங்களும் அன்பே உயர்ந்த தர்மம் என்று எமக்கு எடுத்தியம்புகின்றன.

கடவுள் மனிதன் மேல் கொண்ட அளவற்ற அன்பினால் உருப் பெற்றதே இவ்வுலகம். இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் எம் வாழ்வின் எல்லாத் நிலைகளிலுமே அன்பு பிணைக்கப்பட்டுள்ளது. இதை அறியாமலேயே எம்மில் பலபேர் வாழ்ந்துகொண்டிருக்கின்றர். தந்தை, தாய், சகோதரர்கள் மேல் கொண்ட அன்பைப் பாசம் என்றும், நண்பர் மேல் கொள்ளும் அன்பை நட்பு என்றும், நாம் விரும்பிய ஆண் அல்லது பெண் மீது கொள்ளும் அன்பைக் காதல் என்றும், கடவுள் மீது நாம் கொள்ளும் அன்பைப் பக்தி எனவும் அன்பு எம் வாழ்வில் பிண்ணிப்பிணைந்துள்ளது என்பது நாம் எவரும் மறுக்க முடியாத உண்மை எனலாம்.

தன் கணவன் மீது கொண்ட அளவற்ற அன்பினால் தீரா நோய் கொண்ட கணவனைக் கூடையில் சுமந்த பெண்ணின் கதையையும், தந்தையின் மீது கொண்டிருந்த உயர்ந்த அன்பினால் அவரது வாக்கை மீறாமல் பதினான்கு வருடங்கள் வனவாசம் அனுபவித்த ஸ்ரீ ராமபிரானின் கதையையும், தன் நண்பன் மீது கொண்ட அன்பினால் உயிரையே தந்த கர்ணனின் கதையையும் அன்பின் எடுத்துக்காட்டாக இதிகாசங்களிலும் புராணங்களிலும் ஏராளமாள் காண்கிறோமல்லவா!

இவ்வாறான இந்த அன்பின் தன்மையை புனித விவிலியம் இவ்வாறு விளக்குகிறது. மறைபொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருந்த போதிலும் அறிவெல்லாம் பெற்றிருப்பினும் மலைகளை இடம்பெறச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என் உடமைகளையெல்லாம் வாரி வழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்கு பயன் ஒன்றும் இல்லை அன்பு பொறுமையுள்ளது. நன்மை செய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்பு அடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு இழிவானதை செய்யாது. தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடம் கொடாது, தீங்கு நினையாது, தீவினையில் மகிழ்வுராது மாறாக உண்மையில் மகிழும் அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும் அனைத்தையும் நம்பும்.

இப்படி எம் வாழ்வின் அச்சாணியாக விளங்கும் அன்பின் இன்றைய நிலைதான் என்ன? போதைப் பொருள் பாவனையால் இன்று மனிதன் அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறான் என்றால் அது மனிதனுக்கு தன்மீது அன்பில்லை எ்னபதைக் கூறி நிற்கிறது. இன்று எம்மிடையே தாய் தந்தை பிள்ளைகள் உறவில் விரிசல்கள், கணவன் மனைவி உறவில் விரிசல்கள், நண்பர்களிடையே கோபதாபங்கள் இது ஏன? இவையனைத்தும் எம்மிடம் அன்பில்லாமையையே கோடிட்டு காட்டுகின்றன. மற்றும் நம் சமூக உறவில் இன்று விரிசல்கள். இன, மத, மொழி வேறுபாட்டால் எழும் பிரச்சனைகள் ஏராளம். மனிதனை மனிதன் ஏற்றுக்கொள்ளாமையினால் யுத்தம், போராட்டம், வன்முறை காரணமாக இன்னும் எமது நாடு சமாதானக் காற்றை சுவாசிக்க ஏங்கித்தவிக்கிறதே, இது அன்பற்ற எம் செயல்களைப் பறைசாற்றவில்லையா? இவைகள் மூலம் என்று எமது சமூகத்தில் அன்பு எட்டாக்கணியாகிவிட்டதையே நாம் உணர்கிறோம்.

இறுதியாக தனிமனித வாழ்வில் அன்பு இருக்குமானால் குடும்பத்தில் அன்பு இருக்கும். குடும்மபத்தில் அன்பு இருக்குமானால் முழு சமூகத்திலும் அன்பு இருக்கும். ஒவ்வொரு சமூகத்திலும் அன்பு இருக்குமானால் உலகில் அன்பு செழித்தோங்கும். அப்போது உலகம் சொர்க்கமாய் மாறும். அப்படியான ஓர் அன்பு நிறைந்த உலகினை உருவாக்க இறைவனையும் அவ்வாறே மனிதனையும் அன்பு செய்வோம். புரிந்துணர்வை வளர்ப்போம். பேதங்களையும் முரண்பாடுகளையம் தகர்ப்போம். மனித நேயத்தைளும் மனித மான்பினையும் இம்மண்ணில் மதிப்போம். அப்போது அன்பு மலர்கள் எம்மில் பூத்துகுலுங்கும் அன்பு இம்மண்ணை ஆட்சி செய்யும்.

பிரசாந்தினி அந்தோனிசாமி
13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித ஜீனோம் செயற்றிட்டம்

மனிதனின் சகல உடல் உள இயல்புகளையும் நிர்ணயிக்கும் தகவல்கள் டி. என். ஏ. (டிஒக்சிரைபோ நியூக்லியோடைட்) என்ற இரசாயனப் பதார்த்தத்தில் குறியீட்டு முறையில் அடங்கியுள்ளன. இப்பதார்த்தமே நிறமூர்த்தங்களின் ஆக்கக் கூறுகளாக அமைகின்றன. மனிதனுடைய பரம்பரை அலகுகள் யாவும் அவனது உடற்கலங்களின் கருக்களில் உள்ள 23 சோடி நிறமூர்த்தங்களில் (chromosomes) அமைந்துள்ளன.

மனிதனிலுள்ள அனைத்துப் பரம்பரையலகுகளையும் இனம் கண்டு நிறமூர்த்தங்களில் அவை ஒவ்வொன்றினதும் அமைவிடத்தை கண்டு பிடித்து வரைபடமாக்குவதற்கான சர்வதேச செயற்றிட்டமே மனித ஜீனோம செயற்றிட்டம் என அழைக்கப்படுகிறது. ஜினோம் என்ற சொல் ஓர் அங்கியின் முழுமையான பரம்பரைபதார்த்தங்களின் தொகுதியை குறிக்கிறது.

மனிதப்பரம்பரையலகுத் தொகுதியை பற்றி ஆராய்வதற்காகச் சர்வதேச ரீதியில் கூட்டுமுயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து 1985-1987 காலப்பிரிவில் இடம்பெற்ற விஞ்ஞானக் கருத்தரங்குத் தொடரொன்றின் போது உருவாகியது. இதனடிப்படையில் ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது Genome செயற்றிட்டம் 1990 இல் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியோடு தொடங்கப்பட்ட இச்செயற்றிட்டத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான DNA இன் கட்டமைப்பைக் கண்டுபிடித்தவர்களுள் ஒருவரான ஜேம்ஸ் வொட்சன் பணியாற்றினார்.

தனியான வேறொரு மனித ஜீனோம் செயற்றிட்டத்தை தனியார் நிதியுதவியில் இயங்கும் சிலேரா ஜீனோமி என்ற உயிர் தொழிநுட்பவியல் கம்பனி ஆரம்பித்து நடைமுறைப்படுத்தியது. மனிதப்பரம்பரையலகுகளை இனங்கண்டு அவற்றின் அமைவிடங்களை துணியும் முயற்சியினை விரைவுபடுத்தி அதன் மூலம் கிடைக்கப் போகும் பெறுபேறுகளை வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதே இக்கம்பனியின் நோக்கமாக இருந்தது.

நிரலொழுங்கு முறைப்படுத்தல் என்ற செயன்முறையைப் பயன்படுத்தி மனிதக்கலத்தின் கருவில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள சுமார் 31,000 பரம்பரை அலகுகள் அனைத்தையும் மனித ஜீனோம் செயற்றிட்டம் இனம் கண்டு பதிவுசெய்திருக்கின்றது. அத்தோடு மனிதக் கலத்திலுள்ள 23 சோடி நிறமூர்த்தங்களை வரைபடமாகக் குறிப்பதிலும் இச்செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறமூர்த்தங்களின் பிரதான ஆக்கக்கூறாக விளங்குவது டிஎன்ஏ மூலக்கூறாகும். ஈரிழைகளைக் கொண்ட நீளமான இம்மூலக் கூறானது முறுக்கப்பட்ட ஏணியொன்றைப் போன்ற வடிவமுடையது. அதாவது இரட்டை விரிபரப்புச் சுருளி விடிவமானது பல் இணைப்புக்களைக் கொண்ட இரசாயனக் சேர்வைகளான நியுக்லியோடைட் என்பவற்றால் அது ஆக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நியுக்லியோடைட் உம் டிஎன்சி ரைபோஸ் என்ற வெல்லத்தையும், பொசுப்பேற்றுச் சேர்வையொன்றையும், நான்கு வகையான உப்புமூலகங்களையும் கொண்டுள்ளது. வெல்லமும் பொசுப்பேற்றும் டீஎன்ஏ ஏணியின் பக்கங்களை ஆக்கியுள்ளன. சோடிசோடியாக இணைந்துள்ள உப்பு மூலகங்கள் ஏணியின் படிகளாக உள்ளன.


டிஎன்ஏ ஏணியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதற்கேயுரிய நிரல் ஒழுங்கில் உப்பு மூலச்சோடிகள் காணப்படுகின்றன. டீஎன்ஏ மூலக்கூறிக் இத்தகைய ஒரு பகுதியே ஒரு பரம்பரையலகும் ஒரு குறிப்பிட்ட நிரல் ஒழுங்கில் உப்பு மூலச் சோடிகளைக் கொண்டிருப்பதால் ஒரு பரம்பரையலகை இன்னொன்றிலிருந்து வேறுபிரித்தறிய முடியும். இந்த அடிப்படையிலேயே பரம்பரையலகுகள் வேறு பிரித்து இனங்காணப்பட்டு அவற்றின் அமைவிடம் துணியப்படுகின்றது.

மனிதக் கலங்களிலுள்ள ஒவ்வொரு நிறமூர்த்தத்திலும் 250 மில்லியனுக்கு மேற்பட்ட உப்பு மூலச்சோடிகள் உண்டு. மனிதனின் முழுமையான ஜினோமி அமைப்பில் சுமார் 3 பில்லியன் உப்பு மூலச்சோடிகள் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மனிதனில் சுமார் 100,000 பரம்பரை இருக்கலாம் என முன்னர் எதிர்வு கூறப்பட்ட போதிலும் உண்மையில் சுமார் 31, 000 பரம்பரை அலகுகள் இருப்பதே இப்போது தெளிவாகியுள்ளது.

மனித ஜினோம் செயற்றிட்டத்தில் பகுப்பாய்வுக்காக பல்வேறு வித்தியாசமான ஆட்களிடமிருநது பெறப்பட்ட சிறிதளவு குருதிமாதிரிகளும் இழைய மாதிரிகளும் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு தனியாளினதும் பரம்பரையலகுகள் தனித்துவமான டீஎன்ஏ நிரலொழுங்குகளைக் கொண்டிருந்த போதிலும் இரு தனியாட்களின் ஜினோமிகளுக்கு இடையே சுமார் 8.05 சதவீதத்திலிருந்து 0.1 சதவீதம் வரையிலான வித்தியாசம் மாத்திரமே காணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


ஸம்ரா நஸார்டீன்
தரம் - 13 (விஞ்ஞானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துசாந்தி சிவராசா
தரம் - 13 (வர்த்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அபிலோஷினி ராஜரட்னம்
தரம் - 13 (வர்த்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் அருள்

குமார் தினந்தோறும் அதே வழியில் தான் தனது காரியாலத்திற்கு வேலைக்கு செல்வதர். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன் சந்தித்த அந்த உருவம் இல்லை அந்த ஜீவன்! அந்த ஜீவனைக் காணவில்லை. யாரிடம் கேட்பது? கேட்டாலும் சொல்வதற்கு அவர் ஒன்றும் பெரிய மனிதன் அல்ல, சாதாரண பிச்சைக்காரன், உடம்பளவில் ஏதும் ஊனம் இல்லை. இருந்த போது அவனது நடவடிக்கைகள் பைத்தியகாரனை போல இருக்கும். இப்படியிருக்கும் போது இரக்கப்பட்டு பிச்சை போட்டுவிட்டு போகும் கூட்டம் இருக்கும் வரை. இவர்கள் போன்றவர்கள் ஓய்வதில்லை. இப்படியும் பலவாறு திட்டியும் இருக்கிறார் குமார்.

ஆனால் இன்று அவரையே தேடுகிறது குமாரின் கண்கள். நெஞ்சில் ஒரு ஏக்கம். நீண்டு வளர்ந்த தாடியும், தலைமயிரும், அழுக்கான அந்தச் சட்டையும், சாரமும், அதில் இடையிடையே பல கிழிசல்களும் காணப்பட்டது. அந்த பஸ் நிறுத்தும் இடத்தில் அமர்ந்து கொண்டு யாரிடமும் பேசாமல் பீடி பற்ற வைப்பதும் எந்நேரமும் வெற்று போத்தல் ஒன்றை அருகில் வைத்துக் கொண்டு வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பார். நல்ல கம்பனி ஒன்றில் முகாமையாளராக பணி புரியும் குமார் இன்று பத்து மணியாகியும் காரியாலயத்துக்கு போகாமல் அந்தப் பிச்சைக்காரனை தேடுவதற்கான காரணம் என்ன? ஒருவாறு குமார் ஒருவரைப் பிடித்து "இங்கே உட்கார்ந்து இருப்பாரே" அவரைப் பார்த்தீங்களா? என்று விசாரித்த போது,

"ஆமா இரண்டு நாளைக்கு முன் இரவில் நடந்த ஒரு வாகன விபத்தில் அந்த பிச்சைக்காரன் செத்துப் போயிட்டான், அந்த பஸ் நிறுத்தும் இடத்தில் இருக்கும் ஆசனத்தில் சடாரென அமர்ந்தார் குமார், மூன்று நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் நிழலாடியது. "தம்பி நீங்க..... நல்லா இருக்கனும்" நூறு வயது வரை நல்லா இருக்கனும்" ஏன் நீங்கள் நல்லா இருக்க கூடாதா? என்று சிறு புன்னகையோடு கேட்கிறான். "நான் வாழ்ந்தது போதும் இந்த உலகத்தில், இனி மேல் இருந்து என்ன பண்ணப் போறேன்?

ஒரு வாரத்தறிகு முன் அவன் மனைவி அனுவும், குட்டி மகள் கார்த்திகாவும் சந்தைக்கு வந்திருந்தனர். இந்த பஸ் நிறுத்துமிடத்தை ஒட்டியே இருந்தது. காரிலே தூங்கிக் கொண்டிருந்த கார்த்திகாவை எழுப்பவில்லை. காரை நிறுத்தி விட்டு குமாரும் அனுவும் மட்டும் உள்ளே சென்றனர். தூக்கம் கலைந்த கார்த்திகா கார் கதவு திறந்து இருந்தபடியால் மெல்ல இறங்கி பாதை நோக்கி நகர்ந்தாள்.

வேகமாக விரையும் வாகனங்களின் நடுவே கார்த்திகா பாதையின் நடுவிற்கு சென்றாள். அப்போது தான் பாதையில் கார்த்திகா நிற்பதைப் பார்த்த அனு "அய்யய்யோ என் குழந்தை" தாய்ப் பாசத்தின் உச்ச வெளிபாடாக குரலெடுத்தாள். வேகமாக வந்த அந்த காரில் ஒரு நிமிடம் பிந்தியிருந்தாலும் கார்த்திகா அந்த நொடியிலே இறந்திருப்பாள். ஆனால் யாரோ ஒருவர் மின்னல் போல் வந்து குழந்தையை தூக்கிச் சென்றார். அந்த ஹீரோ வேறு யாருமில்லை அந்தப் பிச்சைக்காரனே! குமாரும், அனுவும் அவனுக்கு கோடி நன்றிகள் கூறினர். அப்போது தான் அவருக்கு அடிப்பட்டு இரண்டு நாள் கழித்து அவர் இற்நது விட்டார்.

குமாரின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. அவர் சொன்னது போல் கார்த்திகாவை காப்பாற்றவே உயிரோடு இருந்தாரோ என்னவோ? எல்லாம் கடவுளின் அருள்.

அழகுராஜ் சிவதர்ஷினி
தரம் - 12 (வர்த்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கும் விடியல்

வீட்டு முற்றத்தில் எதையோ கற்பனை செய்தபடி கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்த கோபியின் மனதில் ஓடும் எண்ணங்களை என்னவோ? அவன் வாய்குள் ஏதோ முணுமுணுக்கின்றான். "எல்லாரும் பள்ளிக்கூடம் போயிட்டாங்க" ம்.... என்ற பெருமூச்சிசோடு விளையாடக் கூட யாரும் இல்ல. வெயில் வேற சுடுது, வீட்டுக்குள்ள போய் என்னத்த பெரிசா செய்து கிழிக்கப்போறோம்" என்று மனம் சலித்தவாறு, "முகத்த கழுவிவிட்டு வருவோம்" என்று எழுந்தவன் "இப்பவே கழுவிட்டு என்ன பண்ணுறது, சாப்பிடதான் என்ன இருக்கு, அந்த காஞ்சிபோன ரொட்டிய பார்த்தாலே வந்த பசி திரும்ப போயிடுது" என பல எண்ணங்கள் அவன் மனதில் ஓட, சுற்றும் முற்றும் தலையை திருப்பிய பின் மெதுவாக எழுந்தான்.

குழாயடிக்கு கால்களை திருப்பிக் கொண்டவனின் பார்வையில் "ஐயையோ! கௌரி பாட்டி இருக்காளே! சும்மா தொன தொனனு கேள்வி கேட்டுகிட்டே இருப்பாளே, அவளுக்கு என் கஷ்டம் புரியுமோ? இப்படியே திரும்பி போயிறலாம்" என்று கோபி வந்த வழியே திரும்பவும் போதே "எலே பயலே எங்கடா போற, பள்ளிக்கூடம் போகாம எங்க இங்கிட்டு சுத்திகிட்டு இருக்கே! ஒங்க அப்பனு, ஆத்தாலும் எங்கடா பயலே பொயிட்டாங்க?, என்னத்த சாப்பிடுறியோ தெரியல?...." என்று பாடடி தனக்கே உரிய தொனியில் தன் புராணத்தை பாடி முடித்தாள். அடுத்த கெழம பள்ளிகூட போயிடுவே, எங்கம்மா பாபு அண்ணே கடயில காற்சட்டையும், சட்டையு தைக்க கொடுத்திருக்கா, அவங்க எங்கையோ பயணம் போனதால சுணங்கிடுச்சி... அதுதான் பள்ளிகூடம் போகல, "நாலு எழுத்து படிச்சா தானே இந்த காலத்துல எதையாவது செய்யலாம்" "சரிடாப்பா அந்த பொடிகுச்சி கொஞ்சம் எடுத்து போட்டுட்டு போ, ஏங்கிட்ட கேட்டிருந்தாவது ரகுவோட பழைய சட்டையும் காற்சட்டையும் தந்திருப்பேனே!" என்று புலம்பிக் கொண்டே பொடி குச்சிகளை எடுத்துக் கொண்டு சமயலறை பக்கம் சென்றுவிட்டாள்.

பாட்டியின் விசாரணையிலிருந்து விடுபட்டவன் எதையே தொலைத்தவனாய் தன் முகத்தைக் கழுவிக் கொண்டு வீட்டினுள் சென்றான். அம்மா வைத்து சென்ற ரொட்டியும் சம்பலும் எடுத்துக் கொண்டு வீட்டு முற்றத்திற்கே மீண்டும் வந்து அமர்ந்துக் கொள்கிறான். ரொட்டியும் சம்பலும் வயிற்றின் பசியைப் போக்க முனைந்துக் கொண்டிருக்க, அவன் மனம் சிட்டாய் தேடலில் மூழ்கியது. "கௌரிப் பாட்டி கேட்பதில் என்ன தவறு இருக்கிறது. அவளோட மகன் எங்கோ தூரத்துல வேலை செய்யுறான். வருசத்துக்கு மூணு முற தான் வந்துட்டு போறான். அவ பேரப்பிள்ளைகளோட படுற கஷ்டம் அவ மருமகளும் வெளிநாடு போயிட்டு பத்து வருடமா பதிலேதும் இல்லையாம். அதவேற அடிக்கடி சொல்லி புலம்பிக்கிட்டு இருப்பா, அப்படியிருந்தும் பிள்ளைகள எப்படியோ பள்ளிக்கு அனுப்புறாளே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனா எனக்கு ... கண்ணுக்கெட்டிய தூரத்துல அப்பா இருக்காரு அம்மா பக்கத்துலயே இருக்காங்க ஆனா நா பள்ளிக்கூடம் போகலயே! அந்த பாட்டி சுள்ளி விறகு பொறிக்கியாவது பேரபுள்ளைகளுக்கு மூணுவேள சாப்பாடு கொடுக்குறா, எங்கம்மா சம்பாதிக்கிற பணத்தில பாதிய என் தங்கச்ச பாத்துகிற வீட்டுக்கு கொடுத்துடுவாங்க, மீதியில் நானும், அம்மாவும் சாப்பிடனும், பாதி பொழுது பட்டினியால் வாடுவோம், என்ன இந்த ஜெம்மமோ தெரியல..." சுட்டெரிக்கும் வெயிலில் கூட தனக்குதானே கதைத்துக் கொண்டிருந்த கோபியை மறுபடியும் கௌரி பாட்டி அழைக்க எரிச்சலுடன் "என்ன பாட்டி....."

"எலே பயலே நீ கஞ்சு குடிக்கிரியாடா?" என்று கேட்க "இல்ல" என்று தலையசைத்தான் "அம்மாடியோ எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கா ராசா ஏதோ வயிறு காஞ்சிழ கெடப்பனு தா கஞ்சி குடிக்கிறியானு கேட்டே! நீ என்னன்னா வேணானு சொல்றியே! சரிப்பா ஓ அப்பே எங்கட வேல செய்றாரு? வீட்டுபக்கமே வர காணமேடா?" என்று கோபியின் வாழ்க்கை கதையை கிளர ஆரம்பிக்கிறாள் பாட்டி.

"உங்ககிட்ட சொல்ல என்ன பாட்டி" என்று தன் கதையைக் கூற ஆரம்பித்தான். "எங்கம்மா அவங்க விருப்பத்துக்கே கல்யாணம் முடிச்சிகிட்டாங்க, எங்கப்பா தினமும் குடிப்பாரு, அப்புறம் அப்பாவும், அம்மாவும் சண்ட போட்டு பிரிஞ்சிட்டாங்க, அவங்ககுள்ள என்ன பிரச்சினையோ தெியாது, இருந்துட்டு எப்பவாவது வீட்டுக்கு வந்தா அடிதடி தான் நடக்கும். அதுவே எங்கப்பாவ எங்களுக்கு பிடிக்காது. எங்கம்மாவுக்கு தெரிந்தவங்க வீட்டுல தங்கச்சிய விட்டு வளக்குறாங்க. அவங்களும் கஷ்டமான குடும்பமாம். அதுனால அம்மா சம்பாதிக்கிற காசுல பாதிய அவங்களுக்கு கொடுத்திடுவாங்க. மிச்ச காசுல தா நானும் அம்மாவும் வாழுறம், வயித்தகட்டி நாங்க சேத்து வைக்கிற பணத்தையும் அப்பா வாங்கிட்டு போயிடுவாரு" என்றவனின் கண்கள் கலங்கியதை கண்ணுற்ற பாட்டி "சரிடா, பேரபுள்ளங்க வந்திடுவாங்க, அடுப்புல ஒல வைக்கனம். நா அடுப்பங்கரைக்கு போறன்" என்று கதையை இடைநடுவில் நிறுத்திவிட்டு உள்ளே சென்று விட்டாள் பாட்டி. மீண்டும் தன் கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டு முற்றத்திற்கே சென்றுவிட்டான். மீண்டும் அவன் மனதில் பழைய எண்ணங்கள் கட்டவிழ்க்கப் பட்டு விட்டன. பாடசாலை செல்ல இருக்கும் நாட்களை எண்ணிக்கொண்டே தன் விடியலை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கிறான்......!

பிரியற்றில் அந்தோனிசாமி
12 - கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கொடியில் இரு மலர்கள்

"மலர்கள் பலவிதம் ஆனால் இங்கே ஒரே கொடியில் இருவிதமான மலர்கள்" ராமச்சந்திரன் ஒரு விவசாயி. அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் திலீப் சாதாரண தரமும், இளையவன் குமார் தரம் பத்திலும் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். ராமச்சந்திரன் அவரைப் போன்றே தனது பிள்ளைகளும் விவசாயத்தினை தொடராது, அவர்களை நன்றாகப் படிக்க வைத்து அரசாங்க உத்தியோகம் செய்ய வைக்க வேண்டும் என எண்ணி இரண்டு பேரையும் உயர் சித்திக்கு தயாராகும்படி அடிக்கடி கூறுவார். மூத்தமகன் திலீப் தகப்பனின் சொற்படி கேட்டு படிப்பில் தனக்கு முடியுமான உச்சப்பங்களிப்பை செலுத்தினான். ஆனால் இளையவனோ எந்நேரமும் தொலைக்காட்சி பார்ப்பதிலும், விளையாடுவதிலும் காலத்தை செலவழித்தான். இதனைக் கண்ட தகப்பனுக்கு கடும் கோபமும் எரிச்சலும் உண்டானது.

ஒரு நாள் இளையவனை அழைத்து தகப்பன் "நானும் கவனித்துக் கொண்டுதான் வருகின்றேன், எந்நேரமும் தொலைக்காட்சி பார்ப்பதும், விளையாடுவதுமே உனது வேலையாக உள்ளது, இந்தப் பொன்னான நேரத்தை கல்வியில் செலுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும், உன் அண்ணனைப் பார் படிப்பில் மிகவும் ஆர்வமாக உள்ளான். உன்னைப் போன்று அல்ல" என்று கூறினார். இதற்கு அவன் "அப்பா! அண்ணனுக்கு டீவி, சினிமா பார்க்கும் அளவிற்கு ரசனை கிடையாது , ரசிக்கத் தெரியாதபடியால் தான் அவன் இப்படி இருக்கின்றான்" என்றான். இதைக் கேட்டு அவனது அப்பாவுக்கு சிரிப்பதா? கோபப்படுவதா? என்று தெரியவில்லை. "ஒன்றைப் புரிந்து கொள்! அவனுக்கு அந்த ரசனை உள்ளதா? இல"லையா? என்பது வேறு, ஆனால் அந்த ரசனை மட்டும் எதிர்காலத்தில் சாப்பாடு போடாது"

தம்பியும் அப்பாவும் இப்படிப் பேசிக் கொள்வது திலீப் இன் காதிலும் விழவே செய்தது. கல்வியில் ஆர்வமில்லாத தம்பியின் நிலையை எண்ணியும், தன் தகப்பனின் மனக் கவலையை எண்ணியும் கவலையுற்ற அவன் அதே வேளை, தன்னைப் பற்றி தம்பி கூறிய கருத்துக்களைக் கேட்டு தன்னுள் சிரித்துக் கொண்டான்.

இரவெல்லாம் விழித்திருந்து திலீப் பாடங்களைப் படிக்கையில் குமாரோ இரவிரவாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். இப்படி இருக்கையில் சாதாரண தரப் பரீட்சை நாளும் வந்தது. திலீப் பரீட்சை எழுத மிகவும் ஆர்வமாக இருந்தான். காலையிலேயே எழுந்து இறைவனை வணங்கி விட்டு தாய், தகப்பனின் காலில் விழுந்து கும்பிட்டு விட்டு திலீப் உற்சாகத்துடன் பரீட்சைக்குச் சென்றான். அதே தினம் அவனோ வேண்டா வெறுப்பாக பரீட்சைக்குச் சென்றான். ஒருவாறு பரீட்சைகளும் முடிவடைந்தது. இப்படியெ சில மாதங்கள் கழிந்தன. பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரும் நாளும் நெருங்கியது. மிகுந்த எதிர்பார்புடன் பரீட்சைப் பெறுபேறுகளை பாரப்பதற்கென பாடசாலை சென்றான் திலீப். தனக்குரிய பெறுபேறுகளை பார்த்தவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகியது. ஆம்! அவன் சகல பாடங்களிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தான். அந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கென அவசர அவசரமாக விட்டிற்கு வந்து கொண்டிருந்தான். வீட்டில் அவனது சகோதரன் குமார் வழக்கம் போலவே தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்த திலீப் நேரே அப்பாவிடமும், அம்மாவிடமும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருப்பதைக் கூறினான். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அப்போது டீவியைப் பார்த்துக் கொண்டிருந்த குமாரிடம் வந்த அவர்களின் அம்மாவும், அப்பாவும் "பார்த்தாயா குமார்? உனது அண்ணன் பரீட்சையில் தேறிவிட்டான், நீதான் ஆண்டிறுதிப் பரீட்சையில் கோட்டை விட்டு விட்டாய் அண்ணன் கடுமையாக முயற்சித்ததால் பயின்றதன் பயன் இப்போது புரிகின்றது தானே?" என்றனர்.

அவ்விடத்திற்கு வந்த திலீப் தனது தம்பியைப் பார்த்து "தம்பி அன்றைக்கு நீ என்ன சொன்னாய்? எனக்கு ரசனை இல்லை என்று கூறினாய் அல்லவா? எனக்கும் உன்னை விட நல்ல கலை ரசனை இருக்கின்றது ஆனால் கல்வியைப் பலியாக்கிவிட்டு அந்த கலை ரசனையை அனுபவிக்க நான் விரும்பவில்லை. இப்போது எனது அடுத்த இலக்கு உயர்தரம் கற்பது தான். அதுவரை நல்லதொரு இடைவெளி உள்ளது. இந்நக் காலத்துள் ஆசை தீரும் வரை டீவி பார்ப்பேன். சினிமா பார்ப்பேன். அதற்குரிய மனநிலையும் இப்போது கிடைத்துள்ளது. இப்போதாவது நீ புரிந்துக் கொள் கல்விக்காக எதையும் இழக்கலாம் எதற்காகவும் கல்வியை இழக்கக் கூடாது. ஏனென்றால் கல்விக்காக எதனை இழந்தாலும் பிற்காலத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் கல்வி அப்படியல்ல. இளமையில் தான் கற்கலாம். அதைத்தான் சான்றோர் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று கூறினர். குறித்த காலத்தில் கல்வியைப் பெற இழந்தால் இழந்ததுதான். உனக்கு அதனைத்தான் கூறுகின்றேன். முதலில் நன்றாகப் படி பின்னர் மற்றவற்றைப் அனுபவிக்கலாம்" என்று கூறி முடித்தான்.

குமார் அப்போது தான் தனது நிலையை உணர்ந்தான். கல்வியில் ஆர்வம் செலுத்தாததால் ஆண்டிறுதிப் பரீட்சையிலும் தேற முடியாமல் போனதால் இன்னுமொரு வருடம் அதே வகுப்பில் படிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதையும் அதற்காக மேலதிகமாக ஒரு வருடத்தை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளதையும் எண்ணி கவலையும், வெட்கமும் அடைந்தான். எனவே இனி அண்ணனை பின்பற்றி கல்வியில் கவனம் செலுத்துவதென்று தீர்மானித்தான். இதனால் அவன் தனது ரசனையின் பக்குவத்தை கல்வியில் செலுத்தத் தொடங்கினான். இதைக் கண்ட பெற்றோரும் அவனது சகோதரனும் மகிழ்ச்சியடைந்தனர்.

எம். அப்ரா சரீப்தீன்
தரம் - 13 (வரத்தகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடமும் ஒரு நாள் வண்டியேறும்

அடுத்த வீட்டு கடிகாரம் ஐந்து முறை அடித்து ஓய்ந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி சோம்பல் முறித்து படுக்கையை விட்டு அவசரமாக எழுந்தாள். கூடவே தன் பிள்ளைகளையும் எழுப்பிவிட்டு சமையலறையை நோக்கி நடந்நதாள். சிவகாமியின் வாழ்வில் சூழந்தது இன்று நேற்றல்ல கடந்த நான்கு வருடங்களாக, அவள் ஒவ்வொரு விடியலையும் பெரும் போராட்டத்துடனேயே கழித்து வருகிறாள். தனது கணவன் தன்மையும், தன் ஆறு பிள்ளைகளையும் விட்டு விட்டு மாரடைப்பால் மரணத்தின் பிடியில் சிக்கிய போது அவள் அதிர்ந்தே போனாள். தனக்காக இல்லாவிட்டாலும் தன் பிள்ளைகளுக்காவது வாழ வேண்டும் என்ற ஓர் நப்பாசையில் வாழ்வின் மீதிப் பயணத்தை தொடர்ந்தாள்.

சிவகாமி வறுமையில் பிறந்து ஏழைக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். ஆனாலும் கணவனிடம் கிடைத்த நிறைவான அன்பு அவள் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் கணவன் கடை ஒன்றில் வேலை பார்த்து குடும்ப வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு கிடைக்கும் சம்பளம் குறைவாகவே இருந்தது. சிவகாமி வரவுக்கேற்ப சிக்கனமாக செலவு செய்து குடும்ப வறுமைப் பிடியில் சிக்காமல் இருக்க வழி செய்தாள். சிவகாமியின் கணவன் சுந்தர் இறக்கும் போது அவனுக்கு சொத்து என்று இருந்தது ஒரு சிறிய வீடு மட்டும் தான். வருமானத்துக்கும் வேறு வழி ஒன்றும் இருக்கவில்லை. எனவே சிவகாமி தன் குடும்ப பொருளாதாரத்தை ஓட்ட தனக்கு தெரிந்த தொழிலான சிற்றுண்டி செய்து கடைகளுக்கு கொடுக்கும் வேலையை தொடங்கினாள். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் செலவுக்குப் போதாமல் இருந்தது. எனவே அவளுக்கு கூலி வேலை செய்வதை தவிர வேறு வழி இருக்கவில்லை.

சிவகாமி ஒவ்வொரு வீட்டினதும் படி ஏறி இறங்கி கஷ்டப்பட்டு வேலை செய்யும் போது கூடவே அவள் நெஞ்சில் ஓர் வைராக்கியம் பிறக்கத்தான் செய்தது. தான் படும் கஷ்டம் தன் பிள்ளைகள் படக்கூடாது. அதற்கு ஒரே வழி தன் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி அறிவை கொடுப்பது தான் என அவள் நம்பினால். சிவகாமியின் பண்ணிரெண்டு வயதுச் சிறுவன் மகேஷ் அவனிலும் சிறியவர்கள் மற்ற ஐந்து பேரும். மகேஷ் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். என்றாலும் பாவம் அவன், தந்தையின் திடீர் மரணத்தின் பின் அவனுக்கு நல்ல முறையில் படிக்கும் வசதிகள் கிடைக்கவில்லை. மகேஷ் சிறியவனாக இருந்தாலும் அம்மா படும் கஷ்டங்களை நன்கு உணர்ந்தவனாக இருந்தான். தன் படிப்பை நிறுத்தி விட்டு அம்மாவுக்கு உதவப் போவதாக எத்தனை முறை சொல்லியும் அம்மா இதற்கு இடம் கொடுப்பதாக இல்லை.

"என் உடம்பில் பலம் இருக்கும் வரை எப்படியாவது கஷ்டப்பட்டு உங்களை வளர்த்து ஆளாக்குவேன். அதன் பிறகு இறைவன் இட்ட வழி" என்று சொல்லி மறுத்து விடுவாள். அம்மாவின் அயராத உழைப் ஊக்கமும் மகேஷ் தொடரந்தும் படிக்க உறுதுணையாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அவன் உயர்தரம் வரையும் படித்து சிறந்த முறையில் பரீட்சையும் எழுதிவிட்டான். அதன் பிறகும் அம்மாவை கஷ்டப்படுத்த அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. அவனுக்காகவும் தனது தம்பி தங்கைகளுக்காகவும் உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து போன அம்மாவின் கஷ்டத்தில் தானும் பங்கெடுக்க வேண்டும் என்று நினைத்தான் அம்மாவை கூலி வேலை செய்ய விடாது சந்தோஷமாக வைத்துப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். தான் இனி படிக்கப் போவதில்லை என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு தொழில் தேடும் முயற்சியில் இறங்கி விட்டான்.

வேலை தேடும் படலத்தில் அவனுக்கு ஆரம்பத்தில் கிடைத்தது எல்லாம் தோல்வியே. அவன் தன் திறமையை எடுத்துச் சொல்லி வசதி படைத்தவர்களிடம் வேலை கேட்ட போது அவனது ஏழ்மை நிலையை சுட்டிக் காட்டி தெறிந்த பலரும் கையை விரித்து விட்டார்கள். மகேஷ் வேலை தேடி தேடி சோர்வுற்றிருந்த போது அவனது நண்பன் ஒருவன் மூலம் சில்லரைக் கடை ஒன்றில் கண்காளர் வேலை கிடைத்தது. மகேஷ் உயர்தரத்தில் வணிகப் பிரிவில் பல்வி கற்றிருந்தால் அவனுக்கு இந்த வேலை விருப்பானதாக இருந்தது. வேலை செய்வதில் எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை.

கடை முதலாளிக்கு மகேஷை நன்கு பிடித்துப் போனது அவனிடம் பல பொறுப்புக்களையும் ஒப்படைத்திருந்தார். அத்தோடு குடும்பத்தில் ஒருவனாகவே அவனை மதிக்கத் தொடங்கினார். மகேஷும் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். மகேஷ் வேலையில் சேர்ந்ததால் சிவகாமியின் குடும்பப் பழு சற்று குறைந்தது. என்றாலும் அவள் தன் மகனை உயர்படிப்பு படிக்க வைக்கவே ஆசைப்பட்டாள். ஆம்! சிவகாமியின் ஆசைக்கு மகுடம் வைத்தாற் போல் அன்று மகேஷின் உயர்தர பெறுபேறுகள் வந்திருந்தது. மகேஷ் எல்லா பாடங்களிலும் திறமையாக சித்தியடைந்திருந்தான். இதை அறிந்த சிவகாமிக்கு மகிழ்சிச தாழவில்லை. உடனே தன் மகனுக்கு செய்தி அனுப்பினாள். அம்மாவின் கடிதம் மூலம் தான் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தது பல்கலைகழகம் செல்லும் வாய்ப்பு கிடைத்திருப்பதை அறிந்து உள்ளூர மகிழ்ச்சியடைந்தான் என்றாலும் தான் தொடர்ந்து படிப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தான். தான் இனியும் படித்தால் அம்மா மீண்டும் கஷ்டப்பட வேண்டி வரும் என்று கூறி தாயின் ஆசைக்கு இடமளிக்க மறுத்துவிட்டான். தொடர்ந்து தன் தொழிலில் ஈடுபட்டு காட்டினான்.

மூளைக்கு வேலை அதிகரித்தமையோ என்னவோ மகேஷ் சில நாட்களாக சோர்வுற்று சுறுசுறுப்பில்லாது வாடிப்போல இருந்தான். இதை அறிந்த முதலாளி, மகேஷை வீட்டில் சில நாள் இருந்து ஓய்வெடுத்து வருமாறு கூறினார். மகேஷும் முதலாளியின் வேண்டுகோளின் படி ஓய்வை நாடி வீட்டுக்கு வந்தான். அவன் வந்த அடுத்த நாளே மகேஷின் பெயருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் அவனது முதலாளி ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், உடனடியாக வரும் படியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தியில் குறிப்பிட்டிருந்த செய்தியை அறிந்த மகேஷுக்கு ஒரே குழப்பம். "இந்த நல்ல மனிதருக்கு என்ன நடந்தது, அவருக்கு ஏதாவது ஒன்று நடந்தால் என் குடும்ப நிலை என்னவாகுமோ?" என்று பலவாறாக சிந்திக்கத் தொடங்கினான். மகேஷின் மனம் ஒரு நிலை கொள்ளவில்லை. அம்மாவிடம் விடைப்பெற்றுக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தான்.

அங்கே அவனது முதலாளி உடல் முழுக்க கட்டுக்கள் போடப்பட்டு படுக்கையில் இருந்தார். கண்களை மூடி வாயால் எதையோ முனங்கிக் கொண்டிருந்தார். கட்டிலைச் சுற்றி இருந்தவர்களிடம் நடந்ததைக் கேட்ட போது அவர் தனது காரில் போய்க் கொண்டிருந்த வேளை முன்னால் வந்த லொறி ஒன்றுடன் மோதி தூக்கி எறிப்பட்டதாகவும் சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும்ட அவர்கள் சொல்ல அறிந்து கொண்டான்.

முதலாளியின் நிலையைப் பார்த்த மகேஷுக்குப் கவலை தாங்கவில்லை. கண்ணைத் திறக்கமாட்டாரா என்று அவர் கண்களை வைத்த கண் மூடாது பார்த்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரத்துக்குப் பிறகு அவர் உடலை மிகவும் கஷ்டத்துடன் அசைத்து கண்களை மெதுவாக திறந்து பார்வையை அங்கும் இங்கும் சுழலவிட்டார். எதையோ சொல்ல உதடுகள் துடித்தன. மகேஷ் தலையைக் குனிந்து அவர் முகத்துக்கு மேலே தன் முகத்தைத் திருப்பி "முதலாளி" என்று அமைதியாக பேசினான். அவர் இதழ்கள் மலர்ந்தது. வாயிலிருந்து ஒவ்வொரு வார்த்தையாக வெளிப்பட்டது. "தம்பி மகேஷா? நெருங்கி வா அப்பா" என்று சொல்லி அவர் கையை மகேஷின் கையினுள் இணைத்துக் கொண்டு விக்கி விக்கி பேசினார். "தம்பி நான் இனி பிழைக்க மாட்டேன், என் குடும்பத்தையும் என் கடமையையும் உன் கையில் ஒப்படைக்கிறேன், அப்பா நீ என் குடும்பத்தில் ஒருவனாக இருந்து எல்லாவற்றையும் பொறுப்பேற்றுக் கொள்" என்று சொல்லி வார்த்தையை முடிக்க முன்பே "அம்மா" என்ற ஈனக் குரலுடன் கண்களை மூடிக் கொண்டார்.

தன் காதில் கேட்டவை கனவா? நனவா? என்று உணர முடியாத நிலையில் மகேஷ் கலங்கிப் போனான். கண்களை நன்றாக கசக்கி விட்டு மீண்டும் முதலாளியின் உயிரற்ற உடலை நன்றிக் கண்களோடு பார்க்கிறான். முதலாளியின் குடும்பம், மனைவியோடு ஒரே மகள் சரண்யா, மாளிகை போன்ற வீடு, குறையாத வருமானத்தை தரும் பெரிய கடை. இவை எல்லாம் அவன் மனக் கண் முன் வந்து போயின. "பாரிய ஒரு பொறுப்பை தோள் மேல் சுமக்கிறேன், கடவுள்தான் துணை செய்ய வேண்டும்" என்ற பிரார்த்தனையோடு "ம்" என்று ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு ஆகவேண்டியதை கவனிக்க ஆரம்பித்தான். இனி அவனது குடும்பத்திலும் வசந்தம் வீசாமலா போகும்.



எம். என். எப். இன்சிரா
13 கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராதது

பலதடவை விடைபெற்றும் இன்னும் தரித்து நிற்பதேன்?
அழைப்பு வரவில்லையா அல்லது ............................

வாசற்கதவை நோக்கி அடிக்கடி விரிவதும், பின் நிலம் தாழ்வதுமென அந்தக் கண்கள் எதையோ எதிர்ப்பார்த்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும்.

நாளல்ல, மாதமல்ல வருடங்கள்
ஒன்றல்ல, இரண்டல்ல முப்பது வருடங்கள்

இதுவரை காத்திருந்ததும், இன்னும் காத்துக் கொண்டிருப்பதும் இந்த நாளுக்காகத்தான் இனியும் காத்திருக்க மனதில் மட்டுமல்ல உடலிலும் தெம்பிருக்க வில்லை.

மனதின் அடி ஆழத்தில் பின்னோக்கி நகர்ந்தன சில நினைவுகள்....

நகர்த்து பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்த வேளையில், தந்தைக்கு மாற்றலானதால் பெற்றோர், அக்காவோடு அந்த கிராமத்தை சென்றடைந்தான். அங்கிருந்த தன் கல்வியை தொடர்ந்தான். நகரத்து பாடசாலை, வாத்தியார் தந்தை, மாடிவீடு, கம்பீரமான தோற்றம், இயல்பாகவே முறைத்தவாறமைந்த முகம் இவையெல்லாம் கிராமத்தவர்கள் மத்தியில் பெரிய வீட்டு பிள்ளையாக காட்டியது சரவணனை ஆனால், அவன் எல்லோருடனும் இனிமையாக பேசிப் பழகுவான்.

தெருவோர விளையாட்டு மைதானமும், குட்டிச்சுவரும் நிறைய நண்பர்களை தேடிக்கொடுத்தது. அதில் அவனும் ஒருவன்.

அந்த கிராமம், பாடசாலை தமிழ் வாத்தியார், சின்ன வீடு, ஆலமரம், அதிகாலை சூரியன், ஐந்துமணிப், பறவை, குடைபிடிக்கும் மேகம், நாய்க்குட்டி இவையே உறவுகளாகி போனது அவனுக்கு உறவுகள் இவையென்றால் உயிர்? அது தமிழ் என்று அடிக்கடி கூறிக் கொள்வான். தாயை விட தமிழையே அதிகம் பிடிக்கும் அவனுக்கு தமிழை மூச்சாக சுவாசித்த தன் கணவன் தவறியதில் இருந்தே தன் மகனும் பெரிய தமிழ் எழுத்தாளராக வேண்டும் என்ற ஆசை இருந்தது. அன்னத்திற்கு அவனது இலட்சியமும் இதுவே. வெறியும் கூட அதற்கேற்றால் போல அவனிடம் திறமையும் காணப்பட்டது. அவர்களின் குடிசை வீட்டின் பரம்பரை சொத்தெல்லாம் தமிழ் ஏடுகளே. அவர்கள் சேமித்து வைத்துச் சென்ற நூல்களெல்லாம் இப்போது அவனுக்கு கைகொடுத்தன. இலக்கியங்கள், திருக்குறள், செய்யுட்கள், விருத்தங்கள் எல்லாமே அவனுக்கு அத்துப்படி ஆனால் அவனுக்கேற்ற களம் கிடைத்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் தமிழ் பற்று சரவணனை அதிகமாகவே கவர்ந்தது அவனின் நகர்ப் பாடசாலையில் ஆங்கிலத்திற்கு தான் முதலிடம். தமிழ் எல்லாம் இரண்டாம் நிலை தான். சிலர் தமிழை கொச்சையாக எண்ணியதால் தன் தாய்மொழி மீது அவனுக்கும் ஒரு ஏக்கம் இருந்தது. அதனாலோ என்னவோ தமிழரசுவை அவனுக்கு மிகவும் பிடித்து போனது. தூறலாக ஆரம்பித்த நட்பு சில நாட்களின் பின் அடைமழையாக பொழியத் துவங்கி இருந்தது. நண்பனின் திறமைகளை முதலில் இனங்கண்டது சரவணன் தான். அவன் எழுதிய கவிதைகள், கதைகள் எல்லாம் அவனின் திறமையையும், தமிழ் பற்றையும் வெளிக்காட்டியது. இவற்றை ஏனைய நண்பர்களிடம் காட்டிலும் சஞ்சிகைகள், போட்டிகளுக்கு அனுப்பியும் அவனை வெளிச்சப்படுத்தினான் சரவணன். அத்தோடு நிற்காமல் அவனை மேலும் ஊக்கப்படுத்தினான். இவற்றை தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டால் என்னவென்று யோசனை கூறினான். அவனின் ஒரு பக்கத்தை மட்டுமே அறிந்தவனுக்கு இன்னொரு பக்கம் அதிர்ச்சியளித்தது.

உடல் ஊனமான அம்மா, குடிசை வீடு, ஓலைபாய் இவற்றின் மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருந்தான். அப்பாவின் சேமிப்பு பணத்திலேயே வயிற்றை நிரப்பி கொண்டிருந்தனர். மின் வெளிச்சம் கூட இருக்கவில்லை. தாய்க்கு பணிவிடை செய்வதும் கவனிப்பதும் கடமையாகிப் போனது அவனுக்கு. பாடசாலை கட்டணத்தை செலுத்த வழியின்றி சில நாட்களாய் பாடசாலைக்கே செல்லாமல் இருந்தான் அவன். சோற்றுக்கே வழியில்லாமல் இருக்கும் போது தமிழ், நூல் வெளியீடு எல்லாம் கனவு போல் இருந்தது. என்ன செய்வது? ஏழையாக பிறந்து விட்டானே. அவன் நிலமையறிந்த சரவணன் பண உதவிகளையும் செய்ய தயாரானான் பாடசாலை கட்டணம், வீட்டு செலவுகளை கூட அவனே பார்த்துக் கொண்டான். இலட்சியம், கனவுகளுக்கு பணம் ஒரு தடையல்ல என புரிய வைத்தான். இதுவரை கண்ணீரிலேயே வாடியவன் தன் நண்பனால் முதல் முறையாக இன்பத்தை அனுபவித்து கொண்டிருந்தான் அவன் பார்வையில் சரவணன் கடவுளாகவே தோன்றினான்.

இப்படியே வருடங்கள் ஓடின, காலம் அவர்களை பிரிக்கும் என இருவருமே நினைக்கவில்லை. உயர்தர பரீட்சை முடிந்தவுடன் சரவணனின் தந்தை குடும்பத்தோடு வெளிநாடு சென்று விட்டார். அவன் எவ்வளவு கூறியும் அவர் கேட்கவில்லை. ஆரம்பத்தில் இருவரும் தொலைபேசி மூலம் தொடர்புகளை நீடித்தனர். பின்னர் தமிழரசிடமிருந்து எந்த பதிலும் இருக்கவில்லை. சில நாட்களின் பின் அவனது தாய் இறந்து விட்டதாகவும், அவனும் ஊரை விட்டே சென்று விட்டதாகவும் செய்தியறிந்தவன் துடித்துப் போனான்.

இதற்கு மேல் முடியவில்லை. பொங்கிய கண்ணீரை கைகளால் மறைக்க முயன்றவன் தோற்றுப் போனான். எல்லாமே நேற்று நடந்தது போல் இருந்தது. மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன. சரவணன் தன் நினைவுகள் புதைந்து போன கிராமத்திற்கு மீண்டும் வந்திருந்தான். எல்லாமே மாறிப்போய் இருந்தது. அப்போதிருந்த கிராமமில்லை இது, ஆனால் அந்த நட்பு இன்னும் மாறவில்லை. இல்லாவிட்டால் அவன் இங்கு வந்திருக்க வாய்ப்பில்லை. மனைவி, பிள்ளைகளை பொறுத்த வரையில் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர் கடைசி காலத்தில் கிராமத்தை பார்க்க ஆசைப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயே உயிரைவிட எண்ணுகிறார். அதனால் தான் எந்த நொடியில் உயிர் போகுமோ? எனும் நிலையிலும் இங்கு அழைத்து வந்திருந்தனர். ஆனால் உண்மை அதுவல்ல. எங்கே தன் நண்பன் சொன்னதை செய்து விடுவானோ? என்ற பயத்தினால் தான் இங்கு வந்திருந்தார். ஆனாலும் அவரின் மனம் அப்படியேதும் நேர்ந்து விடக் கூடாது என பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது. அந்த மனம் பலவாறாக எண்ணியது.

நண்பனை பற்றி மனதில் ஒரு உருவத்தை கற்பனை செய்து வைத்திருந்தார் அவர். அது ஒரு எழுத்தாளரின் உருவம். இப்போது அவன் எவ்வளவு பிரபல்யமாகி இருப்பான்? இவனது கனவெல்லாம் நனவாகி இருக்குமா? என்னை நினைவில் வைத்திருப்பானா? தகவல் அறிந்தவன் வந்து விடுவானா? அப்படியானால் ஏன் தாமதம்? ஆயிரம் கேள்விகள் அவன் உயிரை இறுக்கி பிடித்து வைத்திருந்தது.

அழைப்பு மணி கேட்டது, அவரின் மனைவி கூறினாள், அவர் வந்து விட்டாரென்று, அவன் எண்ணியதை விட முற்றிலும் மாறுபட்ட ஓர் உருவம். ஆனால் அவன் தான் தன் உயிர் நண்பன் என்பதை புரிந்து கொண்டான் சரவணன். இருவரின் வாயிலும் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. தொண்டை குழிக்குள்ளேயே சிக்கிக் கொண்டான். கண்கள் நான்கும் நீர்க்குளமாகின. அவன் எதையும் பேசவில்லை. தனது பையில் இருந்து எதையோ எடுத்து சரவணனின் கையில் வைத்தான். அதுவொரு சிறுகதை தொகுப்பு. ஆனால் தலைப்பு இடப்பட்டிருக்கவில்லை. தனது பயம் உண்மையாகி விட்டதே என கவலைப்படுவதா? அல்லது நண்பனை நினைத்து சந்தோஷப்படுவதா? என எண்ணி முடிப்பதற்குள் அந்த கண்கள் மூடப்பட்டு விட்டன.

என்றாவது ஒரு நாள் எனது முதல் நூல் வெளியிடப்படும். அதற்கு நீதான் தலைப்பிட வேண்டும் என்றான் அவன். "ஒரு வேளை அது நடக்காவிட்டால் " இந்த நூலுக்கு தலைப்பும் இருக்காது, நாலும் இருக்காது. "இது என் நண்பன் மேல் சத்தியம் என்றால் அவன் அந்தவார்த்தைகள் மனதில் எதிரொலித்தது. எல்லாமே முடிந்து போனது. அந்த கால்கள் நடந்து கொண்டிருந்தன. சிறுகதைகள் சிதறிக் கிடந்தன. மீண்டும் மீண்டும் எதிரொலித்தன அந்த வார்த்தைகள்.

பத்மகலா கருணாகரன்
13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல்

கனகம் அடுப்பூதிக் கொண்டிருந்தாள். "அம்மா, இந்த தடவையும் நான் க்ளாஸ்ல ஒன்னாம் புள்ள..." என்று கொல்லிக் கொண்டே குதூகலமாய் ஓடி வந்தாள் வாணி. தன் கெட்டிக்கார மகளை அணைத்து முத்தமிட்ட கனகம் "என் கண்ணு, நல்லா படிக்கணும் என்ன?" என்றாள் "அம்மா நான் பெரிசானதும் ரேணுகா டீச்சர் மாதிரி வரணும்" வாணியின் குரல் பெரிதாய் ஒலித்தது.

பக்கத்து வீட்டில் உள்ள தோழியருடன் விளையாடி விட்டு வீடு திரும்பிய வாணிக்கு குடிலுக்குள் நடைபெறும் சம்பாஷனை கேட்டது. "கனகம் நமக்கு யோகம் அடிச்சிருச்சிடி" என்றார் செல்வம், வாணியின் தந்தை. "என்னங்க சொல்றிங்க?" என்று வியந்தபடியே கனகம் வினவ"ஆமாண்டி, நா வேல பாக்குற டாக்டரய்யா வீட்டல வேலக்கி ஒரு பொண்ணு வேணுமன்னு எஜமானியம்மா கேட்டாங்க. கை நிறைய காசு கொடுக்கறதாவும் சொன்னாங்க. உடனே எனக்கு நம்ம வாணி ஞாபகம் தான் வந்துச்சு. நானும் அதச் சொல்ல நாளக்கே கூட்டி வரச் சொன்னாங்க" என்று ஆவலுடன் கூறி முடித்தான். ஆனால், "கனகம், என்னங்க, நம்ம வாணி எவ்வளவோ நல்லா படிக்கிற புள்ள? அவ படிக்கட்டுமே, வேலக்கி வேணும்னா வேற ஆள் தேடுவோம்" என்றாள். "படிப்பு என்னடி படிப்பு? நம்மளுக்கு இதெல்லாம் சரிப்படாது. காசுதான் தேவ. நம்ம புள்ளங்களுக்கு தானே? அவளுக்கு அங்க நல்ல சாப்பாடு, உடுத்த நல்ல துணினு எல்லாம் கிடைக்கும். நாளைக்கு அவ போறா" என்று முடிவாகக் கூறிவிட்டான்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த வாணியின் நெஞ்சடைத்து கண்களில் நீர் வழிய ஆரம்பித்தது. விம்மி அழுத வாணி கனகத்திடம் வந்தாள். "அம்மா நான் ஸ்கூலுக்குப் போகணும்மா..." என்றவாறே விம்மினாள். கனகமும் தன் விழிவழியே வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறு மகளின் தலையைக் கோதினாள். கணவனை மீறி ஒன்றுமே செய்ய முடியாதவளாய்......!

விடிந்ததும் வாணி அழுததாள் வீங்கிய கண்களைத் திறக்கவும் முடியாமல் தடுமாற கனகம் அவளை ஆயத்தப்படுத்தினாள். "வாணி, வாம்மா போகனும், நேரமாகுது" என்றபடியே வாயிலருகே செல்லும் போது தாயை கட்டியணைத்து முத்தமிட்டு கனத்த மனதுடன் வாணி வெளியேறினாள்.

வாணி பன்னிரெண்டு வயது நிரம்பிய பெண். மூன்று பிள்ளைகளுள் மூத்தவள். மிகவும் வறிய குடும்பம் என்றாலும் ஒருவாறு கடன்பட்டு வாணியை பாடசாலையில் சேர்த்தாள் கனகம். படிப்பில் ஆர்வமும் ஆற்றலும் உடைய வாணி ஒவ்வொரு பரீட்சையிலும் வகுப்பில் முதலாமவளாகவே இருந்தாள். தான் ஒரு ஆசிரியையாக வேண்டுமென்ற கனவு அவளுள் உருவானது, கனகமும் ஆதரவு காட்டினாள். செல்வம் டாக்டர் ஒருவரின் வீட்டில் தோட்டக்காரனாய் இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது தாம்மா எம் மக வாணி, குடுக்கற வேலயெல்லாம் செஞ்சிடும் என்று தன் எஜமானி சாரதாவிடம் கூறி விட்டு தோட்ட வேலையை பார்க்கச் சென்றான். " இதப்பாரு வாணி, இந்த வீட்ட கூட்டி, பாத்திரம் கழுவி, துணியெல்லாம் காயபோட்டு, எம் பிள்ளையட சப்பாத்து கழுவி வைக்கணும். வேற நா சொல்ற வேலகளயும் செய்யனும். என்ன புரியுதா" என்று கூறி தும்புத்தடியைக் கொடுத்து விட்டு நகர்ந்தாள். ஒருமுறை அவ் வீட்டை ஏறிட்ட வாணி திகைத்தாள். "இது வீடா இல்ல அரண்மனையா?" என்றது அவள் மனம். மாலையில் வீடு வந்த டாக்டர் ராஜ் "இதென்ன சாரதா இவளோ சின்னப் பொண்ணு வீட்டு வேலக்கி?" என்றார். "இங்க நா படுற கஷ்டமெல்லாம் எனக்கு மட்டும் தான் தெரியும். நீங்க பேசாம இருங்க" என்றாள். ராஜ் மௌனமான போதும் அவருக்கு வாணி வேலைக்கமர்த்தப்பட்டிருப்பது சற்றும் பிடிக்கவில்லை. "பாவம் சின்ன பொண்ணு.... படிக்கிற வயசுல ...." என நொந்து கொண்டார்.

தினமும் வாணி அவளுக்கென குறிக்கப்பட்ட எல்லா வேலைகளையும் செய்தாள். இருந்தும் சாரதா ஏதேனும் குறை சொல்லிக் கொண்டே இருந்தாள். அவ்வீட்டுப் பிள்ளைகள் பாடசாலை செல்லும் போது வாணியின் கண்களில் மளமளவென கண்ணீர் வடியும். ஏக்கத்துடனேயே அவள் காலம் கழிந்தது.

அன்று, சாரதாவின் மகள் வர்ஷாவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. வாணி அங்குமிங்குமாய் ஓடியோடி வேலை செய்துக்கொண்டிருந்தாள். அதன் போது வாணி ஒரு தட்டில் சூடான தேநீர்க் கோப்பைகளை சாப்பாட்டு மேசையருகே கொண்டு வரும் போது ஓடி வந்த வர்ஷாவுடன மோதுண்டு கோப்பைகள் சிதறி விழுந்தன. அத்துடன் சூடான தேநீர் வாணியின் கை, கால்களில் கொட்டவே பெரும் சத்தத்துடன் அழ ஆரம்பித்தாள். அவ்விடத்துக்கு வந்த "ஏன்டி பாத்து வரத்தெரியாதா?" என்று கத்தியவாறே வர்ஷாவை கூட்டிச் சென்றாள் சாரதா. அழுத வண்ணமிருந்த வாணியை ஒருவாறு ஆறுதல் படுத்தி அவ்விடத்தை சுத்தம் செய்து விட்டு நகரந்தார் ராஜ்.

அன்றிரவு சாரதாவிடம் "ஏம்மா சாரதா வாணியோட கையில தேநீர் கொட்டி இப்போ கொப்புளம் வந்திருக்கு அதோட ஆழமான காயமும் இருக்கே. வெளில தெரிஞ்சா பொலிஸ் கேஸ்னு ஆயிடலாம். அவள அவ வீட்டுக்கே அனுப்பிடுவோம். செல்வத்தோட நான் பேசறன்" நல்லா யோசிச்சு ஒரு முடிவெடு" என்று பொய்யை மெய்யாக்கி மிகைப்படுத்தி கூறி முடித்தார். சற்று யோசித்தவள் "பொலிஸ்.... வேணாங்க . அவள நாளக்கே அனுப்பிடுவோம்" என்று கூறிவிட்டு உறங்கப் போனாள் சாரதா.

மறுநாள் காலை செல்வம் வந்ததும் டாக்டர் "செல்வம்..... உம் பொண்ணு இங்க வேலை செஞ்சது போதும். அவள கூட்டிட்டு போய் படிக்க வைய் அதுக்கான செலவ நான் பார்க்கிறேன்" என்றார். செல்வம் "சரிங்க ரொம்ப நன்றிங்கய்யா" என்று கை கூப்பி விட்டு வாணியை அழைத்துச் சென்றான். நடந்தது எதுவும் அறியாத வாணி குதூகலமாய் வெளியேறியதைக் கண்ட ராஜ் அவளை வேலையை விட்டு அனுப்பிய திருப்தியுடன் வீட்டினுள் நுழைந்தார்.



பாதிமா ஷமீஹா
13, வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக்காததால் படித்த பாடம்

அன்று மூன்றாம் தவணை விடுமுறை வழங்கும் நாள். சங்கர் மகிழ்ச்சியுடன் பாடசாலைக்குச் சென்றான். வகுப்பில் சங்கரைத் தவிர அனைவரும் அச்சத்துடன் காணப்பட்டனர். காரணம் அன்று இறுதித் தவணைப் பரீட்சைப் புள்ளிகள் வழங்குவதாக அவர்களது வகுப்பாசிரியர் கூறியிருந்தார். ஆனால் சங்கருக்கு அதைப்பற்றி ஒரு கவலையும் இல்லை. அவன் வகுப்பில் எப்போதுமே இறுதி மாணவனாகத்தான் வருவான். அவனது தாய் தந்தையர் கல்வி கற்காதவர்கள் அதனால் அவர்களது வறுமையை பொருட்படுத்தாது அவனை வகுப்புகளுக்கு அனுப்பிப் படிக்கவைத்தனர். ஆனால் அவன் படிப்பில் அக்கறை காட்டுவதாகவே இல்லை. அவனது வகுப்பாசிரியரும் அவனுக்கு பலதடவை அறிவுரை கூறியும் அவன் கேட்பதாயில்லை.

காலைக்கூட்டம் முடிந்து அனைத்து மாணவர்களும் வகுப்பில் வந்து அமர்ந்ததும் அவர்களது வகுப்பாசிரியர் வந்து தேர்ச்சி அறிக்கையை வழங்கினார். வழமை போல சங்கர் அனைத்துப் பாடங்களிலும் குறைவான மதிப்பெண்களையே எடுத்து இருந்தான். ஆசிரியர் அவனை அழைத்து அடுத்த வருடம் நீ தரம் ஒன்பதிற்கு செல்கிறாய் தொடர்ந்து நீ இவ்வாறான குறைந்த மதிப்பெண்களை வாங்குவாயானால் உன்னால் கா. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற முடியாது ஆகையால் ஒழுங்காகப் படி எனக் கூறினார். ஆனால் அவ் அறிவுரையை அவன் பொருட்படுத்துவதாகவே இல்லை. அன்று பாடசாலை முடிந்து வீட்டிற்கு சென்று சாப்பிட்டு விட்டு விளையாடச் சென்றுவிட்டான். மாலை தாமதமாகிதான் சங்கர் விடு திரும்பினான். அவன் வீடு திரும்புகையில் அவனது தந்தை வேலை முடிந்து வந்திருந்தார். சங்கரைக் கண்டதும் தேர்ச்சி அறிக்கையை கேட்டார். அவன் தேர்ச்சி அறிக்கையைக் கொண்டு வந்து கொடுத்ததும் அதனை பார்த்த அவனது தாய் தந்தையர் அவனை அழைத்து அன்பாகவே அறிவுரை கூறினார். ஆனால் சங்கரோ அவர்களது அறிவுரையயைக் கேட்டு வெறுப்படைந்தான். அன்று இரவோடு இரவாக வீட்டை விட்டு வெளியேறிவிட்டான்.

சங்கர் வீட்டை விட்டு வெளியேறி பாதையோரத்தில் நடந்து செல்கையில் அவ்வழியே வந்த முரடனொருவன் சங்கர் தனியே நடந்து வருவதைக் கண்டான். சங்கரிடம் சென்று விசாரித்த போது அவன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாக கூறினான். அப்பொது அம்முரடன் தன்னுடன் வலுமாறும் அவனுக்க வேலை தருவதாகவும் கூறினான். சங்கரும் அவனை நம்பி அவனுடன் சென்றான். அவனது வீட்டுக்கு சென்றதும் சங்கரது வயதை ஒத்த ஒருவன் கையிலும் காலிலும் கட்டுடன் இருந்தான். அவனைப் பார்த்ததும் சங்கருக்கு மனதிற்குள் ஓர் அச்சம் தோன்றியது. கட்டுடன் இருந்தவனோ சங்கரைப் பரிதாபமாக பார்த்தான். பிறகு அம் முரடன் இருவரையும் நித்திரை செய்யுமாறு கூறிவிட்டு அவனும் நித்திரைக்குச் சென்று விட்டான். மறுநாள் அதிகாலையிலேயே அம் முரடன் சிறுவர்கள் இருவரையும் எழுப்பி பிச்சை எடுக்க செல்வதற்கு தயாராகுமாறு கூறினான். அவன் கூறியதைக் கேட்டு சங்கர் அதிர்ச்சியுடன் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர் சங்கரைப் பார்த்து அம்முரடன் ஏளனமாகச் சிரித்து விட்டு"சரி சரி வா உன்னை பிச்சை எடுக்க வைப்பதற்கு தயார் படுத்தவேண்டும்" என்று கூறி அவனை அழைத்துச் சென்று கைகால்களில் கட்டு போட்டு விட்டு மற்றச் சிறுவனுக்கு இன்று செல்ல வேண்டிய வீதியை கூறிவிட்டு சங்கரை ஒரு தெருவுக்கு அழைத்துச் சென்று "நீ இன்று பிச்சை எழுக்க வேண்டிய இடம் இதுதான். தப்பிச் செல்ல வேண்டும் என்று மட்டும் எண்ணாதே இங்கு நம் ஆட்கள் உன்னைக் கண்காணித்துக் கொண்டுதான் இருப்பாங்கள்" என்று கூறிவிட்டு சென்றுவிட்டான். சங்கருக்கோ அழுகை அழுகையாக வந்தது. தாய் தந்தை கூறியதைக் கேட்டு இன்னும் சற்று முயன்று படித்திருக்கலாம் என்று எண்ணினான். அவன் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு எதிர்த்திசையில் ஒரு பொலிஸ் நிலையம் இருப்பதைக் கண்டான். அவனது மூளை மின்னலைப் போல் வேகமாக செயற்படத் தொடங்கியது. அக்கம் பக்கம் பார்த்து விட்டு வேகமாக பாதையைக் கடந்து கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பொலிஸ் நிலையத்திற்குள் சென்று அங்கிருந்த அதிகாரியிடம் நடந்த அனைத்தையும் கூறினான். அவ்வதிகாரி உடனடியாகச் செயல்பட்டு அம் முரடனையும் அவனது கூட்டத்தாரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்த சிறுவர்களையும் அவரவரது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர். சங்கரை கண்ட அவனது அவனது பெற்றோர் சூரியனைக் கண்ட செந்தாமரைப் போல முகம் மலரந்து அவனைக் கட்டித் தழுவினர். சங்கர் அவனது தவறுக்கு தாய் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டு அன்று முதல் படிக்கத் தொடங்கினான்.

சிதுஷினி
13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவிஞன் பாரதியே நான் விரும்பும் புலவன்

அன்னை தமிழிற்கு இலக்கணம் வகுத்தான் அகத்தியன். அதை அரவணைத்தான் நக்கீரன். உலகமே உவர்ந்து ஏற்கச் செய்தான் உண்மை புலவன் வள்ளுவன் யார் முழுதும் போற்றச்செய்தான் கவியரசன் கம்பன். இவற்றுக்கிணையாக இன்பத்தமிழை புரட்சி நடையில் இட்டுச்சென்றான் நான் விரும்பும் புரட்சிக்கவிஞன் பாரதி.

பின்னால் வரப்போகும் விடயங்களை முன்கூட்டியே எடுத்தியம்பிய சிறப்பினை உடையவராதலின் வரகவி என்றும், விஞ்ஞான உலகில் எதனை, எதனை எல்லாம் செய்ய வேண்டும் என்று அடுக்கடுக்காய் ஆயிரம் விடைகளை அள்ளிக்கொட்டியதால் புதுமைக்கவி என்றும் நம்நாட்டு மக்களிடையே தேசிய உணர்ச்சியை புகுத்தியமையால் தேசியக்கவி என்றும் பல பெயர் பெற்ற பாரதியார் புரட்சி நடையில் காட்டிய ஊக்கம், நவிலும் தரமன்று.

அக்காலத்து இலக்கியங்கள் அனைத்தும் படித்த ஒருசாராரே சுவைத்து மகிழக்கூடியதான இருந்தது. இன்னிலையை மாற்றிபண்டிதர் தொடக்கம் பாமரர் ஈறாக படிக்கக்கூடிய முறையில் கவிசமைத்த பெருமை நான்விரும்பும் புரட்சிக்கவிஞருக்கே உரியது. நான் விரும்பும் புலவரைப் பின்பற்றியே பாரதிதாசன், தேசிகவினாயகம் பிள்ளை முதலிய ஒரு புலவர் சமுதாயமே உருவாகியது என்று பெருமையுடன் கூற நான் விரும்புகின்றேன்.

மேலும் சற்றே ஆராய்வோமானால் புரட்சிக்கவிஞன் புதுமைப் புதிர் புரிந்துவிடும். பண்டைக்காலத்தில் பழந்தமிழ்ப் புலவர்கள் யாரைப்பாடினார்கள்? பெரும்பாலும் அரசனைப்பாடினார்கள். அவன் தனையணை பாடினார்கள் ஏன் கவி உலகமே போற்றும் கம்பனை பாருங்கள் ஆரிய வேந்தன் இராமனைப்பாடினான். இவற்றை மாற்றி மனமகிழ்ந்து பாடிச்செல்லும் பறவைகளையும், பாடுபட்டு உழைக்கும் பாட்டாளிகளையும், பாரதமக்களையும் பாடிப்பாடி பண்படையச்செய்தானே இத்தான் பாரதி செய்த புதுமை. இத்துடன் நின்றுவிடவில்லை என் கவிஞன் எடுத்த உடனேயே எளிதில் பொருள் விளங்கக்கூடிய முறையில் தனது கவிகளை அள்ளி வழங்கினான் எமது சமுதாயத்திற்கு.

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்றதோர் பாரததேசம் தன்னை செய்யப்புறப்பட்ட பாரதியார் இத்தரு மனையில் நீங்கி இடர்மிகுசிறைப்பட்டாலும் மாறி பழிமிகுந்து. இழிவுற்றாலும் விதந்துபல கோடி இன்னல் விளைந்து எனை அழித்திட்டாலும் என்று இருக்கின்ற சமுதாயத்தவரின் நாடி நரம்புகளில் எல்லாம் சுதந்திர உணர்ச்சியை ஊட்டிவிட்ட நம்புலவன் வருகிற சமுதாயம் அதைவிட உணர்ச்சி உடையதாய் இருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து அதற்கு வேண்டிய பெண்கள் சமூகத்தை நோக்கி தனது சொல்லம்புகளை திருப்புகின்றார்.

இயல்பாகவே ஆசைகள் நிறைந்த பெண் குலத்தை நோக்கி ஆணும் பெண்ணும் நிகரென்று கொள்வதால் அறிவில் ஓங்கு இவ்வையகம் தழைக்குமாம் என்று ஆசைக்காட்டி நிமிர்ந்த நன்நடை நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறிகளும் திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால் செம்மை மாந்தர் திறம்பு வதில்லையாம் என்று அறிவூட்டி நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம் நீசத் தொண்டும் மடைமையும் கொண்டதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலத்தில் மாண்புயர் மக்களை பெற்றிடல் சாலவே அரிதாவதோர் செய்தியாம் என்று அவர்களின் அவசியத்தையும் சுட்டிக்காட்டி பலனுள்ள பாரத சமுதாயத்தை படைத்து விடுகிறான் என்று சொன்னால் அது முற்றும் பொருத்தமானதே. இதனால் அவனுள்ளும் புரட்சி நடை அதனாலேயே அவன் எனது உள்ளத்தையும் ஆழ்கின்றான்.

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட முடியும் என்று முதல் முதல் முயன்றவன். எமது புரட்சிக்கவிஞன் அன்னியரின் ஆட்சியில் அயர்ந்து தூங்கிய பாரத மக்களை தமது வசவுறு கவிதைகளால் எழுதல் உறச்செய்தமை அவனது அளப்பெரும் அறிவிற்கோர் அரியசான்றாகும் வெள்ளையனை போற்றி வாழ்ந்தோரையும் படைபட்டாளங்களைக் கண்டு பயந்தோரையும் ஏன் இந்த வம்பு என்று ஒதுங்கிக் கொண்டோரையும் உணர்வுப்பெறச் செய்து சுதந்திரம் சுயாட்சி என்ற சொற்களுக்கு தெய்வீகக் கருத்தூட்டியவன் பாரதியார். சுதந்திரம் எங்கள் மூச்சு சுயாட்சி எங்கள் பேச்சு என்று உணர்வூட்டியவர் நான் விரும்பும் புரட்சிக் கவிஞன் பாரதியார்.

அகிலத்தை ஆளுகின்ற அகிலாண்ட நாயகியே என் நாவில் நடமாடும் நாமகளே, வெற்றித் திருமகளே "பறங்கித்துரை என்ற காலம் போச்சே" என்று பள்ளுப்பாடத் தொடங்கினேன் தாயே பண்பற்ற சில பாரத மக்கள் இன்னும் அடிமையாய் இருப்பதையே பெரிதென மதிக்கின்றனர் தாயே இவர்களை சுதந்திர தாகம் உள்ளவர் ஆக்கு அல்லது என்னையே அழித்து விடு என்று இறைந்து வேண்டுகின்றார். "மோகத்தைக் கொன்று விடு அல்வால் என் மூச்சை நிறுத்தி விடு" "தேகத்தை சாய்த்து விடு அல்வால் என் சிந்தனையை மாற்றிவிடு" என்றும் சிந்தனையைத் தெளிவாக்கு என்று உடலெல்லாம் ஊற்றி நிற்கின்ற சுதந்திர தாகத்தோடு ஆவேச உணர்ச்சியையும் கலந்து சுடுசரம் என தொடுக்கின்றார் தனது பாடலை.

இவ்வாறு நான் விரும்பும் புலவன் நம்நாடு, நமது பண்பு, நமது வீரம் என்று நின்றுவிடவில்லை பாரதத்தையும் அதைச் சார்ந்த கடலையும் கடந்து அப்பால் உள்ள தேசங்கள் அதனையும் ஒன்று சேர்த்து உலகத்தில் ஒருவன் என்ற தலைப்பில் உலக நன்மைக்கான அட்டவணைத் திட்டங்கள் அத்தனையும் ஆக்குகின்றான்.

அவர் பாடாத பொருள் இல்லை. அவர் ஒரு எளிமையான புலவர் இலகு தமிழில் கவிசமைத்தவர் எனவே அவர் சமுதாயத்தில் இடம் பிடித்தார் இத்தகைய புலமையும் எளிமையும் மிக்க புலவரே நான் விரும்பும் புலவர்.

திருமதி. இளகுப்பிள்ளை
தமிழ் பிரிவு பகுதித் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னத்திற்கு தூது அன்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில்நுட்பம் - அறிமுகம்



அணுக்களினதும் மூலக்கூறுகளினதும் அளவுத் திட்டத்தில் கட்டமைப்புத் தொகுதிகள் ஈடுபடுத்தப்படுகின்ற ஆராய்ச்சிகளினதும் அபிவிருத்தியினதும் ஒரு துறையாக நனோ தொழிநுட்பம் விளங்குகிறது.

நனோ என்ற சொல் பில்லியனின் ஒரு பங்கைக் குறிக்கின்றது. நனோ (Nano) என்பது கிரேக்கச் சொல்லில் குள்ளம் என்பதாகும். $\frac{1}{1\,000,000,000} = 10^{-9}$ எனும் சிறிய பெறுமானம் பொருட்டு அமைக்கப்பட்ட மிக நுண்ணிய பகுதியாகும். இதற்கமைய $1nm = 10^{-9}$ ஆகம். அதாவது $\frac{1}{1\,000,000,000} = 10^{-9}$ அது மனிதனின் தலைமயிரின் விட்டத்திலும் சிறியதாகும். நனோ கட்டமைப்புக்கள் (Nano Structures) ஒரு சராசரி உயிரியற் கலத்தின் விட்டமான 1000 nm ம் பார்க்க சிறியதாக இருக்கின்றன. ஒரு 100 nm கனவளவின் விளிம்பானது பில்லியன் அணுக்களால் வரையறுக்கப்பட்டிருக்க முடியும்.



Dr.K.Eric Drexler

"நனோ தொழிநுட்பம்" என்ற பதத்தை அறிமுகப்படுத்தியவர் டோக்யோ விஞ்ஞானப் பல்கலைக்கழக பேராசிரியர் நொறியோ தனிகுச்சி (Prof. Noria Taniguchi) இவர் நனோ அளவிடையில் பதார்த்தங்களின் சிறப்பியல்புகளை ஆராய்ந்து விளங்கினார். நனோ தொழிநுட்பத்தின் தந்தையாக Dr.K.Eric Drexler கருதப்படுகின்றார்.

Dr. K. Eric Drexler நனோ தொழிநுட்பத்தை கருதுகோளாகவன்றி ஆதாரபூர்வமாக கொள்கை அடிப்படையில் அணுக்களையும் மூலக்கூறுகளைனயும் கையாள்வது பற்றி விளக்கினார். பதார்த்தங்களின் பெரிய துண்டுகளை உருவமைப்பதற்குப் பதிலாக Drexler துல்லியமாக ஒழுங்கான வடிவமைப்பில் அவற்றின் கூற்று அணுக்களை ஒன்றாக இடுவதால், கட்டமைப்புக்கள் ஆக்கப்படலாம் எனக் கூறினார். (Link e - drexler. com)

இதன்படி 1-100 nm அளவிடையில் அமைந்த உருவமைப்புக்களைக் கொண்டு அச்சிறு அளவாக அமையும் போது வெளிப்படும் சிறப்புப் பண்பைக் கொண்டு ஆக்கப்படும் பொருட்களும், அப்பொருட்களில் பயன்படுத்தும் நுட்பவியலும் நனோ தொழிற்நுட்பம் எனப்படும்.

(Understanding and Control of matter at dimensions between approximately 1 and 100 nano meters, where unique phenomena enable novel application)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதார்த்தங்களின் பரிமாணம் 1-100 nm அளவிடைகளில் அமையும் போது அது நனோப்பதார்த்தம் எனப்படும். நனோ தொழிநுட்பவியல் நனோத் துணிக்கைகளைத் தேவைக்கேற்ப பயன்படுத்தி நனோ பல்பகுதியங்கள், நனோ உலோகங்கள், மருந்துகள், நனோ ரோபோக்கள் நனோ கணினிகள் போன்ற செயற்றிறன் மிக்க பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.


சில உலோகங்கள் நனோ அளவிற்குட்படும் போது வெவ்வேறு இரசாயன இயல்புகளையும் பௌதிக இயல்புகளையும் காட்டுகின்றன.

## நனோத் தொகுதிகள் (Nano Systems)

இயற்கை நனோத் தொகுதி தொடர்பான மிகப் பொருத்தமான உதாரணம் உயிர்க்கலமாகும். கலங்களினுள் காணப்படும் பல்வேறு புன்னங்கங்கள் பல்வெறு தொழிறுகு இசைவாக்கமடைந்தவை. எனவெ இவற்றை இயற்கையான நனோ தொழிற்சாலையாகக் கருத முடியும்


Plant Cell

கலம் என்பது ஓர் உயிரியின் அமைப்பு ரீதியானதும் தொழிற்பாட்டு ரீதியானதும் அலகாகும். இதில் பல செயன்முறைகள் நடைபெறுகின்றன. சுவாசம், கழிவகற்றல் வளர்ச்சி, தொகுப்பு என்பன அவற்றுள் சிலவாகும். இவையாவும் நனோ பரிமாற்றத்திலான செய்முறைகளே நனோத் தொழிநுட்பமூடாக எதிர் காலத்தில் இந்த இயற்கை உயிர்த் தொழிற்பாடு இதிலும் பார்க்க வினைத்திறன் கூடியதாக செயற்கைத் தொகுதிகள் உருவாக்கப்படலாம். அப்படியானால் ஒளித்தொகுப்பு எனும் செயற்பாடு வெற்றிகரமாக செயற்கைத் தொகுதிகள் மூலம் உருவாக்கப்படின் செயற்கையாகவும் ஒளித் தொகுப்புச் செயன்முறையை நடத்த முடியுமாயின் உலகின் உணவுப் பிரச்சினையே நீங்கி வீடும்.



தாமரை இலைகளில் நனோ மட்டத்தினால் ஆன துணிக்கைகள் இணைந்த புறத்தோல் காணப்படுவதால் நீர்த்துளி இலைமீது ஒட்டுவதில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு வில்லெம் பர்த்லெட் கண்ணாடிப் பரப்பை உருவாக்கினார். இதே தத்துவத்தை "நனோ கெயர்" நிறுவனம் நீர் எதிர்த் தன்மையுடைய நனோ டெக்ஸ் துணிவகைகளை உற்பத்தி செய்தது இதனடிப்படையில் இராணுவ சீருடைகள், காலுறைகள் போன்றவை செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நீர்த்தாவரங்களின் இலைகள் நீரில் ஈரமற்றுக் காணப்படுகின்றன. சல்வீனியாவின் இலைகள் இதற்கு எடுத்துக் காட்டாகும். இத்தத்துவத்தின் அடிப்படையில் நீச்சல் உடைகள் தயாரிக்க முடியும்.



பல்லியின் கால்களில் காணப்படும் மிகச்சிறிய முட்கள் போன்ற அமைப்புகளில் உதவியால் இவை சுவரில் மேல் விழாது ஏறிச் செல்கின்றன.



வண்ணத்துப்பூச்சியில் செட்டைகளில் காணப்படும் நிறங்கள் மிக மெல்லிய படைகளாக காணப்படுகின்றன. (Self assemble) நனோ தொழினுட்பத்திலும் இயற்கையில் காணப்படும் சில நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளது.

## செயற்கை நனோத் தொகுதி

நனோ தொழிநுட்பத்தில் அணுக்களையும் மூலக் கூறுகளையும் உரிய இடங்களில் அமைத்து உயர்தரமுள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன இவை

- அளவிற் சிறியது
- உறுதியானது
- பாரம் குறைந்தது
- மலிவானது
- அதிர்வுகளைத் தாங்கக் கூடியது
- துருப்பிடிக்காதது
- தடிப்பு குறைவானது

## 1. நனோ மூலக் கூற்று மாதிரி

நனோ மூலக்கூற்று சாதன மாதிரிகள் ஒரு பகுதியோ அல்லது பல பகுதியோ கொண்டு தயாரிக்கப்படும்.






## 2. காபன் நனோக்கட்டமைப்பு


நனோ தொழிநுட்பவியலில் பயன்படும் பிரதான மூலகம் காபன் ஆகும். புளரின் செயற்கையான உற்பத்தி செய்யப்பட்ட மூன்றாவது பிறதிருப்பமாகும். காபன் அணுக்கள் அவற்றின் பிரத்தியேகமான இயல்புகளால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு Carbon Nano tube, Bucky ball, Carbon Nano horns போன்றவை உருவாக்கப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காபன் நனோகுழாய்** : காபன் அணுக்களால் அறுகோண வடிவமைப்பில் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு குழாயுருவான அமைப்பாகும். 1991 ல் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின்படி (Sumio Lyimo) காபன் நனோக் குழாய்கள் உருக்கைவிட 100 மடங்கு பலமானவையென அறியப்பட்டது.



Bucky ball



Nano tubes



Carbon nano horns

**காபன் பக்கி பந்து (Carbon buck ball)** :

$C_{60}$ துணிக்கைகளைக் சமச்சீராக ஒழுங்கமைத்து செய்யப்பட்ட மிகச்சிறிய கோளமாகும். இங்கு 20 ஐங்கோணிகள், 12 அறுகோணிகள் அமைப்புகள் கலந்து காணப்படுகின்றன. சிறு கால்பந்தின் அமைப்பிற்கு ஒப்பானது. Buck ball ஒரு கால்பந்து போல் பெரிதாக இருந்தால் ஒரு கால்பந்து புவியைப் போல் பெரிதாக இருக்கும்

நனோப் பதார்த்தங்கள் கீழிலிருந்து மேல் அணுகு முறையில் (Bottom to top approach) உற்பத்தி செய்யப்படுகின்றது. உற்பத்தி செய்முறைகளின் போது நனோ பருமன் கொண்ட பகுதியில் இருந்து ஆரம்பித்துச் செல்லும் போது உற்பத்தி பொருட்கள் உயர்தரம் கொண்டதாக அமையும். இதனை பேர்மன் Bottom to top approach என அழைத்தார்.

**மூலக்கூற்று நனோ தொழிநுட்பம் (MNT)** இதன் பிரதான நோக்கம் மூலக்கூற்றுப் பொறிகளினதும் கருவிகளினதும் திட்டமமைக்கப்படல் மாதிரியுரு அமைத்தல் படடியுருவாக்கல் போன்றவையாகும். MNT யின் முக்கிய குறிக்கோள் ஒவ்வொரு அணுவுடனும் அதன் முறையான இடத்தில் சிக்கலான உற்பத்திகளை தயாரிப்பதாகவுள்ளது. இது பெரிய மூலக்கூற்று உருவமைப்புக்களை உருவாக்குவதற்கும் பின் அவற்றை உற்பத்திப் பொருளாக ஒன்று சேர்த்ததுக்கும் தேவையாக இருக்கின்றது.

**மூலக்கூற்று கூட்டுச் சேர்க்கைகள்** (Molecular Assembles) மூலக்கூற்றுச் கூட்டுச் சேர்க்கைகள் மேலதிக மூலக்கூற்றுக் கட்டமைப்புக்களை உருவாக்கும் ஆற்றல் கொண்ட மூலக்கூறுகளின் தொகுதிகளாக உள்ளன.

மூலக்கூற்று கூட்டுச் சேர்க்கைகள் சில வேளை Nanorobots நனோ தானியங்கு பொறிகள் எனப்படும். நனோ பரிமாணமுள்ள உபகரண துணைப்பாகங்களை உற்பத்தி செய்ய விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

நனோ தொழிநுட்பவியலின் பயன்பாடு
நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியில்

1.கணிணிகள், PDAs, செல்லிடத் தொலைபேசிகள் நனோ தொழிநுட்பத்தில் பயன்படுத்தி உற்பத்தி செய்வதால் புவியிலுள்ள வறிய மக்களுக்குக் கூட மலிவாக வாங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நனோ அளவில் தயாரிக்கப்படும் ஆடைகள் தூசி அழுக்குகள் படிவதில்லை. (Lotus effect)

3. நனோ அளவில் தயாரிக்கப்படும் உயர்தர காலுறைகளில் நனோ அளவிலான வெள்ளித் துணிக்கைகள் கலக்கப்படுவதால் கிருமி நாசினிகளின் பண்பைப் பெறுகின்றது.

4. Nano Fibre மூலம் உருவாக்கப்படும் குண்டு துளைக்காத மேலங்கிகள் பாதுகாப்பதைத் தருகின்றது.

5. அழகு சாதனப் பொருட்களில் தயாரிக்கப்படும் களிம்புகள் தோலினூடு சென்று நீண்ட காலம் செயற்படல்.

6. உயர் வலிமையான பீங்கான் தரைஓடுகள் உறுதியானவை. கதிர் வீச்சைத் தாங்கக் கூடியவை.

7. நனோ வர்ணப் பூச்சு பூசுவதால் நீண்டகாலம் நிறம் மாறாமல் இருக்கும்.

8. கண்ணாடி மீது நனோ வர்ணப்பூச்சு பூசுவதால் விரைவில் அழுக்கடைவதில்லை.

9. நனோ உணரிகள் மூலம் வளிமண்டலத்திலுள்ள பயனற்ற வாயுக்களை உறிஞ்ச முடியும்.

10. Nanoporous filters இனூடு நீரை செலுத்தி அதிலுள்ள பற்றீரியா, நுண்ணங்கிகளை பிரித்தெடுக்க கூடியதாக இருத்தல்.

## <u>எரிபொருள் உற்பத்தியில்</u>

1. நனோ பதார்த்தங்களின் மேற்பரப்பளவு அதிகரிப்பதால் காபன் குழாயினூடாக ஐதரசனை சேமிக்க முடிதல்.

2. சூரிய கலங்களின் உள்ளக கடத்தாற்றை உயர்மட்டத்திற்கு கொண்டு வரல்.

3. லிதியம் நனோ கூட்டுப் பொருள் பயன்படுத்துவதால் மின்கலம் சக்தி இழக்காமலிருத்தல்.

3. Super Capacitor வாகனங்களின் மின்சக்தியை சேமிக்கும் பொருட்டு இணைக்கப்பட்டுள்ளது.

4. வெப்பக் கடத்திலியாக (Aerogel, Nano Foam)

## <u>மருத்துவத்துறையில்</u>

நனோ தொழிநுட்பவியலில் நனோ மருத்துவம்
நோய் கண்டறிதல்
நோய் தடுப்பின் பொருட்டு
நோய் சிகிச்சையின் பொருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நோயை இனங்காண நனோ மருத்துவம் பயன்படுகிறது (குருதிப்பரிசோதனை, இதயத்துடிப்பு, குரதி அமுக்கம்)

2. நோய் தடுப்பின் பொருட்டுத் தகாயங்களை மறைக்கும் Bandage சத்திர சிகிச்சை உபகரணங்களில் பூசப்படும் டைனேனியம் ஒட்சைட்டு, வெள்ளித் துணிக்கைகளும் பயன்படுகின்றன. அத்துடன் நனோ வடிகளில் உள்ள துவாரங்கள் வைரசுக்கள் வடிகப்பட்டு உடலிற் புகுவது தடுக்கப்படுகிறது.

**நனோ சிகிச்சையில்**

1. நீரிழிவு நோயை தடுக்க இன்சுலின் ஓமோன் அடங்கிய நுண் சாதனமொன்று உடலிற் பொருத்தி அந்த ஓமோன் உடலினுள் விடுவிக்கப்படும்.

2. கூடிய செயற்றிறன் சேர் பொருட்களின் நீரில் கரையும் தன்மையைக் கூட்டி குருதியினால் உறிஞ்சும் தன்மை இலகுவாக்க நனோ தொழிநுட்பம் பிரயோகிக்கப்படுகிறது. (Pain Killers)

3. உயிரியல் ரோபோக்கள் புற்று நோய்க்கலங்களில் உரிய மருந்தை செலுத்தி அக்கலங்களுக்கு மாத்திரம் நனோ சிகிச்சை அளிக்கும் மற்றுமொரு தானியங்குபொறியாகும். இது நடைமுறையிலில்லை.

4. செயற்கையான எலும்புகளை தயாரிக்க நனோ தொழிநுட்பம் பயன்படுகிறது. இயற்கை கனியமான அப்பதைற்றுக்களில் காணப்படும் கூட்டுப்பொருள் (Composite) பற்குழிகளை
அடைக்கவும், செயற்கை எலும்பு உற்பத்திக்கும் பயன்படுகிறது.

**<u>நனோ தொழிநுட்பத்தின் பாதிப்புகளும் தீர்வுகளும்</u>**

1. நனோ தொழிநுட்பத்தில், நனோ அளவுடைய சேர்வைகள், மூலக்கூறுகள் வளிமண்டலத்தை அடைகின்றன. இதனால் சுவாசப் பாதையில் நனோ துணிக்கை காரணமாக கெடுதலான சுகாதார விளைவுகளுள், சுற்றாடலும் மாசடைகின்றது.
2. நனோ அளவிலான போர் ஆயுதங்களின் உற்பத்தியால் ஏற்படக் கூடிய எச்சரிக்கைகள்.
3. இலத்திரனியற் கூறுகளின் அதீத உற்பத்தியினால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள்.
* நனோ பதார்த்தங்கள் பற்றி மக்களுக்கு தெளிவுப்படுத்தல்
* நனோ தொழிநுட்பத்தை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் கட்டுப்பாடுகளை வைத்தல்.
* ஆசனிக் போன்ற நடுநிலையான சூழல் மாசாக்கித் துணிக்கைகளுடன் பிணைப்பை ஏற்படுத்தி, மாசாக்கிகளை அகற்ற முடியும்.
* நனோ தொழிநுட்பத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி செயற்பட Centre of Respon sible Nanotechnology என்ற நிறுவனம் உள்ளது. (www.crnano.org)

நனோ தொழிநுட்பவியல் மிகப்பரந்த ஆய்வுக் கற்கையாகும். மேலதிக தகவல்களை இணையத்தள வலையமைப்பினூடு பார்வையிடலாம். நனோ தொழிநுட்பவியலானது அடுத்த கைத்தொழில் புரட்சிக்கு இட்டுச செல்ல முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமதி.கௌசல்யா சத்தியேஸ்வரன்
ஆசிரியர் - விஞ்ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

அறம் செய்ய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலகேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்
கண்டு ஒன்று சொல்லேல்
ஙப் போல் வளை
சனி நீராடு
ஞயம் பட உரை
இடம் பட வீடு இடேல்
இணக்கம் அறிந்து இணங்கு
தந்தை தாய் பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர் செய்
மன்று பறித்து உண்ணேல்
இயல்பு அலாதன செய்யேல்
அரவம் ஆட்டேல்
இலவம் பஞ்சில் துயில்
வஞ்சகம் பேசேல்
அழகு அலாதன செய்யேல்
இளமையில் கல்
அறனை மறவேல்
அனந்தல் ஆடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் பட வாழ்
கீழ்மை அகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்பது ஒழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோது ஆட்டு ஒழி
சக்கர நெறி நிரல்
சான்றோர் இனத்து இரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச் செய்
சேர் இடம் அறிந்து சேர்
சை எனத் திரியேல்
சொல் சோர்வு படேல்
சோம்பித் திரியேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ, நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம்
அரவோ, உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறையவர் பாகத்தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே

ஔவைப் பிராட்டியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பிக்கின்றோம் கோடானு கோடி நன்றிகள்

கருணையுடன் வருகை தந்து கனிவாய் சிறப்பித்த
பிரதம அதிதி,

அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள்

ஷத்ரூபி சிறப்புற உழைத்த தமிழ் இலக்கிய மன்றத்தினர்,
ஆசிரியர்கள், மாணவ மலர்கள்,
அன்புடன் ஆதரவு வழங்கிய பெற்றோர்,

அனுசரணையாளர்கள்,

சஞ்சுதா நடராஜா, சஹானா உவைஸ் (அட்டைப்படம்)

A.பிரபாங்கனி, உபாலி திசாநாயக்க (சித்திர ஆசிரியர்கள்)

இ. பிருந்தா, பி.சரோஜினி (ஆசிரியர்கள்)
முஷீனா முனீர், சௌமியா கனகஜோதி, K.சோஹினா (சேகரிப்பு)

சோ.ரமேஷ்குமார் (கணனி வடிவமைப்பு)

சிட்னி பிரின்டிங் கம்பனி பிரைவட் லிமிடட் - கண்டி (அச்சு பதிப்பகம்)

பின்னனி இசை, ஒளி, ஒலி, ஒளிப்படக்கலைஞர்கள்
நிழல்பட கலைஞர்கள் பாடசாலை பணியாளர்கள்



அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
நம் இதயம் கனிந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்


நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நல் எழில் பொழில் சீரணி
நலங்கள் யாவும் நிறை வான் மணி லங்கா
ஞாலம் புகழ் வளவயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா

நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதியேல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரமானாய்
நமதிளமையை நாட்டே
நகுமடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //

நமதாரருள் ஒளி வளமே
நறியமலர் என நிலவும்தாயே
யாமெலாம் ஒரு கருணை அனை பயந்த
எழில் கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண் விடுதலை வேண்டும்
மண் பயனுற வேண்டும்"



காதல் பெண்கள் கடைக் கண் பார்வையில்
காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கண்ணில் தெரியும் வானம்...
கையில் வசப்படட்டும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org